ஸ்ரீ:

# கைசிக மாஹாத்மியம்

(வராஹ புராணாந்தர்கதம்)

பராசர பட்டர் அருளிய வியாக்கியானத்துடன்

ஸாஹித்ய சிரோமணி

ஸ்தாநீகம். பார்த்தஸாரதி ஐயங்கார்

(ஸ்ரீரங்கம் - தேவஸ்தானம் லைப்ரேரியன்)

பூர்வ பீடிகை, உத்ஸவ நிரூபணம், டிப்பணி, அநுபந்தம்

இவற்றோடு வெளியிட்டது

மதராஸ் :

ஆர். ஆர். ப்ரிண்டிங் ஒர்க்ஸ், பெரம்பூர் பாரக்ஸ் போஸ்டு

0—8—0

ஈச்வர - துலா. நவ. 1937.

அநுபந்தங்கள் தனிப் புஸ்தகமாக வெளியாகும்.

# கைசிக மாஹாத்மியம்

---

## விஷய ஸூசிகை


1. பூர்வபீடிகை—

(1) கைசிக புராணமா? மாஹாத்மியமா?

(2) இந்த மாஹாத்மியம் எந்தப் புராணத்திலுள்ளது?

(3) கைசிக மாஹாத்மியம் என்றால் என்ன அர்த்தம்?

(4) கைசிக ஏகாதசி.

(5) கைசிக ஸம்பந்தம் ஏகாதசிக்கா? துவாதசிக்கா?

(6) கைசிக மாஹாத்மியத்தின் கதை.

(7) கைசிக மாஹாத்மியத்தின் ஸாரம்.

(8) கைசிக மாஹாத்மியத்தின் ஏற்றம்.

(9) பட்டரும் கைசிக மாஹாத்மியமும்.

(10) வராஹ புராணமும், வேதாந்த தேசிகரும்.

(11) பட்டருடைய க்ரந்தங்கள்.

(12) கைசிக மாஹாத்மிய புஸ்தகங்கள்.

2. கைசிகோத்ஸவ நிரூபணம்—

(1) ஸ்ரீரங்க கைசிகம்.

(2) ஆகம சாஸ்திரம்.

(3) ஸ்ரீரங்கத்துக்கு ஏற்பட்ட ஆகமம்.

(4) சாதுர்மாஸ்ய யோக நித்திரை.

(5) பஞ்சாங்கங்கள்.

(6) கைசிகம் தமிழ்தேச அனுஷ்டானம், வைஷ்ணவ விதி.

(7) துளஸீ விவாஹம்.

(8) உத்தானோத்ஸவம் செய்யவேண்டிய விதம்.

(9) ஸ்ரீரங்கத்தில் கைசிகோத்ஸவம் நடக்கும் விதம்.

 (1) பச்சை வட

 (2) பச்சை வடம் சாத்தும் விதம்.

 (3) 'திருக்குறுங்குடி' பாசுர விண்ணப்பம்.

 (4) பட்டர் கைசிக மாஹாத்மியம் வாசித்தல்.

(5) பெருமாள் புறப்பாடு.
(6) பச்சைக்கர்ப்பூர படியேற்றம்.
(7) பட்டர் பிரம்மரதம்.

(10) திருக்குறுங்குடி.

(11) திருக்குறுங்குடி கைசிகம் : ஏகாதசி திருமஞ்சனம்.
(1) கைசிக மண்டபம் எழுந்தருளுதல்.
(2) கைசிக நாடகம்.
(3) திருக்குறுங்குடிப் பாசுரம்.
(4) கைசிக புராணம்.
(5) கைசிக துவாதசி.
(6) ராத்திரி கருடஸேவை

(12) திருக்குறுங்குடி பாசுரங்களின் விவரம்.

பொதுத் தனியன்கள்.

3. கைசிக மாஹாத்மியம்
(மூலமும், வ்யாக்யானமும், டிப்பணியும்)

4. அநுபந்தம்—
தேசிகனுடைய ரஹஸ்ய சிகாமணி

---

ஸ்ரீ:

# 1. கைசிக மாஹாத்மிய பூர்வ பீடிகை

## 1. கைசிக புராணமா? மாஹாத்மியமா?—

மாஹாத்மியம் என்றே பெயர். இந்த கிரந்தம் கைசிகத்தின் மாஹாத்மியத்தையே சொல்லுகிறது. கைசிக புராணம்—என்னும் பெயர் பொருந்தாது. இது புராணத்திலிருப்பதால் கைசிகபுராணம் என்று வியவஹரிக்கப்படுகிறது. வ்யாக்யானத்தில் பட்டரும் இந்த க்ரந்தத்தை மாஹாத்ம்யம்—என்றே சொல்லுகிறார். ஆனல், பெரிய பண்டிதர்களும் கவிகளும் கைசிகபுராணம் என்றே தம்முடைய க்ரந்தங்களில் ப்ரயோகித்திருக்கிறார்கள். 'ஸ்ரீரங்கராஜ சரிதபாண"த்தில் "ஸ்ரோதும் புராணம் மயி கைசிகாங்கம்"—என்று சொல்லப்பட்டிருக்கிறது. கைசிகபுராணம்—என்னும் பெயரைக்கொண்டு இது ஏதாவது உபபுராணமோ என்று நினைக்கவேண்டாம். இது புராணத்தில் ஒரு அத்யாயமாயுள்ள மாஹாத்மியம்.

## 2. இந்த மாஹாத்மியம் எந்தப் புராணத்தி லுள்ளது?—

இது வராஹ புராணாந்தர்கதம். அதில் 48-வது அத்யாயம்—என்று பட்டர் வ்யாக்யானத்தோடுள்ள ஓலைப்புஸ்தகங்களிலும் அச்சுப் புஸ்தகங்களிலும் கடைசியில் காண்கிறது. வராஹபுராணம் பெங்கால் ஏஷ்யாடிக் ஸொஸைடியிலும் பம்பாய் வெங்கடேசுவர் ப்ரஸ்ஸிலும் அச்சிடப்பட்டிருக்கிறது. நம்தேசத்தில் 48-வது அத்யாயமாகச் சொல்லப்படும் கைசிக மாஹாத்மியம் பம்பாய் கல்கத்தா புஸ்தகங்களில் 139-வது அத்யாயமாகக் காண்கிறது. 48-ம் அத்யாயமான கைசிக மாஹாத்மியம் 139-ம் அத்யாயத்துக்குப் போகும்படியாக இடையில் பல அத்யாயங்கள் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டனவாகத் தெரிகிறது. 1893-ம் வருஷத்தில் பெங்கால் ஏஷ்யாடிக் ஸொஸைடிக்காக வராஹ புராணத்தை அச்சிட்ட ஹ்ருஷீகேச சாஸ்திரி—

த்ரி:ஸப்த ஷட் க்ஷிதி மிதே ந்ருபவிக்ரமஸ்ய
காலே கதே பகவதோ ஹரிபோதகஸ்ய
வீரேச்வரேண ஸஹ மாதவபட்டநாம்நா
காச்யாம் வராஹகதிதம் லிகிதம் புராணம்

என்னும் சுப்லாகத்தினுல் காசியில் 1621-ம் 'ஸம்வத்தில்.' மாதவ பட்டனும் வீரேசுவரனுமாகச் சேர்ந்து வராஹ புராணத்தை இப்போதைய நிலைமையில் எழுதினதாக ஊஹிக்கிருர்.

நம்தேசத்தில் பட்டருடைய வ்யாக்யானத்தோடு கிடைக்கும் கைசிக மாஹாத்மியத்துக்கும் பம்பாய் கல்கத்தா புஸ்தகங்களிலுள்ள 139-வது அத்யாயத்துக்கும் அதிக வித்யாஸம் காண்கிறது. அந்த 139-ம் அத்யாயத்துக்கு ஸௌகரவ க்ஷேத்ர மாஹாத்மியம் என்று பெயரேயன்றி கைசிகமாஹாத்மியம் என்று பெயரல்ல. ஸௌகரவ க்ஷேத்ரம் என்பது கைசிக மாஹாத்மியத்தின் வ்ருத்தாந்தம் நடந்த திருக்குறுங்குடி திவ்யதேசம்தான். ஆனுல், அந்த ஸௌகரவ க்ஷேத்ர மாஹாத்மியத்தில் கைசிகம்—என்ற பெயர்கூட இல்லை. ஸௌகரவ க்ஷேத்ர மாஹாத்மியத்திலுள்ள கதைமட்டும் கைசிக மாஹாத்மியத்திலுள்ள சண்டாள ப்ரம்மரக்ஷஸ் ஸம்வாதத்தோடு ஒத்திருக்கிறது.

ஸௌகரவ க்ஷேத்ர மாஹாத்ம்யம்கூட இதன் கடைசியில் சேர்க்கப்பட்டிருக்கிறது. நம்தேசத்தில் பட்டர் ஆதரித்த 'கைசிக மாஹாத்மியத்துக்கும் உத்த்ரதேசத்து ஸௌகரவ க்ஷேத்ரமாஹாத்மியத்துக்குமுள்ள வித்யாஸத்தை கவனித்துக் கொள்க.

சென்னை ராஜாங்கத்தார் சேகரித்திருக்கும் பழைய கையெழுத்துப் புஸ்தகங்களில் D. 2060 முதல் —62 நம்பருள்ள வராஹபுராண புஸ்தகங்கள் மூன்று இருக்கின்றன. இவற்றில் கடைசி இரண்டும் அபூர்ணம். முதல் புஸ்தகம்தான் பூர்ணமாயிருக்கிறது. இதில் ஸௌகரவ க்ஷேத்ரமாஹாத்ம்யம் 155-ம் அத்யாயமாயிருக்கிறது. இந்த அத்யாயம் உத்தரதேச புஸ்தகத்தை அனுஸரித்திருக்கிறதேயன்றி நம்தேசத்திலுள்ள கைசிக மாஹாத்ம்யத்தை அனுஸரித்தில்லை. சென்னை ராஜாங்கத்தாரின் கையெழுத்துப் புஸ்தகசாலையிலுள்ள வராஹ புராணம் 155-ம் அத்யாயம் கடைசியில் சேர்க்கப்பட்டு உத்தரதேச வராஹ புராணத்தின் 139-ம் அத்யாயத்திலுள்ள பாட பேதங்கள் கீழே குறிக்கப்படுகின்றன.

## 3. கைசிக மாஹாத்ம்யம் என்றுல் என்ன அர்த்தம்?—

ஸங்கீதத்தில் கைசிகம் என்று ஒரு ராகம் உண்டு. அந்த ராகத்தின் மாஹாத்ம்யத்தை இந்த கிரந்தம் 'சொல்லுகிறது. கைசிகம் என்னும் பதத்தின் ஸ்வரூபம் தெரியாமல் "கௌசிக புராணம்,

கௌசிக மாஹாத்ம்யம், கௌசிக ஏகாதசி'' என்று ... சொல்லு வார்கள். கைசிக ராகத்தின் மாஹாத்மியத்தைச் சொல்லும் இந்த அத்யாயம் ஸங்கீத க்ரந்தமல்ல. இது கைசிக ராகத்தில் பாடின வனுடைய வ்ருத்தாந்தம் பலன்—முதலியவற்றைச் சொல்லுகிறது; கைசிக சப்தார்த்தத்தைக் கடைசியிலுள்ள நிருக்தியில் காண்க.

## 3. கைசிக ஏகாதசி—

பஞ்சாங்கத்தில் கார்த்திகை சுக்ல ஏகாதசியன்று கைசிக ஏகாதசி எனக் காண்கிறது. அந்த ஏகாதசிக்கும் கைசிகத்துக்கும் என்ன ஸம்பந்தம் என்றால்—

1. கைசிக ஸ்வரத்தில் பாடவேண்டிய ஏகாதசி கைசிக ஏகாதசி.

2. கைசிக ஸ்வரத்தில் ஒரு சண்டாளன் பாடின ஏகாதசி கைசிக ஏகாதசி.

3. கைசிக கானத்தினால் ஒரு பிரம்மராக்ஷஸ்ஸுக்கு ப்ராம்மண்யம் கிடைத்த ஏகாதசி கைசிக ஏகாதசி.

4. கைசிக மாஹாத்மியம் படிக்கவேண்டிய ஏகாதசி கைசிக ஏகாதசி—என்று இப்படி நாலு ஸம்பந்தம் இருக்கிறது கைசிகத்துக் கும் ஏகாதசிக்கும்.

(1) அன்றைதினம் கைசிக ஸ்வரத்தில் பாடவேண்டுமென்று

யஸ்து காயதி பக்த்யா வை கைசிகம் மம ஸம்ஸதி
ஸ தாரயதி துர்காணி ஶ்வபாகோ ராக்ஷஸம் யதா

என்னும் கைசிக மாஹாத்ம்ய சுலோகத்தினாலேயே பகவான் ஆக்ஞா பிக்கிறார்.

(2-3) அன்று சண்டாளன் கைசிக கானம் பண்ணினதும், அதனால் பிரம்மராக்ஷஸ்ஸின் தோஷத்தைப் போக்கினதும்

யன்மயா பஶ்சிமம் கீதம் ஸ்வரம் கைசிகமுத்தமம்
பலேந தஸ்ய பத்ரம் தே மோக்ஷயிஷ்யாமி கில்பிஷாத்

என்ற சுலோகத்தினால் தெரிகிறது.

(4) அன்று கைசிக மாஹாத்மியத்தைப் படிக்க வேண்டுமென்று

ஏதத்கீதபலம் தேவி கௌமுதத்வாதசீம் புநः
யஸ்து காயதி ஸ ஸ்ரீமாந் மம லோகஞ்ச கச்சதி

என்னும் சுலோகத்தினால் விதிக்கப்படுகிறது.

## 5. கைசிக ஸம்பந்தம் ஏகாதசிக்கா? துவாதசிக்கா?—

மேலே உதாஹரித்த "ஏதத்கீதபலம்"—என்னும் சுலோகத்தால் கைசிக மாஹாத்ம்யம் படிக்கவேண்டியது துவாதசியில் என்று தெரிகிறது.

சண்டாளன் பகவானிடம் போய்ப் பாடினதுகூட துவாதசியிலேயே என்று

கௌமுதஸ்ய து மாஸஸ்ய த்வாதஸ்யாம் சுக்லபக்ஷகே
ஸுப்தே ஜநே கதே யாமே விஷ்ணுமாதாய நிர்யயௌ

என்னும் சுலோகத்தினால் தெரிகிறது. ஆகையால், கைசிக ஸம்பந்தம் துவாதசிக்கேயன்றி ஏகாதசிக்கல்ல. ஆனால், துவாதசியன்று செய்ய வேண்டிய கைசிக கானத்துக்கும், கைசிக மாஹாத்ம்யத்தைப் படிப்பதற்கும் பூர்வாகங்மான உபவாஸம் ஜாகரணம் (தூங்காமலிருத்தல்) முதலியவைகள் ஏகாதசியிலிருந்தே ஆரம்பமாவதால் ஏகாதசிக்கும் கைசிக ஸ்ம்பந்தம் ஏற்பட்டது. இங்கே துவாதசி என்பதற்கு துவாதசி உதியத்தில் என்று அர்த்தம். துவாதசி உதயத்தில் ஆக வேண்டிய காரியம் ஏகாதசி ராத்திரியே ஆரம்பமாவதால் ஏகாதசி கூட கைசிக சப்தத்தோடு வியஹரிக்கப்படுகிறது.

## 6. கைசிக மாஹாத்மியத்தின் கதை—

தெற்கே திருநெல்வேலி ஜில்லாவில் மஹேந்திர பர்வதத்துக்கு ஸமீபத்தில் ஸித்தாச்ரமம்—என்று ஒரு க்ஷேத்ரம் இருக்கிறது, அதற்குத் திருக்குறுங்குடி என்றும் பெயர். அது வைஷ்வை திவ்ய தேசங்களுள் ஒன்று.

முன்பு இந்த ஊரிலிருந்த ஒரு சண்டாளன் கார்த்திகை சுக்ல ஏகாதசி ராத்திரி தூங்காமலிருந்து பகவானைப் பாடுவதற்காக கோயிலுக்குப் போய்க் கொண்டிருந்தான். வழியில் பசியால் வருந்திக் கொண்டிருந்த பிரம்மரக்ஷஸ் ஒன்று இவனை விழுங்க வந்தது. பாகவதோத்தமமான சண்டாளன் சரீரத்தில் ஆசையில்லாதவனாயிருந்தாலும், பெருமாளைப் பாடிப் புகழாமலே உயிரைவிட நேர்ந்ததற்கு துக்கித்து, பகவத்ஸன்னிதியில் பாடிவருமளவும் அவகாசம் கொடுக்க வேண்டுமென்று ப்ரம்மரக்ஷஸ்ஸை ப்ரார்த்தித்தான். சண்டாளன் திரும்பிவருவான்—என்று பிரம்மரக்ஷஸ் நம்பவில்லை. "நான் திரும்பி வராவிடில் பரதார கமனம் செய்த தோஷத்தில் போகிறேன்; பங்க்தி

வஞ்சனை செய்த தோஷத்தில் போகிறேன்" என்று சண்டாளன் பல தோஷங்களைச் சொல்லி, கடைசியில்—

"வாஸுதேவம் பரித்யஜ்ய யேந்யம் தேவமுபாஸதே
தேஷாம் கதிம் ப்ரபத்யே வை யத்யஹம் நாகமே புந:
நாராயணமதாந்யைஸ்து தேவைஸ்துல்யம் கரோதி ய:
தஸ்ய பாபேந லிப்யேயம் யத்யஹம் நாகமே புந:

"நான் திரும்பி வராவிடில் வாஸுதேவனை விட்டு இதர தேவதைகளை உபாஸிப்பவர்களின் கதியை அடைகிறேன்; நாராயணனை இதர தேவதைகளோடொக்க நினைப்பாரின் பாபத்தில் சேருகிறேன்"—என்று பிரதிக்ஞை செய்தான். சண்டாளனுக்குள்ள தேவதாந்தர உபாஸனையும் தேவதாந்தர ஸாம்ய புத்தியும் கலசாத வைஷ்ணவத்தைப் பார்த்து பிரம்மரக்ஷஸ்ஸு நம்பிக்கை கொண்டு சண்டாளனை விட்டுவிட்டது. சண்டாளன் பகவத் ஸன்னிதிக்குப் போய்ப்பாடி பிரதிக்ஞை செய்தபடியே பிரம்மரக்ஷஸ்ஸினிடம் வந்து சேர்ந்தான். பிரம்மரக்ஷஸ்ஸு சண்டாளனைப் பார்த்து—"நீ பிழைக்க விரும்பினால் நீ பாடின பாட்டின் பலனை எனக்குக் கொடு"—என்றது. சண்டாளன் ஸம்மதிக்கவில்லை. கீதபலன் எல்லாம் கொடுக்க முடியாவிடில், பாதியாவது கொடு என்று கேட்டது பிரம்மரக்ஷஸ்ஸு. ஒரு ஜாமத்தில் பாடின பாட்டின் பலனையாவது கொடு என்று கேட்டும், சண்டாளன் சரீரத்தை இழக்க ஸித்தமாயிருந்தானேயன்றி பாட்டின் பலனை விட விரும்பவில்லை.

பிரம்மரக்ஷஸ்ஸு—ஒரு பாட்டின் பலனையாவது தந்து என்னை இந்த ஆபத்திலிருந்து விடுவிப்பாயாக.

சண்டாளன்—உனக்கு இந்த ஜன்மம் உண்டாகும்படியாக நீ செய்த தோஷம் என்ன?

பிரம்மரக்ஷஸ்ஸு—நான் முன்பு சரக கோத்ரத்தில் பிறந்தவன்; ஸோம சர்மா என்னும் பிராம்மணன். ஸூத்ர மந்த்ரங்களைப் பாதுகாக்காமலே பிரஷ்டனாய் யாகமொன்று ஆரம்பித்தேன். அநர்ஹனாயிருந்து யாகம் செய்ய ஆரம்பித்ததால் வயிற்றில் சூலை வியாதி உண்டாகி யாகம் பூர்த்தியாகு முன்னரே நான் இறந்தேன். யாகம் பூர்த்தியாகாததால் இந்த ஜன்மத்தை அடைந்தேன்.

சண்டாளன்—யந்மயா பஸ்சிமம் கீதம் ஸ்வரம் கைசிகமுத்தமம்
பலேந தஸ்ய பத்ரம் தே மோக்ஷயிஷ்யாமி கில்பிஷாத்

நின். கடைசியில் பாடின கைசிக கானத்தின் பலத்தினால் உன் தோஷத்தைப் போக்கடிக்கிறேன் —என்றான்.

உடனே பிரம்மரக்ஷஸ்ஸு ப்ராம்மணனானான்.

## 7. கைசிக மாஹாத்மியத்தின் ஸாரம்—

பகவானுக்கு உகப்பை உண்டாக்கும் உபாய மெல்லாவற்றிலும் கானமே சிறந்ததென்பதும் எளிதென்பதுமே இதில் ஸாரம். இதை ஒரு ஐதிஹ்யமூலமாகக் காட்டுகிறது இந்த மாஹாத்மியம்.

## 8. கைசிக மாஹாத்மியத்தின் ஏற்றம்—

கைசிக கானம் பண்ணவேண்டுமென்றும் கைசிக மாஹாத்மியத்தைப் படிக்கவேண்டுமென்றும் இரண்டு காரியங்களை பகவான் இந்த மாஹாத்மியத்தில் விதிக்கிறார். கைசிக கானத்துக்குக் கால நியமமில்லாமல் "கைசிகம் மம ஸம்ஸதி"—என்று தேச நியமத்தைமட்டும் சொல்லுவதால், கைசிக கானம் எப்போழுதேனும் பகவத் ஸன்னிதியில் செய்யவேண்டுமென்று ஏற்படுகிறது. கைசிக மாஹாத்மிய படனத்துக்கு தேச நியமமில்லாமல் "கௌமுத த்வாதசீம் புநஃ" —என்று எங்கேயாகிலும் கார்த்திகை சுக்ல த்வாதசியில் மாஹாத்மியத்தைப் படிக்கவேண்டுமென்று ஏற்படுகிறது. இவ்விரண்டு விதிகளின் பலனும் வித்யாஸப்படுகிறது. கைசிககானம் பண்ணுகிறவனுக்கு "ஸ தாரயதி துர்காணி" ஆபத்துக்களிலிருந்து மீட்பான் என்று இத்தனையே பலன். கைசிக மாஹாத்மியத்தைப் படிப்பவன் "மம லோகஞ்ச கச்சதி" பகவல்லோகத்தைச் சேருவான்—என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆபத்துக்களிலிருந்து மீட்கும் கைசிக கானத்தைவிட பகவல்லோகம் சேர்ப்பிக்கும் கைசிக மாஹாத்மிய படனம்தான் விசேஷம். இது தவிர, கைசிகராகம் பாடுவது பாடவல்லார்க்கே ஸாத்யம். கைசிக மாஹாத்மியம் படிப்பது யாவர்க்குமே எளிது. ஆகையால், பகவல்லோக ப்ராப்திக்காக கைசிக துவாதசியில் கைசிக மாஹாத்மியம் படிக்கும் லகுவான உபாயத்தை போதிப்பதே இந்த மாஹாத்மியத்துக்குள்ள ஏற்றமாகும்.

## 9. பட்டரும் கைசிக மாஹாத்மியமும்—

இந்த மாஹாத்மியத்தின் பெருமையை அறிந்தவர் கூரத்தாழ்வானுடைய திருக்குமாரரான பட்டர் ஒருவரே. பட்டருக்கு முற்பட்ட ரிஷிகள், ஆழ்வார்கள், ஆசாரியர்கள் ஒருவரும் கைசிக

மாஹாத்மியத்தின் மர்மத்தை அறியவில்லை யென்று தோன்றுகிறது. அவர்களில் ஒருவராவது தம்முடைய கிரந்தங்களில் இந்த மாஹாத்மியத்தை ப்ரஸ்தாவிக்கவில்லை. திருக்குறுங்குடியை மங்களா சாஸனம் செய்த ஆழ்வார்கள்கூட அங்கே நடந்த கைசிக வ்ருத்தாந்தத்தைத் தம்முடைய பாடல்களில் காட்டவில்லை. ஒரே அத்யாயமாயுள்ள கைசிக மாஹாத்மியமென்னும் ஒரே ரத்தினத்தைப் புராணக்கடலில் மூழ்கி, தேடி எடுத்தவர் பட்டர் ஒருவரே.

தான் கண்டெடுத்த கைசிக மாஹாத்மியத்தைத் தமிழில் ஆச்சரியமான அவதாரிகையும் வியாக்யானமும் எழுதி பட்டர் ரக்ஷித்தருளினார். பட்டர் அவதாரிகையில் மிக்க ரஹஸ்யமான சாஸ்திர விஷயங்களையும் ஸம்ப்ரதாய விஷயங்களையும் வெளியிட்டருளுகிறார். பட்டருடைய அவதாரிகையிலுள்ள விஷயங்களின் சுருக்கம் பின்வருமாறு.

1. புராணங்களே வேதோபப்ரும்ஹணங்களில் இதிஹாஸங்களைவிட ஸ்வதந்த்ர ப்ரமாணங்களாகையால் உத்க்ருஷ்டங்களென்றும்;

2. அவதாரங்களில் வராஹாவதாரம்தான் (1) ஞான ஸ்வரூபம், (2) ஸம்யக் ஞானோபகாரகம், (3) க்ருபாதிசயத்தையுடையது, (4) ரக்ஷகத்வ பூர்த்தியுள்ளது, (5) உத்தாரகமான ரக்ஷகத்வமுள்ளது, (6) வாத்ஸல்யாவிநாபூதமான பித்ருத்வமுள்ளது—என்று ஆழ்வார்களின் மதமென்றும்;

3. பிரளய ஸமுத்ரத்தில் மூழ்கிப்போன பூமிதேவியை அதிலிருந்து எடுத்து அவளுடைய சோகத்தைத் தீர்த்துவைத்தும், ஸம்ஸாரார்ணவத்தில் மூழ்கிக் கிடக்கும் தன் பிரஜைகளின் துக்க நிவ்ருத்திக்கொரு ஸுகரோபாயமும் தெரியாமல் துக்கித்திருக்கிற அவளுடைய சோகம் தீருவதற்காக அவதரித்ததாகையாலே வராஹ புராணமே எல்லாப் புராணங்களிலும் சிரேஷ்டமென்றும்;

4. கானம் பகவத்ப்ராப்திக்கு எளிதான உபாயமென்று பகவானே இந்த கைசிக மாஹாத்மியத்தில் பூமிப்பிராட்டிக்கு உபதேசித்தார்; அந்த பூமிப்பிராட்டியே ஆண்டாளாக அவதரித்து கானத்தினலேயே பகவானை அடைந்தாள்;

என்ற இந்த நாலு ரஹஸ்யங்களும் அவதாரிகையில் பட்டரால் வெளியாகின்றன. இப்படி பட்டர் அவதாரிகையில் நிர்வாஹம்

செய்து, மாஹாத்மியத்துக்கும் சுலோகந்தோறும் வ்யாக்யானம் அருளிச்செய்திருக்கிறார். அந்த க்ரந்தம் முழுவதும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அவதாரிகையிலும் வ்யாக்யானத்திலுமுள்ள விசேஷங்கள் அந்தந்த இடங்களிலேயே காட்டப்படும்.

பட்டர் இந்த மாஹாத்மியத்துக்கு அவதாரிகை வியாக்யானங்கள் எழுதும் பண்டித க்ருத்யத்தோடு மட்டும் நிற்கவில்லை; இந்த மாஹாத்மியத்தைக் கார்த்திகை சுக்ல த்வாதசியில் படிக்கவேண்டுமென்ற பகவதாக்ஞையில் விச்வாஸம் பிறந்து அப்படியே ஆசரிக்கலானார். பகவானுடைய கட்டளைப்படி பட்டர் இந்த மாஹாத்மியத்தை ஏதேனுமோரிடத்திலிருந்து படித்துவிடாமல், "பன்றியாம் தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனார்"—என்று வராஹாவதாரம் எடுத்த ரங்கநாதன்—என ஆண்டாளால் தீர்மானிக்கப்பட்ட நம்பெருமாளுக்கே தம்முடைய அவதாரிகை வியாக்யானங்களோடு படித்துக்காட்டினார். நம்பெருமாளும் மிகவுகந்து தாம் வராஹாவஸ்தையியில் கைசிக மாஹாத்மியம் படிப்பவனுக்குக் கொடுத்த வரத்தின்படியே அன்றைத்தினத்திலேயே பட்டரை இந்த லீலாவிபூதியிலிருந்து நித்யவிபூதியில் சேர்த்துக்கொண்டார்.

வராஹப் பெருமாள் பூமிப்பிராட்டிக்கு உபதேசித்த ஸங்கீரோபாயமான கானத்தை அனுஷ்டித்து ஆண்டாள் பெருமாளை லபித்தாள்—என்னும் ரஹஸ்யத்தை யறிந்த பட்டர் ஆண்டாள் கானத்தை அனுஷ்டித்தாற்போல, தாமும் இந்த மாஹாத்மிய படனத்தை அனுஷ்டித்தார். ஆண்டாள் கானத்தையே உபாயமாகப்பற்றினாள்; பட்டர் இந்த மாஹாத்மியத்தையே உபாயமாகப் பற்றினார். ஆண்டாளுக்கு கானத்தினாலேயே பகவானை விட்டுப் பிரிந்த துக்கம் நீங்கி பகவான் கிடைத்தார்; பட்டருக்கு இந்த மாஹாத்மிய படனத்தினாலேயே பரமபதம் லபித்தது. ஆண்டாளுக்கு உபகரித்தது பகவத் விஷயமான கானம்; பட்டருக்கு உபகரித்தது பாகவதோத்தமனான நம்பாடுவான் விஷயமாயுள்ள கைசிக மாஹாத்மியம். ஆகையால், இந்த மாஹாத்மியத்துக்கு பட்டரே வ்யாக்யாதாவும், அனுஷ்டாதாவும் ப்ரவர்த்தகருமாவார். உத்தான த்வாதசி யென்னும் கார்த்திக சுக்ல துவாதசி உதயத்தில் சாதுர்மாஸ்ய யோக நித்ரையிலிருந்து எழுந்திருக்கும் பகவானுக்கு முகோல்லாஸமாகப் புண்ய கதைகளைப் படித்து, கீத ந்ருத்யங்களைச் செய்து, உத்தானோத்ஸவம் செய்ய வேண்டுமென்று ஆகமங்கள் விதிக்கின்றன. இந்த விதிப்

படி அன்று படிக்கவேண்டிய புண்ய கதைகளின் ஸ்தானத்தில், அன்றைதினமே நடந்ததாய், பகவதாக்ஞைபின்படி அன்றைய தினமே படிக்கவேண்டியதாயுமுள்ள இந்த கைசிக மாஹாத்மியத்தை அவதாரிகா வ்யாக்யானங்களோடுகூட பட்டர் படித்து ப்ரவ்ருத்திப் பித்தார். பட்டருக்கு முன்பு உத்தானைத்ஸவத்தில் விஹிதமான புண்ய கதா படனத்தில் ஏதேனுமொரு புண்ய கதை படிக்கப்பட்டிருக்கும். கைசிக மாஹாத்மியம் உத்தானைத்ஸவத்தில் பகவத் ஸன்னிதியில் படிக்கத் தகுந்ததென்று ப்ரவர்த்திப்பித்தது பட்டரே. பட்டர் ப்ரவர்த்திப்பித்த ப்ரகாரமே இன்றைக்கும் ஸ்ரீரங்கத்தில் உத்தானைத்ஸவத்தில் பட்டர் ஸந்ததியாரால் கைசிக மாஹாத்மியம் அவதாரிகா வ்யாக்யானங்களோடு படிக்கப்படுகின்றன. ஆகையால், பட்டர் அனுக்ரஹித்ததாய், அனுஷ்டித்ததாய், ப்ரவர்த்திப்பித்ததுமாயுள்ள இந்த கைசிக மாஹாத்மியம் பட்டர் திருவடிகளான ஸகல வைஷ்ணவர்களுக்கும் ஆதரணீயமாகிறது.

## 10. வராஹ புராணமும் வேதாந்ததேசிகனும்—

பட்டர் வராஹாவதாரத்தின் பெருமையை ஸ்தாபித்து கைசிக மாஹாத்மியத்தின் ஸாரத்தை வெளியிட்டாற்போல, வேதாந்த தேசிகரும் வராஹ சரமசுலோக ஸாரத்தை வெளியிட்டார். ரஹஸ்ய சிகாமணி வராஹசரமச்லோக விஷயம். சரம சுலோகத்துக்கு வியாக்யானமருளும் வியாஜமாக தேசிகன் வராஹாவதாரத்தின் பெருமையை பட்டர் காட்டின வழியையே பின்பற்றி அவதாரிகையில் மிகவும் ரஸமாக விசேஷப்படுத்தி ஸ்தாபித்திருக்கிறார். கைசிக மாஹாத்மியத்தை பட்டரின் அவதாரிகை வியாக்யானங்களோடு அனுபவிக்கும்போது அந்த அவதாரிகையிலுள்ள விசேஷங்களையும் வெளிப்படுத்தும்படியாக தேசிகன் அருளிச்செய்த வராஹ சரமச்லோக வ்யாக்யான அவதாரிகையையும் அனுபவிக்க வேண்டியது அவசியம். ஆகையால், தேசிகனுடைய ஸ்ரீஸூக்தியும் இதில் அனுபந்தமாக சேர்க்கப்பட்டிருக்கிறது. அதிலுள்ள விசேஷங்களும் அதிலேயே காட்டப்படும்.

## 11. பட்டருடைய கிரந்தங்கள்—

1. ஸ்ரீரங்கராஜஸ்தவம்
2. ஸ்ரீகுணரத்னகோசம்
3. ஸ்ரீரங்கநாதாஷ்டகம்
4. ஸஹஸ்ரநாம பாஷ்யம்

5. கைசிகமாஹாத்மிய வ்யாக்யானம் 8. லக்ஷ்மி கல்யாணம்
6. திருநெடுந்தாண்டக வ்யாக்யானம் 9. சில முக்தகங்கள்
7. திருமஞ்சன சுலோகங்கள் 10. அஷ்டச்லோகி

இவற்றில் லக்ஷ்மீ கல்யாணம் தேசிகனுல் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் எடுக்கப்பட்ட சுலோகமூலமாகத்தான் தெரிகிறது. இந்த க்ரந்தம் இதுவரையிலும் வெளிவரவில்லை யாகையால் இப்போதுள்ள ஒருவருக்கும் தெரியாது.

நம்பெருமாள் திருமுன்பே அத்யாபகர்களால் ஸ்ரீரங்கராஜ ஸ்தவம் ஸ்ரீகுணரத்னகோசம் இரண்டும் ஸேவிக்கப்படுகின்றன. திருமஞ்சன சுலோகங்களும் கைசிக மாஹாத்மியமும் பட்டர் ஸந்ததியாராலேயே பெருமாள் திருமுன்பே ஸேவிக்கப்படுகின்றன. திருமஞ்சன சுலோகங்களுக்கு பட்டர் தாமே வியாக்யானம் அருளிச்செய்திருக்கிறார். அவை வியாக்யான ஸஹிதமாகவே பெருமாளிடம் ஸேவிக்கப்படுகின்றன. இந்த சுலோகங்களில் "த்வம் மே ஹம் மே"—என்னும் ஒரு சுலோகம் மட்டும் உலகத்தார்க்குத் தெரியும். அந்த சுலோகத்துக்கு வியாக்யானம் கூட வெளியாகவில்லை. மற்றை சுலோகங்களும் வியாக்யானங்களும் பட்டர் திருமாளிகைகளிலும், அவர் ஸந்ததியாரின் வாக்கிலும்தான் இருக்கின்றன. திருமஞ்சன சுலோகங்களை நம்பெருமாளுடைய திருமஞ்சன ஸமயம் தவிர மற்றை ஸந்தர்பங்களில் ஒருவரும் அனுபவிக்கமுடியாது.

கைசிக மாஹாத்மியம்மட்டும் வெளியாகிவிட்டது. இது பகவதாக்ஞையின்படி கார்த்திகை சுக்ல ஏகாதசியன்று எல்லாராலும் எல்லா ஸன்னிதிகளிலும் படிக்கும்படியாக ஏற்பட்டதால் லோகோஜ்ஜீவனார்த்தமாக வெளியானதுபோலும்!

## 12. கைசிக மாஹாத்மிய புஸ்தகங்கள்—

இப்பொழுது கைசிக மாஹாத்மியத்தை நன்றாக சோதித்து இவ்வளவு விஸ்தாரமாக அச்சிடும் இந்த ப்ரயத்னத்தில் ஆதாரமாயுள்ள புஸ்தகம் யாதென்றும் தெரிவித்துக்கொள்கிறோம். கைசிக மாஹாத்மியத்தின் ஓலை ப்ரதிகள் ஏராளமாக இருக்கின்றன. விஷ்ணுகோயில் உள்ள ஒவ்வொரு ஊரிலும் கைசிக மாஹாத்மியம் பட்டர் வ்யாக்யான ஸஹிதமாக இருக்கிறது. சென்னை கையெழுத்துப் புஸ்தகசாலையிலும் சில ப்ரதிகள் இருக்கின்றன. 66 வருஷத்துக்கு முற்பட்ட ஆங்கீரஸ வருஷத்தில் திருக்குடந்தையாரால் கைசிக

மாஹாத்மியம் பட்டர் வியாக்யானத்தோடு அச்சாகி யிருக்கிறது. திருநெல்வேலி மேல்வீடு ரங்கநாத பிள்ளையால் 1905-ம் வருஷத்தில் "ஸ்ரீ ஜயந்தி—கைசிக ஏகாதசி மாஹாத்மியம்"—என்று பெயருள்ள ஒரு புஸ்தகம் அச்சிடப்பட்டிருக்கிறது. இதில்

(1) ஸ்ரீஜயந்தி மாஹாத்மியம் (2) கைசிக ஏகாதசி மாஹாத்மியம், கண்ணன் ஸ்துதி—இவ்விரண்டு கிரந்தங்களோடு

(1) கைசிகம் என்ற பண் விருத்தாந்தம்

(2) திருக்குறுங்குடிப் பாசுரங்கள்

(3) திருமங்கையாழ்வார், உடையவர், மணவாளமாமுனி இவர்கள் திருக்குறுங்குடியை மங்களாசாஸனம் செய்த காலமும், விவரமும்.

(4) திருக்குறுங்குடி ஜிய்யர் மடம் திருமுடிபடைவு

(5) வானமாமலை ஜிய்யர் மடம் திருமுடியடைவு

(6) திருக்குறுங்குடி கோயிலிலேயே உள்ளவரும், பக்கம் நின்ற சிவனுர் என்று ஆழ்வாரால் சொல்லப்பட்டவருமான சட்டநாதருடைய வரலாறு—இவ்வளவு விஷயங்கள் உள்ளன.

இதிலுள்ள கைசிக மாஹாத்மியம் மூலத்தை அனுஸரித்தாவது, பட்டருடைய வியாக்யானத்தை அனுஸரித்தாவது இல்லை. சண்டாள ப்ரம்மரக்ஷஸ் ஸம்வாதத்தையே யாரோ தமக்குத்தோன்றிய முறையில் எழுதிவெளியிட்டதுபோலத் தெரிகிறது. ஸ்ரீவைகுண்டம் பெரிய நம்பி வகுளபூஷணாசாரியார் ஸ்வாமி இந்தப் புஸ்தகத்தைப் பார்வையிட்டதாகவும் தெரிகிறது. கைசிக மாஹாத்மியம் மூலத்தையும், பட்டர் வியாக்யானத்தையும் சேர்த்துக்கொண்டு யாரோ எழுதினதாக இருந்தாலும், அதில் சில ரஸமான விஷயங்கள் இருக்கின்றன. அவைகளும் சுருக்கமாக, அனுபந்தத்தில் சேர்க்கப்படுகின்றன.

இப்படி கைசிக மாஹாத்மிய புஸ்தகம் பட்டர் வியாக்யானத்தோடு பல ப்ரதிகள் இருப்பதால் இவை எல்லாவற்றையும் பார்த்து சோதித்து வெளியிடவேண்டிய அவசியமில்லை. அது அஸாத்யமும் கூட. புஸ்தகங்ளில் எழுத்துப்பிழை தவிர பாடங்களில் விசேஷமான வித்தியாஸமும் உண்டு. ஆகைபால், நாம் இன்ன புஸ்தகத்தை ஆதாரமாகவைத்துக் கொண்டோமென்று பிறகு தெரிவிக்கிறோம்.

---

# 2. கைசிகோத்ஸவ நிரூபணம்

## 1. ஸ்ரீரங்க கைசிகம்—

நம்பெருமாள் கைசிக மாஹாத்மியம் கேட்டு பட்டருக்கு மேல் வீடு தந்த வைபவம் இன்றைக்கும் ஸ்ரீரங்கத்தில் அனுகரிக்கப்படுகிறது. பட்டருக்காக நடப்பது உத்ஸவத்தின் விமரிசை மட்டுமே. இப்பொழுது கைசிகோத்ஸவம் என்று நடக்கும் உத்தானோத்ஸவத்துக்கு ஆகமவிதியே உண்டாகையால் பட்டர் காலத்துக்கு முன்பே உத்ஸவம் உண்டு.

## 2. ஆகம சாஸ்திரம்—

கோயில்களைப்பற்றிய சாஸ்திரம் ஆகமம் எனப்படும். அது வைஷ்ணவாகமம் சைவாகமம் என்று இரண்டு விதம். வைஷ்ணவாகமம் பாஞ்சராத்ரம் வைகானஸம்—என்று இரண்டு. விஷ்ணு ஆலயங்களில் சில பாஞ்சாரத்ர ஆகமப்படி; சில வைகானஸ ஆகமப்படி.

## 3. ஸ்ரீரங்கத்துக்கு ஏற்பட்ட ஆகமம்—

ஸ்ரீரங்கம் பாஞ்சராத்ர ஸந்நிதி. பாஞ்சாரத்ர ஸம்ஹிதைகளில் ரத்னத்ரயம்—என்று பிரஸித்தமான ஸாத்வதம், பௌஷ்கரம், ஜயாக்யம்—என்ற மூன்று தந்த்ரங்களில் பௌஷ்கரத்திலும் அதன் விவரணமான பாரமேசுவரத்திலும் ஸ்ரீரங்கம் கோயில் காரியங்கள் நடக்கின்றன. இந்த இரண்டு ஸம்ஹிதைகளிலும் இல்லாமல் அனுஷ்டானத்தில்மட்டுமுள்ள காரியங்களுக்கு இதர ஆகமங்களிலிருந்தாவது ஆதாரம் காணத்தக்கது.

## 4. சாதுர்மாஸ்ய யோகநித்ரை—

பௌஷ்கரத்திலும் அதன் வ்யாக்யானமான பாரமேசுவரத்திலும் சாதுர்மாஸ்ய காரியங்கள் சொல்லப்படுகின்றன. சதுர்மாஸமாவது ஆனி சுக்ல ஏகாதசி முதல் ஐப்பசி சுக்ல ஏகாதசி முடிய உள்ள நாலு

மாஸங்கள். இது கோயிலுக்கு ஏற்பட்ட சதுர்மாஸம். தர்ம ச்ாஸ்த் ரப்படி பூர்ணிமையிலிருந்து பூர்ணிமை முடிய சதுர்மாஸக் கணக்கு. சாந்திரமான ஸௌரமான பேதத்தால் சதுர்மாஸம் ஆடிமாஸ ஆரம் பத்திலிருந்து கார்த்திகை மாஸக்கடைசி வரையிலும் இருப்பதுண்டு.

இந்த நாலு மாஸங்களில் பகவான் யோகநித்திரை செய்கிறார். ஆனி சுக்ல ஏகாதசியில் யோகநித்ரை ஆரம்பமாகும். ஆகையால், அந்த ஏகாதசிக்கு சயனைகாதசியென்று பெயர். ஆவணி சுக்ல ஏகாத சியில் பகவான் வலது பக்கம் திரும்பிக் கொள்கிறார். அதற்குப் பரிவர்த்தன ஏகாதசி யென்று பெயர். கார்த்திகை சுக்ல ஏகாதசியில் பகவான் கண் விழிக்கிறார். அதற்கு உத்தான ஏகாதசி, ப்ரபோத ஏகாதசி, போத்னைகாதசி என்று பெயர்.

சதுர்மாஸம்—என்பது எல்லாருக்கும் ஏற்பட்டது. ஸன்யாஸி களுக்கு சாதுர்மாஸ்ய நியமம் நாலு பக்ஷம் தான்; நாலு மாஸமில்லை.

சயனோத்ஸவம் ஸ்ரீரங்கத்தில் நடக்கிறதில்லை. மற்றை ஸன்னிதி களிலும் நடப்பதாகத் தெரியவில்லை. ஸ்ரீரங்கத்தில் சயனோத்ஸவம் என்று தனியாக நடக்காவிடினும், வஸந்தோத்ஸவம் பூர்த்தியான பிறகு, ஏகாதசி அமாவாஸை முதலிய ஏகதினோத்ஸவமான பர்வோத் ஸவம் கூட நிறுத்தப்படுவது சயனோத்ஸவமென்றே ஊஹிக்கலாம். பரிவர்த்தன ஏகாதசியன்றே ஸ்ரீரங்கத்தில் பவித்ரோத்ஸவம் ஆரம் பமாகிறது. உத்தானைகாதசி யன்று உத்தானோத்ஸவம் கைசிகம் என்ற பெயரால் நடக்கிறது. பவித்ரோத்ஸவம் சில ஸன்னிதிகளில் பரிவர்த்தனைகாதசிக்குப் பிறகும் ஆரம்பமாகிறது. உத்தானோத் ஸவம் மட்டும் அந்த தினத்தில் எல்லா விஷ்ணு கோயில்களிலும் நடக்கிறது. விஷ்ணுபோல சிவனுக்குக்கூட சாதுர்மாஸ்ய சயனம் உண்டென்று தெரிகிறது. சிவாலயங்களில் சயனோத்ஸவமாவது உத் தானோத்ஸவமாவது நடப்பதாகத் தெரியவில்லை.

## 5. பஞ்சாங்கங்கள்—

உத்தான ஏகாதசியன்று கைசிக ஏகாதசி எனத் தமிழ்ப் பஞ்சாங் கங்கள் தவிர இதர தேச பஞ்சாங்கங்களில் எழுதப்படுகிற தில்லை. இதர பஞ்சாங்கங்களில் உத்தான ஏகாதசி, ப்ரபோத ஏகாதசி,

போதா ஏகாதசி என்று எழுதப்படுகின்றன. க்ஷீராப்திநாத பூஜை துளஸீ விவாஹம்—என்றும் எழுதப்படுகின்றன. தமிழ்ப் பஞ்சாங்கங்களில் க்ஷீராப்திநாத பூஜை என்றும் எழுதப்படுகிறது; துளஸீ விவாஹம் எழுதப்படுகிறதில்லை.

## 6. கைசிகம் தமிழ்தேச அனுஷ்டானம், வைஷ்ணவவிதி-

தமிழ்ப் பஞ்சாங்கங்களில் மட்டும் கைசிகம் என்று எழுதப்படுவதால் இது தமிழ்தேசத்து அனுஷ்டானம்—என்று தெரிகிறது. தமிழ் தேசத்தில்தான் சாஸ்திர ப்ரகாரமான ஆலயங்கள் அதிகமாக ஏற்பட்டிருப்பதால் ஆலய அனுஷ்டானத்துக்கு கைசிகம் அவசியமாகி தமிழ்ப் பஞ்சாங்கங்களில் இப்படி எழுதப்படுகிறது. கைசிக ஏகாதசியன்று கைசிககானம் பண்ண வேண்டுமென்று ஆகமவிதி இருக்கிறது. கைசிகோத்ஸவத்தைப்பற்றிய ஆகமவசனங்கள் அனுபந்தத்தில் சேர்க்கப்படுகின்றன; அதில் கண்டுகொள்ளலாம். கைசிக கானத்தோடு, கைசிக மாஹாத்மியம் படிப்பதும் பட்டரால் ப்ரவர்த்திக்கப்பட்டதானகயால், எல்லா விஷ்ணு கோயில்களிலும் உத்தானோத்ஸவத்துக்கு கைசிகோத்ஸவம் என்ற பெயரே ஏற்பட்டது. உத்தானோத்ஸவம் வேறு; கைசிகோத்ஸவம் வேறு. உத்தானோத்ஸவத்தில் கைசிகோத்ஸவம் ஒரு காரியம் கைசிகோத்ஸவத்தில் கைசிக கானம் பண்ணுவது நின்றுபோய் கைசிக மாஹாத்மியம் படிப்பது மட்டும் நடக்கிறது.

## 7. துளஸீ விவாஹம்—

பகவான் உத்தான த்வாதசியன்று ஸாயங்காலம் துளஸீ தேவியை விவாஹம் செய்துகொள்வதாக சாஸ்திரம் தெரிவிக்கிறது. துவாதசியன்று ஸாயங்காலம் விஷ்ணுபிம்பத்தையும் துளஸிச் செடியையும் சேர்த்துவைத்து விவாஹம் செய்துவைக்கவேண்டியதென்று தர்ம சாஸ்திரங்களில் விவாஹ ப்ரகாரம் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த துளஸீ விவாஹம் தமிழ் நாடு தவிர இதர தேசங்களிலும், தமிழ் நாட்டில் மாத்வர்களாலும் அனுஷ்டிக்கப்படுகிறது.

## 8. உத்தானோத்ஸவம் செய்யவேண்டிய விதம்—

பனிகாலம் ஆரம்பிக்கும்போது கண்திறக்கும் பகவானைப் பூஜிக்க வேண்டும். இந்தப்பூஜை ப்ரபோதோத்ஸவம் எனப்படும். தசமி

யன்று ஸாயங்காலம் அங்குரார்ப்பணம், ஏகாதசியன்று ரக்ஷாபந்தன பூர்வகமாக சதுஃஸ்தானார்ச்சநம், பெருமாளுக்கு ஸ்நபநம். ராத்திரி பனிகாலத்துக்கேற்ப போர்வை சாத்தி, பச்சைக் கர்ப்பூரம் கலந்த தாம்பூல நிவேதனமும் கர்ப்பூர ஆரத்தியும் பண்ணவேண்டும். அர்ச்சகர் அன்று பிராம்மணர்களோடு கூட உபவாஸமிருந்து புண்ய கதைகள், ஸ்தோத்ர ரூபங்களான பாட்டுக்கள், நர்த்தனம் தாளம் முதலிய வற்றோடு கூடின ஜயசப்தம்—இவற்றைச் செய்துகொண்டு ராத்திரி முழுவதும் விழித்திருக்கவேண்டும்; துவாதசியில் புராணம் முதலியவற்றைப் படித்து மந்த்ரபூர்த்தியான பகவானை எழுப்பவேண்டும். அன்று பகவத் ஸன்னிதியில் புராணங்களைப் படிக்கிறவர்களுக்கும் கேட்கிறவர்களுக்கும் விசேஷ புண்யம் கிடைக்கும். துவாதசியன்று உஷஃகாலத்தில் கைசிக கானம் செய்து ப்ரத்யூஷாராதனமும் செய்யவேண்டும்.

## 9. ஸ்ரீரங்கத்தில் கைசிகோத்ஸவம் நடக்கும் விதம்—

கைசிகோத்ஸவத்துக்கு ஏற்பட்ட காலம், சாஸ்திரவிதி முதலியவை சொல்லப்பட்டன. பட்டரால் பிரஸித்தியடைந்த இந்த உத்ஸவம் இப்போது ஸ்ரீரங்கத்தில் நடக்கும் விதம் பின்வருமாறு.

தசமியன்று ஸாயங்காலம் அங்குரார்ப்பணம். ஏகாதசியன்று காலையில் நித்தியப்படி ஏற்பட்ட முதல் திருவாராதனமும் பொங்கல் நிவேதனமும் ஆனபிறகு, பிரதி ஏகாதசிக்குமுள்ள வழக்கம்போல பெருமாள் புறப்பட்டு சந்தனமண்டபத்தில் திருமஞ்சனம் செய்துகொண்டு தளிகை நிவேதனம் தீர்த்தப்ரஸாத விநியோகம்—முதலியவற்றை முடித்து உள்ளே எழுந்தருளுவார். ராத்திரியில் நிவேதனம் செய்யவேண்டிய செலவுசம்பா அரவணை பால் முதலிய யாவும் இன்று ஸாயங்காலத்திலேயே நிவேதனம் செய்யப்பட்டு கர்ப்பகிருஹமும் பூட்டி முத்ரை வைக்கப்படும்.

ராத்திரி 10-மணிக்கு கதவைத் திறந்து பெருமாளைப் பகல்பத்து மண்டபத்துக்கு எழுந்தருளப்பண்ணுவது. "ஸுப்தே ஜநே கதே யாமே விஷ்ணுமாதாய நிர்யயௌ"—என்ற வசனத்தின்படி அன்று சண்டாளன் பெருமாளைப்பாடுவதற்காகப் புறப்பட்டது ராத்திரி ஒரு ஜாமத்துக்குமேல் ஜனங்கள் தூங்கின பிறகென்று தெரிவதால்

பெருமாளும் அதே நேரத்தில் அந்த உத்ஸவத்துக்குப் புறப்படுகிறார். நித்யமாகவே திருமார்பிலுள்ள நீல நாயகம் தவிர இன்று பெருமாள் வேறு திருவாபரணம் சாத்திக்கொள்கிறதில்லை; ஸாதரா போர்த்துக் குல்லாய்மட்டும் அணிந்துகொள்வார். ஸகல திருவாபரணங்களுடனுமுள்ள ஸேவையைவிட திருவாபரணமேயில்லாமல் குல்லாய் தரித்து ஸாதரா போர்த்திருக்கும் ஸேவைதான் மிகவும் அழகாயிருக்கும். எல்லாப் புறப்பாட்டுக்கும் ஏற்பட்ட வாத்தியங்களைவிட இன்று கொட்டு மத்தளம், டக்கை, கௌரீசங்க எக்காளம்—முதலியவை அதிகப்படியாக முழங்கும். மார்கழித் திருநாளிலும் இந்த அதிகப்படி வாத்தியங்கள் உண்டு.

பெருமாள் துலுக்க நாச்சியாருக்குத் தம்முடைய ஒய்யார நடையழகைக் காண்பித்துக்கொண்டு, அரையர் கொண்டாட்டத்தோடு படியேற்றம் கண்டருளி மண்டபம் எழுந்தருளியதும் திரை ஸமர்ப்பிக்கப்படும். ஸ்ரீபாதம் தாங்குவார் பச்சை வடப்பெட்டியைக் கொண்டு வருவார்கள். பெருமாளை ஸிம்மாஸனத்தில் எழுந்தருளப் பண்ணி பச்சைவடம் சாத்த ஆரம்பமாகும்போது திரைவாங்கப்படும்.

(1) பச்சை வடம்—என்று வஸ்திரத்துக்குப் பெயர். வடம் என்பது முறுக்கின வஸ்து—அதாவது கயிறு. தேர்வடம் பூணல் வடம் என்று வியவஹரிக்கப்படும் பெயர்களும் இக்காரணத்தினலேயே ஏற்பட்டன. வடம் என்ற பெயர் வஸ்திரத்துக்கு ஏற்பட்ட காரணம் யாதெனில்—உத்தரீயத்தை முறுக்கியே இடுப்பில் கட்டிக்கொள்வதும் கழுத்தில் போட்டுக்கொள்வதும் வழக்கம். ஜரிகை உத்தரீயத்தை முறுக்கி சொக்காய்மேல் தரிக்கும் நாகரிகம் கூட உண்டு. ஆகவே வடம் என்றால் வஸ்திரம் என்று அர்த்தமாகலாம். சென்னை யுனிவர்ஸிடியார் தயாரித்த தமிழ் லெக்ஸிகன் என்னும் பெரிய அகராதியில் "பச்சை வடம்—மேல் போர்வை, விரிப்பு, திரை முதலியவற்றுக்கு உபயோகப்படும் நீண்ட சீலை; திருத்திரைப் பச்சை வடம் (கோயிலொழுகு 94-ம் பக்கம்)—" என்று எழுதப்பட்டிருக்கிறது. பெருமாளுக்கு கைசிக ஏகாதசியில் சாத்தும் பச்சைவடங்கள் பலவித பட்டுக்களா யிருக்கும். பச்சை என்றால் வர்ணம் என்னும் அபிப்பிராயத்தாலேயே ஸ்ரீரங்கராஜ சரித பாணத்தில் கைசிகோத்ஸவ ப்ரஸ்தாவத்தில் "அங்காவ்ருதிம் சித்ரபடைர் விதாய"—என்று சித்ரபட சப்தம் பிரயோகிக்கப் பட்டிருக்கிறது.

(2) பச்சை வடம் சாத்தும் விதம்—திரை வாங்கும் போது பச்சை வடம் சாத்துவது ஸேவையாகும். பச்சை வடம் மொத்தம் 360. இவ்வளவையும் பெருமாள் திருமேனியில் சாத்த முடியாதாகையால் பெருமாளுக்குப் பின்னால் உள்ள அணையின்மேல் சாத்துவது வழக்கம். ஒரு பச்சைவடம் சாத்தினவுடன் பச்சைக்கர்ப்பூரம் கலந்த தாம்பூலம் பெருமாளுக்கு அமுது செய்வித்து, கர்ப்பூர ஆரத்தி செய்யப்படும். ஒரு பச்சை வடம், ஒரு அடைக்காய், ஒரு கர்ப்பூர ஆரத்தி—இந்த க்ரமத்தில் 360 ஆவ்ருத்தி நடக்கும். ஒவ்வொரு தடவையிலும் ஸ்தானீகர் 'திருவடி விளக்குவதேல்,' 'அடைக்காயமுது நீட்டுவதேல்' 'திருவிளக்குத் தூண்டுவதேல்'—என்று அருளப்பாடு இட, அந்தந்த கைங்கரிய பரர்களால் 'நாயிந்தே' 'நாயிந்தே'—என்று சொல்லிக் கொண்டு வெள்ளித்தட்டில் பச்சை வடமும், வெள்ளிக் கிண்ணியில் தாம்பூலமும், வெள்ளித் தட்டில் தூண்டின கர்ப்பூரமும் அர்ச்சகர்களிடம் கொடுக்கப்படும். அர்ச்சகர் பச்சை வடத்தைப் பெருமாளுடைய அணைமேல் சாத்தி, தாம்பூலத்தை அமுது செய்வித்து, கர்ப்பூர ஆரத்தியையும்—கண்டருளப் பண்ணுவார்.

(3) திருக்குறுங்குடி பாசுர விண்ணப்பம்—பச்சைவடம் சாத்த ஆரம்பித்தவுடன் அரையர்களைக் கோயில் மஹாஜனம் கைங்கரியபரர் பட்டையடித்து வழிவிலக்கி பெருமாளிடம் எழுந்தருளப்பண்ணுவார். அரையர்களுக்கு அருளப்பாடு, ஸேவை, தீர்த்தம், சந்தனம், தொங்கு பரிவட்டம், மாலை, சடகோபம்—முதலிய ஸேவை மரியாதைகள் நடக்கும். அரையர்கள் பெருமாளுக்கெதிரில் கோஷ்டி மத்தியிலிருந்து கைசிக மாஹாத்மிய சரித்திரம் நடந்த திருக்குறுங்குடி விஷயமாகத் திருமங்கையாழ்வார் அருளிச்செய்த 'அக்கும்புலியின்' திருமொழி 10 பாசுரத்தையும், நம்மாழ்வாருடைய 'எங்ஙனேயோ' திருவாய்மொழி 11 பாசுரத்தையும் தாளத்தோடு விண்ணப்பம் செய்வார். அந்தத் திருமொழியில் முதல் பாட்டான 'அக்கும்புலியின்'—என்னும் பாசுரத்துக்குமட்டும் அபிநய வியாக்யானங்கள் உண்டு. அபிநய வியாக்யானங்களோடு இந்த முதல் பாட்டு பூர்த்தியானதும் மற்றைப் பாட்டுக்களும் விண்ணப்பம் செய்யப்படும். பெரியவாச்சான் பிள்ளை வியாக்யானமே ஸ்ரீகோசத்தைப் பார்த்து ஸேவிக்கப்படும். பெருமாள் பச்சை வடம் சாத்திக்கொண்டே பாசுரத்தையும் திருச்

3

செவிசாய்த்துக் கொண்டிருப்பார். பெருமாள் அமுது செய்யும் 'வேளையமும்' பச்சைக் கர்ப்பூர உருண்டைகளும் பாசுரம் விண்ணப்பம் செய்து கொண்டிருக்கும் அரையர்களுக்கு ஐந்து தடவை அருளப்பாடுடன் விநியோகம் செய்யப்படும். ஒவ்வொரு தடவையும் அரையர் விண்ணப்பத்தை நிறுத்திப் பெருமாளிடம் வந்து வேளையத்தை வாங்கிக் கொள்வார்.

திருமொழி முடிந்ததும் பச்சை வடம் சாத்துவது நிறுத்தப்பட்டு திரை ஸமர்ப்பிக்கப்படும். மடைப் பள்ளியிலிருந்து வெள்ளித் தட்டிலும் வெண்கலத்தட்டிலும் வடைப்பருப்பு கொண்டுவந்து, திருமணி ஸேவித்துப் பெருமாளுக்கு அமுது செய்விக்கப்படும்.

வடைபருப்பு அமுது செய்வித்துத் திரைவாங்கினதும், அரையர்கள் திருக்குறுங்குடி விஷயமான 'எங்ஙனேயோ' திருவாய்மொழியை விண்ணப்பம் சொய்வார்கள். இந்தத் திருவாய்மொழியில் முதல் பாசுரமான எங்ஙனேயோவுக்கு மட்டும் அபிநய வியாக்யானங்கள் உண்டு. திருவாய் மொழியின் ஈடு வியாக்யானம் ஸ்ரீகோசத்தைப்பார்த்தே ஸேவிக்கப் படும். நம்பெருமாள் ஸந்நிதியில் திருவாய் மொழிக்கு நம்பிள்ளை ஈடும், மற்றை ப்ரபந்தங்களுக்குப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்யாக்யானமும், பெரியவாச்சான்பிள்ளை வியாக்யானம் இல்லாத பெரியாழ்வார் திருமொழியின் சில பாசுரங்களுக்கு மணவாளமாமுனி வியாக்யானமும், ஆங்காங்கு அரையர்களின் முன்னோர்களான தம்பிரான்மார் வியாக்கியானமும் தவிர இதர வியாக்யானங்கள் ஸேவிக்கப்படுகிறதில்லை. எங்ஙனேயோ பாசுரத்துக்கு அபிநய வியாக்யானங்கள் முடிந்ததும், அத்திருவாய்மொழி மற்றைப் பாசுரங்களை ஸேவித்து, அரையர்கள் பெருமாளுக்கு வாழித் திருநாமம் சொல்லி மங்களம் பாடுவார்கள். பெருமாள் வெண்கலத்தட்டில் அமுது செய்த வடைப்புருப்பு அரையர்களுக்கு விநியோகம் செய்யப்படும்.

திருக்குறுங்குடி விஷயமாக 'அக்கும்புலியின்' திருமொழி 'எங்ஙனேயோ' திருவாய்மொழி—இவ்விரண்டும் தவிர 'தவள விளம்பிறை' திருமொழியும் மற்றை ஆழ்வார்களின் பாசுரங்களும் உண்டு. ஆனால், அவை இன்று கைசிக ஏகாதசி உத்ஸவத்தில் ஸ்ரீரங்கத்தில் ஸேவிக்கப்படுகிறதில்லை. எல்லாப் பாசுரங்களையும் இங்கே விண்ணப்பம் செய்யாத காரணம் ஊஹிக்கத்தக்கது.

திருக்குறுங்குடி பாசுரங்கள் எல்லாம் கடைசியில் எழுதப்பட்டிருக்கின்றன. கைசிக கானம் பண்ணின நம்பாடுவானுடைய சரித்திரம் கேட்கும் இந்த உத்ஸவத்தில் திருகுறுங்குடிப் பாசுரத்தை விண்ணப்பம் செய்வது—திருக்குறுங்குடி நம்பாடுவானைப் பெற்ற ஊர், அங்குள்ள பெருமாள் நம்பாடுவானுக்கு ப்ரத்யக்ஷம், கைசிகவ்ருத்தாந்தம் அவதரிக்கும்படியாக க்ருபை செய்தவர்—என்ற உபகார ஸ்ம்ருதி.

(4) பட்டர் கைசிக மாஹாத்மியம் வாசித்தல்—அரையர்கள் பாசுரம் விண்ணப்பம் செய்து கொண்டிருக்கையிலேயே பட்டரைத் திருமாளிகையிலிருந்து எழுந்தருளப் பண்ணுவதற்காக மணியக்காரர் கோயில் மாஹாஜன கைங்கரிய பரர்களை அனுப்புவார். பட்டர் பெருமாளுடைய 'காப்பந்தம்' மேளவாத்தியம் முதலிய பரிகரங்களோடும் தம் சிஷ்யர் முதலானாரோடும் புறப்பட்டு ப்ரதக்ஷிணமாய் கிழப்படியேறி வந்து, ஸந்நிதிவாசலில் தண்டம் ஸமர்ப்பித்து அழகிய மணவாளன் திருமண்டபத்திலிலேயே எழுந்தருளியிருப்பார். அரையர்ஸேவை முடிந்ததும், மணியக்காரர் பட்டரை தண்டம் ஸமர்ப்பித்து, பெருமாளிடம் அழைத்துப் போவார். ஸ்தானீகர் பெருமாளை 'நேமனம்' கேட்டு பட்டருக்கு அருளப்பாடு ஸாதிப்பார். பட்டர் பெருமாளிடம் வந்து கைசிக மாஹாத்மிய ஸ்ரீகோசத்தை ஸ்தானீகரிடம் கொடுப்பார். அதை அர்ச்சர் வாங்கிப் பெருமாள் திருவடியில் வைப்பார். பட்டருக்கு தீர்த்தம், சந்தனம், தொங்கு பரிவட்டம், மாலை, சடகோபம்—முதலிய பிரஸாதங்கள் ஸாதிக்கப்படும். பட்டர் கைசிக புராணத்தை வாங்கிக் கொண்டு கோஷ்டிக்கு ஸமீபத்தில்போய் 'ஸ்ரீசைலேச தயாபாத்ரம்' முதல் 'ஸ்ரீபராசர பட்டார்ய:' வரைக்குமுள்ள ஆறு தனியன்களையும் சொல்லி, கைசிக புராணத்தை அவதாரிகை வியாக்யானங்களோடு வாசிப்பார். புராணம் வாசித்துக் கொண்டிருக்கையிலேயே, அரையருக்குப்போல பட்டருக்கு அருளப்பாட்டுடன் பத்து தரம் பச்சைக்கர்ப்பூர வேளையம் வினியோகம் செய்யப்படும். ஒவ்வொரு அருளப்பாட்டுக்கும் பட்டர் புராணத்தை நிறுத்திப் பெருமாளிடம் வந்து, வேளயத்தை வாங்கிக் கொண்டு கோஷ்டிமத்தியில் போய், புராணத்தை ஆரம்பிப்பார்.

பட்டர் வாசிக்கும் கிரமத்திலேயே கைசிக மாஹாத்மியம் பின்னால் சேர்க்கப்பட்டிருக்கிறது. புராணம் ஸ்ரீகோசத்தைப் பார்த்தே படிக்கப்படும். புராணம் பூர்த்தியானதும் பெருமாள் அமுதுசெய்த வெள்ளித்தட்டுவடைப் பருப்பு பட்டருக்கு வினியோகம் செய்யப் படும். கைங்கரிய பரர்கள் பட்டரைப் பெருமாளுடைய காப்பந்தம், மேளவாத்தியம் முதலானவைகளோடு திருமாளிகைக்கு அழைத்துக் கொண்டுபோய் விட்டு வருவார்கள்.

(5) பெருமாள் புறப்பாடு—பட்டர் திருமாளிகைக்குப்போனதும் பெருமாளுக்கு வேதவிண்ணப்பம் ஆகும். மடைப்பள்ளியிலிருந்து கடதீபம் வரும். பிறகு, அலங்காரம் அமுது செய்விக்கப்பட்டு தீர்த்த ப்ரஸாத வினியோகம் ஆகும். இந்த உத்ஸவத்தில் பெருமாளுக்குத் திருவாராதனம் இல்லை. திருவாராதனம் இல்லாமலே வேதவிண்ணப்பம், கடதீபம், தளிகை நிவேதனம்—முதலியன நடைபெறும். பெருமாள் புறப்படுவதற்காக ஸூர்யோதயத்துக்கு முன்னதாகவே ஸிம்மாஸனத்தை விட்டு தோளுக்கினியானில் எழுந்தருளி பட்டரின் வருகைக்குக் காத்திருப்பார். கைங்கரிய பரர்கள் 'பெருமாளுடைய ஸமயத்தை பட்டருக்குத் தெரிவிப்பார்கள். பட்டர் நிலையங்கி,' குல்லாய், தொங்குபரிவட்டம் முதலிய உடைகளை தரித்துக்கொண்டு, கைசிக புராணத்தையும் எடுத்துக்கொண்டு, திருமாளிகையிலிருந்து புறப்பட்டுப் கோயிலுக்குள் வந்து, துவஜஸ்தம்பத்துக்கருகிலுள்ள ஊஞ்சல் மண்டபம் படிக்கட்டில் உட்கார்ந்திருப்பார். பெருமாள் புறப்பட்டு கிளிமண்டபம் விட்டுக் கீழிறங்கி, கண்ணாடியறை எழுந்தருளியதும், பட்டர் வந்து தண்டம் ஸமர்ப்பித்துப் பெருமாளோடு கூடவே போவார்.

(6) பச்சைக் கர்ப்பூர படியேற்றம்—பெருமாள் கண்ணாடியறையை விட்டுப் புறப்பட்டு இரண்டடி போனதும், அரையர்களுக்கு அருளப்பாடு ஆகும். பெருமாள் அரையர்கள் பாடும் இசையைக் கேட்டுக் கொண்டே மேலப்படி போய் படியேற்றம் கண்டருளுவார்.

பொங்குசீர் வசனபூடணமீந்த உலகாரியன் போற்றித் திகழும்
பெருமாள்!

மன்னிய சீர் மணவாளமாமுனி ஈடுரைப்பது கேட்டு பூரித்து
நின்ற பெருமாள்!

என்று இம்மாதிரியாக அரையர்கள் கொண்டாட்டங்களைப் பாடு வார்கள். சாத்தாத வைஷ்ணவர்கள் புஷ்பங்களையும் பச்சைக் கர்ப்பூரப் பொடியையும் கலந்து வட்டிலில் வைத்துக்கொண்டு பெருமாளுடைய திருமேனியில் வாரி யிறைப்பார்கள். இந்த வைப வத்துடன் பெருமாள் அசைந்து அசைந்து படியேறி ஒரே வேக மாக மேல் கொரட்டில் திரும்பி நிற்பார். உடனே திருவந்திக்காப்பு ஆகும். கைசிக மாஹாத்மியம் அவதரித்த இன்றை தினத்தில் மாஹாத்மியத்துக்கு வியாக்யானமிட்டருளி அதனைத் தனக்கு விண் ணப்பம் செய்த பட்டரிடம் குதூஹலம் கொண்டு பெருமாள் ஸ்தா னீகர் மூலமாக "நம் பட்டரை வீட்டில் விட்டு வா" என்று மணியக் காரரை ஆக்ஞாபிப்பார். மணியக்காரரும் 'நாயிந்தே நாயிந்தே' என்று சொல்லி ஆக்ஞையை சிரஸாவஹித்து பட்டரை அழைத் துக் கொண்டு பெருமாளோடு உள்ளே போவார்.

(6) பட்டர் பிரம்மரதம்—பெருமாள் உள்ளே எழுந்தருளியதும் ஸன்னிதிவாசல் கதவுகள் சாற்றப்படும். பெருமாள் தம்முடைய மாலையை பட்டருக்கு ஸாதிப்பார். பட்டர் பெரிய பெருமாளிட மும் அனுக்ரஹம் பெற்றுக் கொண்டு ஸன்னிதிவாசலில் வந்து நிற்பார். மறுபடியும் கதவுகள் சாற்றப்படும். பெருமாள் தோளுக் கினியானிலிருந்து மூலஸ்தானம் எழுந்தருளியதும், ஸன்னிதிவாசல் கதவு திறக்கப்பட்டு மங்களாலத்தி ஆகும். மங்களாலத்தி முடிந் ததும், அர்ச்சகர் ஸ்ரீசடகோபத்தை ஸன்னிதிவாசலுக்குக் கொண்டு வந்து பட்டருக்கு ஸாதிப்பார். நட்டு முட்டு தாளத்தோடு பட்டர் ஸ்ரீசடகோபம் பெற்றுக்கொண்டு தம்முடைய சிஷ்யர்களோடும், கைங்கரியபரர்களோடும் மேலப்படியிறங்கி, ஸேனை முதலியார் ஸன்னிதியில் ஸேவை மரியாதை பெற்று, பிரதக்ஷிணமாகப்போய் ஆரிய படாள் வாசலில் இருக்கும் கேடயத்தில் உட்காருவார். ஸ்ரீபாதம் தாங்குவார் கேடயத்தை எழுந்தருளப்பண்ணுவார்கள். தெற்குவாசல் வழியாக வெளியே போய் உள்திருவீதியை ப்ரத க்ஷிணம் செய்துகொண்டு பட்டர் திருமாளிகைக்கு எழுந்தருளுவார். வழியில் கருடமண்டபத்தில் கருடனும் நம்மாழ்வாரும் மாலை ஸாதிப் பார்கள். ரங்கவிலாஸத்தில் கூரத்தாழ்வான் தம்முடைய ஸன் னிதிக் கெதிரில் மாலை ஸாதிப்பார். வடக்கு வாசலில் பெரிய பிராட்டியாரும் மேட்டழகியசிங்கரும் மாலை ஸாதிப்பார்கள். பெருமாளுடைய ஸகல பிருதுகளோடும், கைங்கர்யபரர்களோடும்,

ஸேவார்த்திகளோடும், பட்டர் பிரம்மரதத்தில் திருமாளிகை சேருவார். கோயில் தாஸிகள் முத்தாலத்தி எடுப்பார்கள். பட்டர் பிரம்மரதத்தை விட்டிறங்கி உள்ளே சென்றதும், அரையர் எழுந்தருளி பெருமாள் சூர்ணாபிஷேகம் சாத்திக்கொள்ளும்போதுபோல தாளத்தோடு, பல்லாண்டு பாடுவார். ஸ்தானிகர்கள் கோஷ்டிக்கு சந்தனம் தாம்பூலம் விநியோகம் செய்வார்கள்.

பட்டர் திருமாளிகையில் கோஷ்டி விநியோகம் ஆனபிறகு, அன்று உதயம் வரவேண்டிய திருமஞ்சனம் வந்து தினசரி காரியங்கள் நடக்கும். நேற்றுக் காரியமெல்லாம் பூர்த்தியாகி கதவைப்பூட்டி முத்திரை வைத்தபிறகு, ராத்திரி நடந்த கைசிகோத்ஸவ ஸஹிதமான உத்தாரணோத்ஸம் நேற்றை உத்ஸவத்திலும் சேராமல் இன்றை உத்ஸவத்திலும் சேராமல் அவாந்தர உத்ஸவமாயிருக்கும்.

## 10. திருக்குறுங்குடி —

கைசிக வ்ருத்தாந்தம் அவதரித்த திருக்குறுங்குடியில் இன்று இவ்வுத்ஸவம் எப்படி நடக்கிறதென்ற கேள்வி ஸஹஜமாக உண்டாகலாம். இன்று நம்பாடுவான் சரித்திரம் நாடகமாய் நடிக்கப்படுவது கேட்டு அங்கே போய் ஸேவித்தபடியே எழுதப்படுகிறது.

திருநெல்வேலி ஸ்டேஷனிலிருந்து 24 மைல் மேற்கிலுள்ளது திருக்குறுங்குடி. வழியில் 16-வது மைலில் வானமாமலை இருக்கிறது. திருநெல்வேலியிலிருந்து வானமாமலை திருக்குறுங்குடிக்கு ரயில் கிடையாது. பஸ் ஏராளமாகப் போகிறது.

திருக்குறுங்குடி இருப்பது மஹேந்திர பர்வதத்தின் அடிவாரம். அந்த மலையிலிருந்து பெருகும் க்ஷீரநதி, பாலாறு, ஸிந்துநதி, நம்பியூாறு—என்று பல பெயர்களுள்ள சிறு நதி திருக்குறுங்குடிக்கருகில் ஓடுகிறது. திருக்குறுங்குடி நீர்வளம் நிலவளம் நிரம்பி, சோலைகள் அடர்ந்து, அழகாயும் ஆரோக்யமாயுள்ள ஊர். இந்த ஊருக்கு தக்ஷிண பதரி, ஸௌகரவ க்ஷேத்ரம், ஸித்தாச்ரமம், வாமன க்ஷேத்ரம்,—என்று பல பெயர்கள் புராணங்களில் காண்கின்றன.

கோயிலுக்குள் நின்றநம்பி, இருந்தநம்பி, கிடந்தநம்பி—என்று மூன்று எம்பெருமான்கள் நின்றுகொண்டும், வீற்றிருந்தும், சயனித்துக்கொண்டுமிருக்கிறார்கள். இவர்களுள் நின்ற நம்பியே பிரதானம். இவருக்குத் திருக்குறுங்குடி நம்பி, அழகிய நம்பி, வைஷ்ணவ நம்பி

ஸௌந்தர பரிபூர்ணர்—என்று பல பெயர்கள் உண்டு. பெருமாள் மிகவும் அழகாயிருப்பது பற்றி அழகிய நம்பி, ஸௌந்தரபரிபூர்ணர்—முதலிய பெயர்கள் உண்டாயின. இந்தப் பெருமாள் உடையவரிடம் பஞ்ச ஸம்ஸ்காரம் பெற்றதால் வைஷ்ணவ நம்பி என்று பெயர் ஏற்பட்டது. இங்கே உடையவர் ஆசாரியராயும் பெருமாள் சிஷ்யராயுமிருப்பதால் உடையவர் கர்பகிருஹத்திலேயே ஆசார்ய ஸ்தானத்தில் தனியாக எழுந்தருளியிருக்கிறார். இந்தக் கோயில் ஐந்து பிராகாரமாயிருக்கிறது. கர்பகிருஹத்துக்கு அடுத்த பிராகாரத்தில் பெருமாளுக்கு இடது கைப்புறத்தில் சட்டநாதரும் பைரவரும் இருக்கிறார்கள். திருமங்கையாழ்வார் "பக்கம் நின்ற சிவனார்"—என்று இந்த சிவனையும் சேர்த்துப் பாடியிருக்கிறார். இவருடைய பூஜைக்குப் பிரத்தியேகமான சிவத்விஜர்கள் உண்டு. திருக்குறுங்குடி வைகானஸக் கோயில்.

கோயிலுக்குள்ளிருக்கும் மூன்று நம்பிகள் தவிர, கோயிலுக்குத் தென்மேற்கில் ஊருக்கு வெளியே திருப்பாற்கடல் நம்பி என்ற வாமனப் பெருமாள் இருக்கிறார். இவர் ஸன்னிதி தரைமட்டத்துக்குக் கீழே இருக்கிறது. மஹேந்திர பர்வதத்தின் மத்தியில் மலை நம்பி என்னும் பெருமாள் எழுந்தருளியிருக்கிறார். திருக்குறுங்குடி திருமங்கையாழ்வார் பரமபதித்த ஸ்தலம். ஊருக்கு வடபுறத்தில் வயல் நடுவில் ஒரு திருமங்கையாழ்வார் எழுந்தருளியிருக்கிறார். கார்த்திகையில் கார்த்திகை திருநக்ஷத்திரத்தன்று கோயிலில் திருமங்கையாழ்வாரும் பெருமாளும் தளிகை அமுது செய்தவுடன் வயல் நடுவிலுள்ள திருமங்கையாழ்வாருக்குத் தளிகை அமுது செய்வித்து வந்த பிறகுதான் கோயிலில் கோஷ்டி காரியங்கள் நடக்கும்.

திருப்பாற்கடல் நம்பி ஸன்னிதிக்கும் தென்மேற்கில் நதிக்கரையில் "திருமண் பாறை—என்னுமொரு பாறையின் அடிபாகத்தில் உடையவர் வைஷ்ணவ நம்பிக்குப் பஞ்ச ஸம்ஸ்காரம் செய்த இடம் தெரிகிறது. உடையவரும் வடுக நம்பியும் திருவநந்தபுரம் போய் பெருமாளை ஸேவித்துத் திரும்புகையில், ராத்திரி இந்தப் பாறையடியில் தங்கினதாயும் அங்கே, திருக்குறுங்குடிப் பெருமாள் வந்து அவர்களை உபசரித்ததாயும் பிரஸித்தி. பாறையின் அடியில் வடுக நம்பி

யோடு எழுந்தருளியிருக்கும் உடையவருக்கருகில் திருக்குறுங்குடிப் பெருமாள் கைகூப்பி நிற்பதாகவும் பிம்பங்கள் காண்கின்றன. பாறைக்கு அடியில்போய் ஸேவிப்பதற்காகப் படிக்கட்டு கட்டியிருக்கிறது. மேலே உடையவர் ஸன்னிதி ஒன்று இருக்கிறது. இப்பொழுது சொன்ன எல்லாக் கோயில்களும் சேர்ந்து ஒரே தேவஸ்தானம்.

உடையவர் இங்கே ஏற்படுத்தின பேரருளாள ராமானுஜ ஜிய்யர் என்னும் திருக்குறுங்குடி ஜிய்யரே இந்த தேவஸ்தானத்துக்கு அதிகாரி. இந்த ஜில்லாவிலுள்ள பெரிய நம்பி வம்சியர்களே இந்த ஜிய்யர் ஸ்தானத்தை வஹிக்கிறார்கள். இந்த ஜிய்யருடைய மடம் கோயிலின் முதல் கோபுரத்துக்கும் இரண்டாம் கோபுரத்துக்கும் இடையில் கோட்டை வாசலுக்கு வடபுறமாக இருக்கிறது. இந்த மடத்துக்குள்ளேயும் உடையவர் எழுந்தருளியிருக்கிறார்.

ஜிய்யர் மடத்து வாசலிலுள்ள மண்டபத் தூண்களில் அழகிய சில்பம் நிறைந்த பிம்பங்கள் இருக்கின்றன. சித்ரகோபுரம் என்னும் கோபுரத்தில் அருமையான வேலைப்பாடு அமைந்த மேல்தட்டுள்ள ஏழு கட்டுக்களும், தந்தத்தில்போல வெகு நுட்பமாக கருங்கல்லில் செய்த பிம்பங்களும் உள்ளன.

திருமழிசையாழ்வார் திருச்சந்த விருத்தத்தில் "காண்டமாடு பொய்கையுள் கரும்பனைப் பெரும்பழம் உருண்டுவீழ வாளைபாய" என்று பாடின ஒற்றைப் பனைமரம் இன்னும் அந்த காரண்டவ புஷ்கரிணிக் கரையிலிருப்பது இந்த க்ஷேத்திரத்தில் ஓர் ஆச்சரியம். இந்தக் கோயிலின் துவஜஸ்தம்பம் வாசற்படிக்கு நேராயிராமல் வடபுறமாய் ஒதுங்கியிருக்கிறது. நம்பாடுவான் என்னும் சண்டாளன் "தூராஜ்ஜாகரணே காதி—தன்ஜாதிக் கனுகுணமாக தூரத்திலே நின்று பாடினன்"—என்றாற்போல ஸன்னிதிக்குள்ளே வரமுடியாமல் வெளியே யிருந்து பாடினபோது, அவனுக்குப் பெருமாள் ஸேவை ஆகுமாறு துவஜஸ்தம்பம் ஒதுங்கினதாகவும் அது முதல் அது அப்படியே யிருப்பதாகவும் சொல்லுகிறார்கள். ஆக, இவ்வளவாலும் ஊர், கோயில்—முதலியவற்றின் விவரம் சொல்லப்பட்டது. இனி அங்கே நடக்கும் கைசிக உத்ஸவத்தின் விவரம்.

## 11. திருங்குறுங்குடி கைசிகம்: ஏகாதசி திருமஞ்சனம்—

கைசிக ஏகாதசிக்குப் பத்து நாள் முன்பு நாடக பாத்திரங்களான நம்பாடுவான், பிரம்மரக்ஷஸ், நம்பிக் கிழவன்—இம்மூவரும் பெருமாளை ஸேவித்து தேங்காய் பெற்றுக்கொண்டு, காரண்டவ புஷ்கரிணிக் கரையிலுள்ள கிருஷ்ணன் கோயிலில் நாடகத்தை அப்யஸிக்க விரதம் ஆரம்பிப்பார்கள். இவர்களுள் நம்பாடுவான், நம்பிக் கிழவன்—இந்த இரண்டு பாத்திரங்களும் அந்தக் கோயில் தாஸிகளுடையவை; பிரம்மரக்ஷஸ் திருமேனிக்காவல் வேலைக்காரனுடையது. இவர்கள் பத்து நாளும் ஏகபுக்தமாயிருந்து, ஏகாதசியன்று உபவாஸமிருக்க வேண்டும். தாஸிகள் பத்து நாளும் வீட்டிலேயே விரதம் இருப்பார்கள். பிரம்மரக்ஷஸ்ஸாக நடிப்பவன் பத்து நாளும் காலையில் ஸ்நானம் செய்து வந்த பிறகு, கோயிலுக்கு வெளியேபோகாமல் இருப்பான்.

தினந்தோறும்போல, ஏகாதசியன்றும் காலையில் நித்தியல் திருமஞ்சனம் வந்து விச்வரூபம் ஆகும். பிறகு, சத்ர சாமரம், யானை, குதிரை—முதலிய விருதுகளுடன் அலங்காரத் திருமஞ்சனம் திருவீதி சுற்றி வரும். பெருமாள் சுக்ரவாரக் குறட்டுக்குக் கீழே குலசேகரமண்டபத்தில் 'மஜகிரியில்' தனிக்கோயில் நாச்சியாரோடும் உபயநாச்சிமார்களோடும் அலங்காரத் திருமஞ்சனம் கண்டருளுவார். கோஷ்டிக்கு ஈரவாடைத் தீர்த்த வினியோகம் முதலியன ஆனதும், பெருமாள் பின்புறமுள்ள சுக்ரவாரக் குறட்டில் எழுந்தருளித் திருவாராதனம் நடந்து, பலி ஸாதிக்கப்படும். பிறகு, திருமங்கையாழ்வார் உத்ஸவம் ஆறும் திருநாள் கோஷ்டி ஆகும். கைசிக ஏகாதசி எப்பொழுதும் உத்தரட்டாதியன்று வருமாகையால் அன்று கார்த்திகை கார்த்திகையி லவதரித்த திருமங்கையாழ்வாருக்கு ஆறும் திருநாள் நேரிடும். ஸாதாரணமாக கைசிகம் முந்தியும் திருக்கார்த்திகை பிந்தியுமாகவே வரும். அப்படி வந்தால்தான் கைசிகத்தன்று திருமங்கையாழ்வாருடைய உத்ஸவம் நேரிடும். திருக்கார்த்திகைக்குப் பிந்தி கைசிகம் வந்தால் திருமங்கையாழ்வார் உத்ஸவம் கைசிகத்தில் ஸம்பந்தப்படாது. திருமங்கையாழ்வார் புறப்பட்டு சம்பா திருவாராதனம் கண்டருளித் தளிகை அமுது செய்த பிறகு, கோஷ்டிக்கு தீர்த்த வினியோகம். ஸாயங்கரலம் பெருமாளுக்குத் திருவாராதன

மாகி அத்தாளத்தளிகை நிவேதனம் செய்வித்ததும், தீர்த்த விநி யோகம் நடந்து பலி ஸாதிக்கப்படும்.

1. கைசிகமண்டபம் எழுந்தருளுதல்—ராத்திரி கைசிக உத்ஸவத் துக்காக ஆழ்வாராசாரியர்கள் யாவரும் கைசிக மண்டபம் எழுந்தருளு வார்கள். ஸ்ரீரங்கத்திற்போல இங்கே ஆழ்வாராசாரியர்கள் யாவ ரும் தனித்தனியாக எழுந்தருளி யிருக்கமாட்டார்கள். ஒரே வேதி யில் எல்லாரும் எழுந்தருளியிருப்பார்கள். ராத்திரி பெருமாள் உபய நாச்சிமார்களோடு தங்கத்தோளுக்கினியானில் 'தவசு சிவிகை' சாத் திப் புறப்பட்டு, வட்டவிளக்குக்கு முன்புறம் திருமங்கையாழ்வார் ஸன் னிதிவாசலுக்கு எழுந்தருளுவார். ஜீயர் எழுந்தருளியதும் சத்தி ரம் வகை திருக்கண்சாத்து (அடைக்காய் பழம் வகையரா) அமுது செய்யப்பண்ணி கர்ப்பூர ஸேவை ஆகும். ஆழ்வாருக்கு ஸ்ரீசடாரி மங்களாசாஸனம் ஆனதும், கோஷ்டிக்கு தீர்த்தவிநியோகம். பிறகு இயல் தொடங்க அருளப்பாடு. இயல்கோஷ்டியோடு பெருமாள் எழுந்தருளுவார். மணவாளமாமுனி ஸன்னிதியில் நடக்கும் இயல் சாற்று இன்று அங்கே நடக்காது. கைசிக மண்டபத்தில் பெருமாள் எழுந்தருளியதும் இயல்சாற்று. மூடுபல்லக்கில் தனிக்கோயில் நாச் சியார் புறப்பட்டு வந்து பெருமாளுடைய சேர்த்தியில் எழுந்தருளிய பிறகு, ராஜ வரிசை மரியாதைக்கான பொங்கல் தளிகையும் மடம் திருகண்சாத்தும் அமுதுசெய்விக்கப்படும். ஜீயர் ஸ்வாமி ராஜ வரிசை மரியாதை பெற்றுக்கொண்டு மடத்துக்கு எழுந்தருளுவார். அங்கே பொங்கல் விநியோகம்.

2. கைசிக நாடகம்—கைசிக மண்டபத்தில் பெருமாள் கிழக்கு முகமாய் எழுந்தருளியிருப்பார். கைசிக மண்டபத்துக்கு வெளியே பெரிய மண்டபம் இருக்கிறது. இந்த வெளிமண்டபத்தில் கீழ்புறம் கோடியில் நாடகத்துக்கு மேடை போடப்பட்டிருக்கும். அதில் கைசிக விருத்தாந்தம் முழுதும் மேற்சொன்ன மூன்று பாத்திரங்களால் நாடகமாய் நடிக்கப்படும். நாடகத்துக்கு வேண்டிய பேச்சு பாட்டு முதலியயாவும் ஓலை ப்ரதியில் தமிழில் எழுதப்பட்டு கோயில் தாஸிகளி டமே இருக்கின்றன. அந்த ஓலைப் புஸ்தகத்திலுள்ளபடியே நெடு நாளாக நாடகம் நடிக்கப்படுகிறது. ஓலைப் புஸ்தகத்திலுள்ள விஷயங் கள் யாரால் எழுதப்பட்டவை யென்று தெரியவில்லை. நாடகமாய்

நடிப்பதற்காக எழுதப்பட்டிருப்பதால் கைசிகமாஹாத்மியத்தி லுள்ளதைவிட அதிகமான விஷயங்கள் அதில் உள்ளன. அந்த ஓலைப்புஸ்தகத்தில் திருக்குறுங்குடிப் பெருமாளுடைய வைபவமும் கைசிக விருத்தாந்தமும் வெகு ரஸமாக எழுதப்பட்டிருக்கின்றன. இவ்விஷயங்களை ப்ரஸித்தமாக்கினால் ரஸிகர்களுக்கு இன்பமாயிருக்கும் புஸ்தகத்திலுள்ளதை சரியாகச் சொல்லுவதற்குக்கூட முடியாமல் ஏதோ ஒருவிதமாக நாடகம் நடக்கிறது. நாடகத்துக்காக எல்லாம் சித்தமாயிருக்கையில், பிரம்மரக்ஷஸ் வேஷம் தரிப்பவன் கோயிலுக்குப் பின்புறத்திலிருந்து மேளதாளங்களோடு பிரதக்ஷிணமாக வந்து, கைசிக மண்டபத்துக்கு வடபுறமாயுள்ள அறைக்குள் போய் முடிக்குப் பூஜை செய்து, அதை தரித்துக்கொள்வான். மரத்தினால் செய்த பிரம்மரக்ஷஸ்ஸின் தலை நெடுநாளாக கோயிலிலேயே இருக்கிறது. இந்த அறைக்குள்ளேயே அது வைக்கப்பட்டிருக்கும். அதற்குப் பூஜை செய்து, அதைத் தலையில் தரித்தவுடன் அந்த வேஷதாரிக்கு ஆவேசம் உண்டாகிறது. பக்கத்திலுள்ளோர் ஸமாதானம் செய்து அவனை நாடகமேடைக்கு அழைத்து வருகிறார்கள். அவன் வந்த பிறகு நாடகம் ஆரம்பமாகிறது. நாடகம் முடிந்ததும் நாடக பாத்திரங்களுக்குப் பெருமாளிடம் ஸேவை மரியாதை நடக்கும். பிறகு அவர்கள் மேளதாளத்துடன் வீட்டுக்குப் போகிறார்கள்.

3. திருக்குறுங்குடிப் பாசுரம்—தாஸிகள் மரியாதை பெற்றுக் கொண்டு வீடுசென்றதும் பெருமாளுக்குத் திருவாராதனம் ஆகும். தளிகை அமுதுசெய்ததும் கர்ப்பூர ஸேவை ; ஸேவாகாலம் தொடங்க அருளப்பாடு ; ஸ்ரீசைலேச—முதலான ஐந்து தனியன்களையும் திருமொழித் தனியன்களையும் ஸேவித்து, 'தவளவிளம்பிறை' திருமொழி ஸேவிக்கப்படும். ஸ்ரீவில்லிபுத்தூர் அரையர் வந்து 'அக்கும்புலியின்.' பாசுரத்துக்கு அபிநய வியாக்யானங்களை நடத்தின பிறகு, அத்தியாபகர்கள் மேல் பாசுரங்களை ஸேவிப்பார்கள். திருவாய் மொழியிலுள்ள 'எங்ஙனேயோ' என்னும் பாசுரத்துக்கு அரையர் அபிநய வியாக்கியானங்களை நடத்தியதும் மேல் பாசுரங்கள் ஸேவிக்கப்படும். திருவாய்மொழி சாற்றுமுறையானதும் பெருமாள் சுருளமுது கண்டருளுவார். செய்தி விண்ணப்பம் ஆனதும் பெருமாள் திருமங்கையாழ்வாருக்குத் தீர்த்தப்ரஸாதம் அனுக்ரஹிப்பார்.

4. கைசிக புராணம்—கோஷ்டிக்கு தீர்த்த வினியோகம் ஆனதும் ஸ்தானீகர் கைசிக புராணத்தை பட்டருடைய அவதாரிகை வியாக்கியானங்களோடு ஏட்டுப் புஸ்தகத்தைப் பார்த்து வாசிப்பார். இவ்வளவும் நடக்கையில் ஸூரியோதயம் ஸமீபித்து விடும். இன்றைய காரியம் முடிந்துகூட இன்று பெருமாள் கர்ப்பகிருஹம் எழுந்தருளாமல் கைசிக மண்டபத்திலேயே இருப்பார். அங்கேயே திருவுற்றயாமம்—அதாவது அர்த்தஜாமம்.

5. கைசிக துவாதசி—மறுநாள் கைசிக துவாதசியன்று நித்தியல் திருமஞ்சனம் வரும். கைசிக மண்டபத்திலேயே விசுவரூப கோஷ்டி. மத்தியானம் அலங்காரத் திருமஞ்சனம் வந்து, கும்பஸ்தாபனம் பண்ணி, பெருமாளுக்கு பஹிரங்கமாகத் திருமஞ்சனம். பிறகு காலஸந்தி; திருமங்கையாழ்வார் உத்ஸவம் ஏழாம் திருநாள்; சம்பா அவஸரம்; ஸாயங்கால திருவாராதனம்; அத்தாள அவஸரம்; தீர்த்த வினியோகம்—இவ்வளவும் நடந்தபிறகு ஆழ்வாராசாரியர்கள் புறப்பட்டுத் தம்முடைய ஸன்னிதிக்கு எழுந்தருளுவார்கள். பெருமாளும் தனிக்கோயில் நாச்சியாரை மூடுபல்லக்கில் அனுப்பிவிட்டு உபய நாச்சிமாரோடு உள்ளே எழுந்தருளுவார்.

6. ராத்திரி கருடஸேவை—ராத்திரி பெருமாளுக்கு மாத்திரம் கருட வாஹனம். பெருமாள் வாஹனத்தில் எழுந்தருளி அக்கார வடிசல் அமுது செய்வார். பிறகு—கர்ப்பூர ஸேவை, தீர்த்த வினியோகம், இயல் தொடக்கம். பெருமாள் புறப்பட்டு மடத்து வாசலுக்கு எழுந்தருளி மடத்துத் திருக்கண் சாத்து அமுது செய்ததும், தீர்த்த வினியோகம். பெருமாள் ராஜகோபுரம் எழுந்தருளி அடைக்காய் அமுது செய்ததும் தேங்காய் விடல் (சூரையாக உடைத்தல்). திருவீதி எழுந்தருளித் திரும்பியதும்—திருவந்திக்காப்பு, திருவாராதனம், தளிகை அமுது செய்தல், தீர்த்த வினியோகம். வாஹனத்திலிருந்து படிகளைந்து பெருமாள் பல்லக்கிலேறி உள்ளே எழுந்தருளுவார்.

## 12. திருக்குறுங்குடி பாசுரங்களின் விவரம்—

ஸ்ரீரங்கத்தில் இன்று ஸேவிக்கும் அக்கும்புலியின் எங்ஙனேயோ—என்ற திருமொழி திருவாய்மொழி தவிர, திருக்குறுங்குடியில்

தவளவிளம்பிறை திருமொழி அதிகமாக ஸேவிக்கப்படுகிறது. திருக்குறுங்குடி விஷயமாக பத்துக் கணக்காயுள்ள பாட்டுக்கள்—தவள விளம்பிறை, அக்கும்புலியின், எங்ஙனேயோ—என்ற இம்மூன்றே. இவைதவிர, ஆங்காங்கு சில்லரையாயுள்ள பாசுரங்கள் வேறே உள்ளன.

திருக்குறுங்குடியில் இந்த சில்லரைப்பாட்டுக்களை விட்டு, பத்துக் கணக்காயுள்ளவை மட்டுமே ஸேவிக்கப்படுகின்றன. ஸ்ரீரங்கத்தில் சில்லரைப் பாட்டுக்களோடு தவளவிளம்பிறையையும் விட்டு திருமொழியில் அக்கும்புலியின், திருவாய்மொழியில் எங்ஙனேயோ—இவ்விரண்டு மாத்திரமே ஸேவிக்கப்படுகிறது. திருமொழியில் தவள விளம்பிறையைவிட்டு அக்கும்புலியின்—என்பதைமாத்திரம் ஸ்ரீரங்கத்தில் இன்று வைத்துக் கொண்டதற்குக் காரணம்—கோயில் திருவாய்மொழி போல கோயில் திருமொழி யென்றுள்ள ஸங்கேதத்தில் தவள விளம்பிறை யன்றி அக்கும்புலியனே சேர்க்கப்பட்டிருப்பது தான்—என்று ஊஹிக்கலாம்.

—

# பொதுத் தனியன்கள்

(இதிலிருந்தே மாஹாத்மியம் வாசிக்கப்படும்)

---

ஸ்ரீஶைலேஶ தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்
யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்

லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாத யாமுந மத்யமாம்
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்

யோநித்யமச்யுத பதாம்புஜ யுக்ம ருக்ம
வ்யாமோஹதஸ்ததிதராணி த்ருணாய மேநே
அஸ்மத்குரோர்பகவதோஸ்ய தயைகஸிந்தோ
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்யே

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூதிஸ்
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்
ஆத்யஸ்ய நஃ குலபதேர்வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா

பூதம் ஸரஶ்ச மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலஶேகர யோகிவாஹாந்
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ரமிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம்

---

# 3. கைசிக மாஹாத்மியம்

(மூலமும், வ்யாக்யானமும், டிப்பணியும்)

ஸ்ரீபராசரபட்டார்ய: ஸ்ரீரங்கேசபுரோஹித:
ஸ்ரீவத்ஸாங்கஸுத: ஸ்ரீமாந் ஸ்ரேயஸே மேஸ்து பூயஸே

---

நமஸ்தேஸ்து வராஹாய லீலயோத்தரதே மஹீம்
குரமத்ய கதோ யஸ்ய மேரு: கணகணாயதே

ப்ரளயோதந்வதுத்தீர்ணாம் ப்ரபத்யேஹம் வஸுந்தராம்
மஹாவராஹ தம்ஷ்ட்ராக்ர மல்லிகோச மதுவ்ரதாம்

---

ஜாகரே து விஸாலாக்ஷி ஜாநதோ வாப்யஜாநத:
யோ மே ப்ரகாயதே கோயம் மம பக்த்யா வ்யவஸ்தித:

---

## கைசிக மாஹாத்மிய வ்யாக்யாந டிப்பணி

**ஸ்ரீபராசர்**—இது மாஹாத்மியத்துக்கு வ்யாக்யானமருளிச் செய்த பராசர பட்டர் தனியனாகையால், இங்கே அனுஸந்தேயமாயிற்று.

நமஸ்தஸ்மை, ப்ரளய—இந்த இரண்டு ஸ்லோகங்களும் வராஹ புராணத் துக்கு வக்தாவும் ச்ரோத்ரியுமான வராஹப் பெருமாள் பூமிப்பிராட்டி விஷய மானவை. வராஹ புராண ஆரம்பத்தில் இந்த ஸ்லோகங்கள் உள்ளன. அந்தப் புராணத்துக்கு இவை ஆரம்ப ஸ்லோகங்களா என்றும், பட்டர் இவற்றை அனுஸந்தானம் செய்துகொண்டே கைசிக மாஹாத்மியத்துக்கு வ்யாக்யானம் ஆரம்பித்தாரா என்றும் தெரியவில்லை. கைசிக மாஹாத்மிய புஸ்தகம் எல்லா வற்றிலும் இவை காண்கின்றன. ஸ்ரீரங்கத்தில் இவைகூட ஸேவிக்கப்படு கின்றன. இவற்றுக்கு வேதாசார்யபட்டர் வ்யாக்யானம் அருளியதாக திருவல் லிக்கேணி வை. மு. அப்பங்கார் ஸ்வாமி 1905-ல் அச்சிட்ட கைசிக மாஹாத் மியத்தினால் தெரிகிறது. அந்த வ்யாக்யானமும் இதன் அனுபந்தத்தில் சேர்க்கப்படும்.

**ஜாகரேது**—இது இந்த மாஹாத்மியத்துக்கு ஆரம்ப ஸ்லோகம், விஸ் தாரமான அவதாரிகைக்குப் பிறகு பட்டர் இந்த ஸ்லோகத்திலிருந்தே மாஹாத்மியத்தை வியாக்யானிக்கிறார். அவதாரிகைக்கும் முன்னரே இந்த ஸ்லோகம் இருக்கக் காரணம்—இது பட்டரால் தம்முடைய க்ரந்தத்துக்கு ப்ரதீகமாக எடுக்கப்பட்டிருக்கும். ஆகையால், கோமயலேப மாஹாத்மியத் திலிருந்து கைசிகமாஹாத்மியம் ஆரம்பமாவதாயும், முதலில் கோமயலேபத்

“வேதோகிலோ தர்மமூலம்”—என்றும் “பித்ருதேவ மநுஷ்யாணும் வேதஸ்சக்ஷுஸ் ஸநாதநம்”—என்றும் சொல்லுகிறபடியே அதீந்த்ரியங்களான தத்வஹித புருஷார்த்தங்களில் ப்ரமாணபூதங்களான வேதங்களுக்குப் பரிகர பூதங்களான வித்யாஸ்தாநங்கள் பத்து. இவற்றில்—

---

துக்கு வ்யாக்யானம் செய்து, பிறகு பட்டர் கைசிக மாஹாத்மியத்துக்கு வ்யாக்யானம் செய்ததாயும் திருக்கோயிலூரார் அச்சிட்ட புஸ்தகமும், பட்டணம் கோயிலில் வாசிக்கும் புஸ்தகங்களும் சரியானவை யல்லவென்று தோன்றுகிறது. கோமயலேப மாஹாத்மியம் வராஹ புராணத்திலிருக்கிறது. ஆனுல், இப்பொழுது ப்ரஸக்தமான கைசிக மாஹாத்மியத்துக்கு மாத்திரமே பட்டர் வ்யாக்யானம் அருளிச் செய்தார். கைசிகமாஹாத்மிய அத்யாய ஆரம்பத்தில் கோமயலேப மாஹாத்மியம் இருந்தாலும், இப்பொழுது ப்ரஸக்தமான கான மாஹாத்மியத்துக்கு ஆரம்பமான “ஜாகரே து”—என்னும் சுலோகத்திலிருந்தே பட்டர் வ்யாக்யானிப்பதுதான் ந்யாயம்.

தத்வ—தத்வமாவது : சித், அசித் ஈச்வரன். ஹிதம் : புருஷார்த்தத்துக்கு ஸாதனங்களான தர்மங்கள். புருஷார்த்தம் : புருஷனுல் அர்த்திக்கப்படுகிற, விரும்பப்படுகிற தர்மார்த்த காமமோக்ஷங்கள்.

ப்ரமாண—தத்வஹித புருஷார்த்தங்கள் அதீந்திரியங்களாகையாலே, அதாவது—நம்முடைய இந்திரியங்களைக் கொண்டு அறிய முடியாமல் அவற்றின் சக்திக்கு வெளிப்பட்டவைகளாகையாலே, அவற்றை அறிவதற்கு இந்திரியங்களைக் காட்டில் வேதமே ப்ரமாணம். அதீந்திரிய விஷயங்களில் சாஸ்திரமே பிரமாணம் என்றபடி.

பரிகர—வேதங்களே பிராமாணங்களானுலும் வேதார்த்தங்களை அறிவதற்கு உபகாரகங்களான வித்யைகள் உள்ளன. இங்குள்ள பரிகர சப்தத்துக்கு அங்கமென்ருவது உபப்ரும்ஹணமென்ருவது அர்த்தம் சொல்ல முடியாமல் உபகாரகமென்றே சொல்லவேண்டியிருக்கிறது. வேதாங்கங்கள் ஆறு என்று தனியாகக் கணக்கிட்டபடியால் பரிகாரம் அங்கமல்ல. வேதோபப்ரும்ஹணங்கள் இன்ன வென்றும் கணக்கிட்டபடியால் பரிகாரம் உபப்ரும்ஹணமல்ல. அங்கங்களுக்கும் உபப்ரம்மணங்களுக்கும்கூட உபகாரகத்வம் ஸமானமாகும்.

வித்யா ஸ்தானம்—என்பது வித்யையே. வித்யைகள் பதினுலு.

அங்காநி வேதாஸ்சத்வாரோ மீமாம்ஸா ந்யாய விஸ்தர:

புராணம் தர்மசாஸ்த்ரஞ்ச வித்யா ஹ்யேதாஸ்சதுர்தச

என்று. அதாவது—வேதாங்கங்கள் ஆறு. வேதங்கள் நாலு. மீமாம்ஸை, தர்க்கம், புராணம், தர்மசாஸ்த்ரம்—நாலு. வேதங்களுக்கு மற்றை வித்யகளைப் பரிகாரமாகச் சொல்லும் பிரகரணமாகையாலே பதினுலில் வேதங்கள்

1. சிக்ஷயானது—வர்ணங்களினுடைய உச்சாரண விசேஷ ப்ரதிபாதந மாத்ரத்திலே தத்பரமாகையாலும்;

2. நிருக்தமானது—வர்ண ஸாமாந்யாதிகளைக் கொண்டு பதார்த்த விசேஷ ப்ரதிபாதநத்திலே தத்பரமாகையாலும்;

3. சந்தோ விசிதியானது—வர்ணஸங்க்யா விசேஷ நியத காயத்ர்யாதிச் சந்தோமாத்ர ப்ரதிபாதகமாகையாலும்;

4. வ்யாகரணமானது—வர்ண ஸமுதாயாத்மகங்களான பதங்களினுடைய ஸாதுத்வாஸாதுத்வமாத்ர வ்யாப்ருதமாகையாலும்;

5. கல்பஸூத்ரங்கள்—பதஸங்காதரூப வாக்யவிசேஷ சோதித கர்மாநுஷ்டாந விசேஷ கல்பநா ப்ரவ்ருத்தங்களாகையாலும்;

6. ஜ்யோதிஷமானது—யதா சாஸ்த்ராநுஷ்டேயங்களான கர்மங்களை யதாகால மநுஷ்டிக்கும்படி காலவிசேஷ ப்ரதர்சந ப்ரதானமாகையாலும்;

7. ந்யாய சாஸ்த்ரமானது—ப்ரமாணாதி ஷோடச பதார்த்த வ்யவஹாரமாத்ர ப்ரதிஷ்டாபக மாகையாலும்;

8. மீமாம்ஸையானது—ஸோபப்ரும்ஹணங்களான வேதங்களினுடைய வசந வ்யக்தி விசேஷ நிர்தாரணார்த்த யுக்தி விசேஷ ப்ரதிஷ்டாபக மாகையாலும்;

9. உபப்ரும்ஹணங்கள் தன்னில் தர்மசாஸ்த்ரங்கள்—கர்மபாகோபப்ரும்ஹண ப்ரதாநங்களாகையாலும்;

10. ப்ரஹ்மபாகோபப்ரும்ஹண ப்ரதாநங்களான இதிஹாஸ

---

நாலையும் நீக்கி மற்றவை பத்தும் பரிகரமென்கிறார். வேதாங்கங்கள் ஆறு எப்படியெனில்:—

> சிக்ஷா வ்யாகரணம் சந்தோ நிருக்தம் ஜ்யோதிஷம் ததா
> கல்பஶ்சேதி ஷடங்காநி வேதஸ்யாஹுர்மநீஷிண:

சிக்ஷை—என்று ஆரம்பித்து சிக்ஷாதிகளான வேதபரிகரங்களின் ஸ்வரூபத்தை விவரிக்கிறார். இவையனைத்தையும் பட்டர் தாமே ஸ்ரீரங்கராஜஸ்தவம் உத்தரசதகம் 18-ம் சுலோகத்தில் "சிக்ஷாயாம் வர்ணசிக்ஷா" என்று அருளிச்செய்தார். இந்த சுலோகத்தில் ஸங்க்ரஹமாகச் சொன்ன ஒவ்வொன்றின் ஸ்வரூபத்துக்கும் இங்கே விவரணம் கண்டுகொள்க.

தத்பரமாகையாலும்—என்னும் ஹேதுவாக்யம், மேலே வரும் "இவைகள் தத்வ ஹித புருஷார்த்த ப்ரதிபாதநத்தில் அப்ரயோஜகங்களாகக் கடவன"—என்பதோடு அன்வயிக்கிறது.

வர்ண ஸாமான்ய—ஸாமான்யமாவது ஸாம்யம்.

இதிஹாஸ புராணங்கள்—இவை. யிரண்டையும் சேர்த்து பத்தாவதாகக் கணக்கிட நேரிட்டது. பிரித்தால் வேதபரிகரங்களான வித்யைகள் பதி

புராணங்களில் இதிஹாஸங்கள்—தர்மாதி புருஷார்த்த விசேஷ ஸ்வரூபத்தைமுன்னிட்டுக்கொண்டு ப்ரவ்ருத்திக்கையாலே தத்வப்ரதிபாதநத்தில் விளம்பித ப்ரத்யயங்க ளாகையாலும்—இவைகள் தத்வஹித புருஷார்த்த ப்ரதிபாதநத்தில் அப்ரயோஜகங்களாகக் கடவன.

புராணங்கள் பரதத்வ பரமஹித பரமபுருஷார்த்தங்களில் ஸாக்ஷாதுபப்ரும்ஹணங்களாகக்கடவன.

புராணங்கள் தன்னில்—"ஸங்கீர்ணாஸ்ஸாத்விகாஶ்சைவ ராஜஸாஸ்தாமஸாஸ்ததா" என்று கல்ப விசேஷங்களை விபஜித்து,

யஸ்மிந் கல்பே து யத் ப்ரோக்தம் புராணம் ப்ரஹ்மணா புரா
தஸ்ய தஸ்யது மாஹாத்ம்யம் தத்ஸ்வரூபேண வர்ண்யதே
அக்நே: சிவஸ்ய மாஹாத்மியம் தாமஸேஷு ப்ரகீர்த்யதே
ராஜஸேஷு ச மாஹாத்ம்யமதிகம் ப்ரஹ்மணோ விது:
ஸங்கீர்ணேஷு ஸரஸ்வத்யா: பித்ரூணாஞ்ச நிகத்யதே
ஸாத்விகேஷ்வத கல்பேஷு மாஹாத்ம்யமதிகம் ஹரே:
தேஷ்வேவ யோகஸம்ஸித்தா கமிஷ்யந்தி பராம் கதிம்

என்றும் சொல்லுகிறபடியே ஸாத்விக கல்பங்களிலே ஸத்வோத்தரனான பிரம்மாவாலே ப்ரோக்தங்களாய்,—

"மஹாந் ப்ரபுர்வை புருஷ: ஸத்வஸ் யைஷ ப்ரவர்த்தக:" என்கிறபடியே ஸத்வ ப்ரவர்த்தகனான பரமபுருஷனுக்கு ப்ரதிபாதகங்களாய்,—

---

னென்றுகும். "புராணம் தர்மசாஸ்த்ரஞ்ச வித்யா ஹ்யேதாஶ்சதுர்தச"—என்னும் சுலோகத்திலேயே புராண சப்தத்தாலே இதிஹாஸமும் க்ராஹ்யம்.

இதிஹாஸங்கள்—ப்ரஹ்மபாகோபப்ரும்ஹணங்களான இதிஹாஸ புராணங்களில் இதிஹாஸமே ச்ரேஷ்டமென்பது ஸித்தாந்தம். இதை ஸ்ரீவசந பூஷண வியாக்யாநத்தில் மணவாளமாமுனிகள் விஸ்தாரகமாக நிரூபித்திருக்கிறார். இங்கே கைசிக மாஹாத்மியத்துக்கு மூலமான வராஹ புராணத்துக்கு ஏற்றம் சொல்லுவதற்காகப் புராண ஸாமான்யத்துக்கும் ஏற்றத்தை ஸ்தாபிக்கத் திருவுள்ளம் பற்றின படியாலே, "தர்மாதி புருஷார்த்த விசேஷ ஸ்வரூபத்தை முன்னிட்டுக்கொண்டு ப்ரவ்ருத்திக்கையாலே விளம்பித ப்ரத்யயங்களாகையாலும்" என்று இதிஹாஸங்களுக்குப் புராணங்களைக் காட்டிலும் குறைவு காட்டப்பட்டது.

"ஸத்வாத் ஸஞ்ஜாயதே க்ஞானம்" — என்றும்

"ஸத்வம் விஷ்ணு ப்ரகாசகம்" — என்றும்

சொல்லுகிறபடியே அக்ஞா, ஸம்சய, விபர்யயங்கள் தீரும்படி பரதத்வாதி விசேஷ நிஸ்சாயகங்களான ஸாத்விக புராணங்களே முமுக்ஷுக்களுக்கு உபஜீவ்யங்களாகக் கடவன.

ஸாத்விக புராணங்கள் தன்னில் இதர வக்த்ருகங்களான புராணங்களிற் காட்டில் பரமஸத்வ ஸமாச்ரயணன பகவான் வக்தாவாக ப்ரவ்ருத்தமான புராணமே உத்க்ருஷ்டமாகக் கடவது.

பகவத் வாக்யங்கள் தன்னிலும்—

"கள்ளவேடத்தைக் கொண்டுபோய்ப் புறம்புக்கவாறும் கலந்தசுரரை உள்ளம்பேதம் செய்திட்டுபிருண்ட வுபாயங்களும்" — என்கிறபடியே "திண்கழல்காலசுரார்க்குத் தீங்கிழைக்குந்திருமால்" — என்கிறபடியே ஸர்வேச்வரன் ஆஸுர ப்ரக்ருதிகளுடைய மோஹனார்த்தமாக அருளிச் செய்யும் வார்த்தைகள் ஸாத்விகர்களுக்கு உபஜீவ்யங்களாகா.

மற்றுமிவனுடைய அவஸ்தா விசேஷங்களில் வாக்யங்களைப் பார்த்தால்—

பரமபத நிலயன் அருளிச்செய்யும் வார்த்தை—பரன் வாக்யமாகையாலே பந்தமில்லாதார் கேட்கும் படியாயிருக்கும்.

---

பரமபதநிலயன்—என்று தொடங்கி அனுமானித்தறிய வேண்டியதாயிருக்கும் என்னுமளவான பதினொரு வாக்யங்களால் ஸர்வேசுவரனுடைய வராஹாவஸ்தை நீங்கலாக இதர அவஸ்தை பதினொன்றிலுமுண்டான வாக்கியங்களில் தோஷத்தைக் காட்டுகிறார். பரம் வ்யூஹம் விபவம் என்ற மூன்று அவஸ்தைகளை எடுத்துக் கொண்டு பரத்துக்காக பரமபதநிலயன் வாக்யங்களிலும், வ்யூஹத்துக்காக க்ஷீராப்தி நாதன் வாக்யங்களிலும், விபவத்துக்காக வராஹாவதாரம் நீங்கலான ஒன்பது அவதாரங்களின் வாக்யங்களிலும் தோஷம் சொல்லப்படுகிறது. வராஹாவதாரத்துக்குள்ள ஏற்றத்தை நிரூபிப்பதற்காக பட்டர் பகவானுடைய இதர அவஸ்தைகளில் சமத்காரமாக தோஷத்தை ஆரோபிக்கிறார். ஆகையால், பகவத் வாக்யங்களில் தோஷம் காட்டுவதில் நோக்கில்லை. தோஷமும் இல்லையாகையால், வார்த்தைகளில் சமத்காரமாகக்கூட தோஷம் காட்டமுடியாமல், பகவானுடைய அந்தந்த அவஸ்தையின் ஸ்வபாவத்தில் விரோதமிருப்பதுபோல ரஸமான வாக்ய ரசனையால் காட்டி, அந்த தோஷத்தை பகவானுடைய வார்த்தைகளில் அதிதேசம் பண்ணுகிறார்.

பரன்—அன்யன்.

க்ஷீராப்திநாதன் வாக்யங்களைப் பார்த்தால்—கடலோசையோடே கலந்து அர்த்த ப்ரத்யாயகமாகாது.

மத்ஸ்யரூபியானவன் வாக்யத்தைப் பார்த்தால்—ஒருக்காலும் கரையேற்ற மற்றவன் வார்த்தை யாகையாலே ஜடாசய ஸம்பந்தம் தோற்றும் படியாயிருக்கும்.

கூர்மரூபியானவன் வார்த்தையைப் பார்த்தால்—கம்பீரர் கலங்கவும் ஸ்திரர் பிரமிக்கவும், கீழ்மை விடாமலிருக்குமவன் சொல்லும் வார்த்தையாகையாலே மேற்கொள்ளும் வார்த்தையாயிராது.

---

பந்தம்—ஸம்பந்தம். இது ஸாமான்யமாகக் காட்டும் தோஷம். அதாவது பரமபதநிலயன் அன்யனாகையாலே ஸம்பந்தமில்லாதார் கேட்கும் படியாயிருக்கும் என்று மேலாகத்தோற்றும் தோஷம். பரமபதநிலயன் அன்யனானவன் என்று விரோதத்தைப் பரிஹரிப்பது பான்—பரமபுருஷனுடைய வாக்யமாகையாலே, பந்தமில்லாதார் - பத்தர்களான ஸம்ஸாரிகள் கேட்கமுடியாமல் முக்தர்களே கேட்கும்படியா யிருக்கும்—என்று.

கடலோசையோடே—க்ஷீராப்திநாதன் க்ஷீராப்தி நடுவிலே படுத்திருந்து சொல்லும் வார்த்தை கடலோசையில் கலந்து ஓசையின் மிகுதியாலே, வர்ணாத்மகமாயிருப்பது மாறி த்வன்யாத்மகமாகக் கேட்குமாகையால் அர்த்தமறியும் படியாயிராது.

கரையேற்றமற்றவன்—மீன் கரையேறினால் ஜீவியாதாகையால் கரையேறப்ராப்தியில்லாதது. "ஸ்வயம் தரிதுமக்ஷம: கிமஸாவபரான் பிதாரயேத்" என்றபடி தான் கரையேற முடியாதவன் தன் வாக்யத்தாலே பிறரை எப்படிக் கரையேற்றுவிப்பது!

ஜடாசய ஸம்பந்தம்—ஜலாசயம் என்று படிப்பது தவறு. ஜடாசயமென்றே படித்து விரோதத்தைப் பரிஹரிப்பதற்காக ஜலாசயமென்று மாற்றுக. மீன் சேதனமாகையாலே அது எப்படி ஜடமாயிருக்குமென்று தோற்றும் விரோதத்தை லடயோரபேதம் கொண்டு ஜலாசய ஸம்பந்தம் என்று மாற்றிப் பரிஹரிப்பது. கரையேற்ற மற்றவன் என்ற ஒரு தோஷம் காட்டினதோடு நில்லாமல், ஜடாசய ஸம்பந்தமென்று இரண்டாம் தோஷத்தையும் மத்ஸ்யாவதாரத்துக்குக் காட்டுகிறார். ஜலாசய ஸம்பந்தமாவது நீரில் கிடத்தல்.

கம்பீரர் கலங்கவும், ஸ்திரர் பிரமிக்கவும்—என்பது கிரியா விசேஷணம். கம்பீரர் கலங்கும்படியாகவும் ஸ்திரர் பிரமிக்கும் படியாகவும் என்று அர்த்தம். கூர்மம் ஸமுத்ரத்தில் ஸஞ்சரிக்கும்போது கம்பீரமாயும் ஸ்திரமாயுமுள்ள ஸமுத்ரத்துக்குக் கலக்கமும் பிரமமும் உண்டாகும். இந்த க்ரியா விசேஷணம் கீழ்மை விடாமலிருத்தலோடு அன்வயிப்பதைவிட "ஸஞ்சரித்துக்கொண்டு" என்று அர்த்தாத் கிடைக்கும் க்ரியையோடு அன்வயிக்கலாம்.

கீழ்மை விடாமலிருத்தலாவது ஆமை கீழ்நோக்கிச் செல்லுதல்.

ஸ்ரீந்ருஸிம்ஹன் வாக்யம்—கழுத்துக்குமேலொருபடியும் கழுத்துக்குக் கீழொருபடியுமாகையாலே ப்ரதோஷோதிதமா யிருக்கும்.

ஸ்ரீவாமநன் வாக்யம்—அடியிற் சொன்னபடி யன்றிக்கே விஷமபதமாயிருக்கும். இவ்வளவுமன்றிக்கே கவியாயிருப்பானொருத்தனளவிலே கண்ணழிவை யுடைத்தாயிருக்கும்.

பரசுராமன் வாக்யம்—பரசுதாரணம் பண்ணி ஸர்வாவஸ்தைகளிலும் க்ஷமை விட்டவன் வார்த்தையாகையாலே ப்ரத்யயம் பிறக்கும்படியிராது.

சக்ரவர்த்தித் திருமகன் வாக்யம்—கபிகளோடே கலந்து புண்ய

---

ஸ்ரீந்ருஸிம்ம—வராஹாவதாரத்தைப்பற்றி கடைசியில் சொல்ல வேண்டியிருப்பதால் கூர்மாவதாரத்துக்குப் பிறகு ந்ருஸிம்ஹாவதாரத்தை எடுக்கிறார்.

ப்ரதோஷோதிதமாவது—ந்ருஸிம்ஹாவதாரம் ஸாயங்காலம் ப்ரதோஷவேளையில் ஏற்பட்டது. அவதரித்த வேளையின் தோஷத்தை அவதரித்தவருடைய வார்த்தையில் காட்டுகிறார். ப்ரதோஷம்—ப்ரக்ருஷ்ட தோஷம் என்று ஸாமான்யமான அர்த்தம்.

அடியிற் சொன்னபடியன்றிக்கே என்பது—நரஸிம்ஹாவதாரத்துக்குச் சொன்ன கழுத்துக்குமேலும் கீழும் இரண்டிடத்திலுமுள்ள தோஷம்போல அல்லாமல் பதத்தில் மட்டுமுள்ள வைஷம்யத்தைக் குறிக்கும். வாமனனுடைய பதத்தில் - வார்த்தையில் வைஷம்யம் உண்டா என்றால், பதம் - பாதம், அதாவது காலடி. விஷமமாயிருந்தது—இரண்டடியா யிருக்க வேண்டியது த்ரிவிக்ரமனாகையாலே மூன்றடியாயிருந்தது என்று பரிஹாரம்.

கவியா யிருப்பானொருத்த னளவிலே கண்ணழிவை யுடைத்தாயிருக்குமென்னும் வாக்யத்தால் வித்வான்களுக்கும் த்ருஷ்டிஹாநியை உண்டுபண்ணவல்லது என்று தோன்றும் தோஷத்தை கவியாயிருக்கும் சுக்ராசாரியருக்கு வாமனன் கண்ணழிவை உண்டாக்கினதைக்கொண்டு பரிஹரித்துக் கொள்க. சுக்ராசாரியாருக்குக் கவி என்று பெயர். மஹாபலி வாமனனுக்கு பூமி தானம் செய்கையில் விக்னம் செய்த சுக்ராசாரியாருக்கு வாமனன் தன்னுடைய கைப் பவித்திரத்தினால் கண்ணழிவை உண்டாக்கினது புராண ப்ரஸித்தம்.

க்ஷமை விட்டவன்—க்ஷத்திரியரிடம் பொறுமையை விட்டவன் பரசுராமன் என்பது உண்மை. இந்த உண்மையான தோஷத்தையும் பரிஹரிக்க வேண்டும்மென்று திருவுள்ளம்பற்றி பட்டர் க்ஷமை யென்று பிரயோகித்தார். க்ஷமை விட்டவன் என்று தோஷமாகத் தோன்றும் அர்த்தம் க்ஷமை-பூமியை விட்டவன்—காச்யபருக்கு தானம் கொடுத்தவன் என்று குணகதனமாகிறது.

புண்யஜன—என்ற ஸமஸ்த பதத்துக்கு ஸம்ஸ்கிருதத்தில் ராக்ஷஸர்கள்

ஜனபாதாபர்யந்தமாயிருக்கும்.

பலபத்ரன் வாக்யம்—ஸர:ஸ்ரோதஸ்ஸாலே தாழப் போவாரையும் உத்பதப்ரவ்ருத்ராக்கினவன் வார்த்தை யாகையாலே மதவிகாரம் தோற்றியிருக்கும். அவ்வளவன்றிக்கே சுத்தவர்ணராயிருக்கச் செய்

---

என்று அர்த்தம். ராமவாக்யம் புண்யவான்களுக்கு பாதகம் என்று தோற்றும் விரோதத்தை ராக்ஷஸ பாதாபர்யந்தம் என்னும் அர்த்தம் கொண்டு பரிஹரிப்பது. யாதுதாந: புண்யஜந: இத்யமர:

கபிகளோடே கலந்து புண்யஜன பாதாபர்யந்தமாயிருக்கு மென்றால்—கபிகளோடே கலந்தது ஒரு தோஷம், புண்யஜன பாதாபர்யந்தமாயிருப்பது ஒரு தோஷம்—என்று இரண்டாகப் பிரிப்பதா, அல்லது—கபிகளோடே கலந்ததால் புண்யஜன பாதாபர்யந்தமா யிருக்கும்—என்று கபிகளோடு கலந்ததைப் புண்யஜன பாதத்துக்கு ஹேதுவாக்குவதா—என்று ஆலோசிக்க வேண்டும். கபிகளோடே கலந்ததையும் விரோதாபாஸத்தில் தோஷமாக எடுத்துக்கொண்டால், விரோதத்தைப் பரிஹரிக்கும்போது ராக்ஷஸ பாதத்துக்கு கபிகளோடே கலந்ததை ஹேதுவாக மாற்றமேண்டுமேயன்றி தனி தோஷமாக வைக்கமுடியாது. அதாவது—கபிகளோடே கலந்து—கபிகளுடைய உதவியை அடைந்து, புண்யஜன—ராக்ஷஸ பாதாபர்யந்தமாயிருக்கும்—என்று விரோத பரிஹாரத்தில் அர்த்தம். விரோதாபாஸத்தில் புண்யஜன—ஸாதுஜன பாதத்தில் கபிகளோடே கலந்ததைத் தனிதோஷமாக்க் கொள்ளாமல்,—ஹநுமான் பால்யத்தில் தன்னுடைய சேஷ்டையால் ரிஷிகளுக்கு ஸஹிக்கமுடியாத உபத்ரவத்தை உண்டுபண்ணி, "உன்பலம் உனக்கு மறந்துபோகவேண்டு" மென்று ரிஷிகள் சபித்த வ்ருத்தாந்தத்தைக்கொண்டு—கபிகளோடே கலந்தது ஸாதுஜன பாதாபர்யந்தமென்று விரோதாபாஸம் சொல்லலாம். திருவடி பால்யத்தில் ரிஷிகளுக்கு உபத்ரவம் செய்து சாபம் பெற்ற விவரம் கிஷ்கிந்தாகாண்டத்தின் கடைசியில் ஜாம்பவானால் சொல்லப்படுகிறது.

ஸரஸ்ரோதஸ்ஸாலே—ஸ்ரோதஸ்ஸாலே என்றே போதும். ஸர: என்பது அதிகம். ஸரித் என்றிருந்தாலாவது பொருந்தும். பலராமன் யமுனையைக் கலப்பையால் இழுத்து மேலே கொண்டுவந்தது ப்ரவாஹத்தாலே தாழப்போவாரையும் உத்பத ப்ரவ்ருத்தராக்கின தாகிறது.

மதவிகாரம்—பலராமன் மதுபானத்தினால் மயங்கியிருப்பர். யமுனையை இழுத்து மேலே கொண்டுவந்த உத்பதப்ரவ்ருத்தி மதவிகாரத்தைத் தோற்றுவிக்கிறது.

சுத்தவர்ணர்—பலராமனுடைய நிறம் வெளுப்பு. வெளுப்பா யிருப்பவர் கலப்பையுடையவர் என்றால் வெளுப்போடு ஏதேனும் கலப்புண்டோ என்றும் தோன்றும் விரோதத்தை கலப்பையை யுடையவர் என்றும் அர்த்தம் கொண்டு பரிஹரிப்பது.

தேயும் கலப்பையுடைவன் வார்த்தையாகையாலே விச்வஸிக்க வொண்ணுதபடியாயிருக்கும்.

ஸ்ரீக்ருஷ்ணன் வாக்யம்—பிறந்தவன்று தொடங்கி கைவந்த களவிலே காணலாம்படியாயிருக்கும்.

கல்க்யவதாரத்தின் வாக்யம்—வரப்போகிற தென்றிருக்குமது போக்கி ஒருவருக்கும் வந்திருக்கும் வார்த்தையன்று. அவ்வளவன்றிக்கே அனுமானித் தறியவேண்டியதா யிருக்கும்.

இப்படிக்கொரு அந்யதாசங்கை பண்ணவொண்ணுதபடி,

"ஏனத்தினுருவாகி நிலமங்கையெழில் கொண்ட
ஞானத்தினொளியுரு"— என்றும்
"ஏனத்துருவாயிடந்த ஞானப்பிரான்"— என்றும்

சொல்லுகிறபடியே ஸம்யக்ஞானோபகாரகனாகையாலும்,—

---

இங்கே பரசுராமன் க்ஷமைவிட்டவன், சக்ரவர்த்தித் திருமகன் புண்யஜன பாதகன், பலராமன் மதவிகாரமுள்ளவன்—என்று பட்டர் மூன்று ராமன்களுக்கும் காட்டின தோஷத்தையே தேசிகன் எடுத்து ராமமிச்ரர் என்னும் மணக்கால் நம்பியை அனுஸந்திக்கும்போது மூன்றுவித தோஷமுள்ள மூன்று ராமன்களைப்போல அல்லாமல், தோஷமில்லாத நான்காம் ராமனை மணக்கால்நம்பியை உபாஸிக்கிறேன் என்று

அநுஜ்ஜிதக்ஷமாயோகம் அபுண்யஜநபாதகம்
அஸ்ப்ருஷ்ட மதராகம் தம் ராமம் துர்யமுபாஸ்மஹே

என்னும் சுலோகத்தால் அருளிச்செய்தார்.

பரசுராமன் க்ஷமாயோகத்தை—பூமியின் ஸம்பந்தத்தை விட்டவன்; மணக்கால்நம்பி க்ஷமையையும் யோகாப்யாஸத்தையும் விடாதவர்.

ராமன் புண்யஜன (ராக்ஷஸ) பாதகன்; மணக்கால்நம்பி புண்யஜநங்களுக்கு—ஸாதுக்களுக்கு அபாதகர்.

பலராமன் மதராகங்களால் ஸ்பர்சிக்கப்பட்டவன். மணக்கால்நம்பி மதராகங்களால் ஸ்பர்சிக்கப்படாதவர்—என்னும் ரஸமான அர்த்தமுள்ள தேசிக ஸ்ரீஸூக்திக்கு பட்டர் ஸ்ரீஸூக்தி ஆதாரமாயிருப்பது இங்கே ரஸிகர்களால் அநுபவிக்கத்தக்கது.

இப்படிக்கொரு—என்று தொடங்கி இப்புராணம் எல்லாப் புராணங்களிலும் உத்க்ருஷ்டமாகக்கடவது என்னு மளவாக வராஹ அவதாரம், புராணம், இவற்றின் பெருமையை நிரூபிக்கிறுர்.

ஸம்யக்ஞானோபகாரகன்—என்பது பாட்டிலுள்ள ஞானப்பிரான் என்னும் பதத்தினல் கிடைத்த அர்த்தம்.

"பன்றியாயன்று பாரகங்கீண்ட பாழியானாழியானருளே
நன்று நானுய்ய"—

என்று ஞானவான்கள் விச்வஸித்துக் கைக்கொள்ளும்படியான க்ருபாதிசயத்தையுடையவனாகையாலும்,—

"ஆதி முன்னேனமாகிய அரணாய மூர்த்தியானது நம்மையாளுமரசே"—என்றும் சொல்லுகிறபடியே ரக்ஷகத்வ பூர்த்தியையுடையவனாகையாலும்,—

—"இருங்கர்ப்பகஞ்சேர்
வானத்தவர்க்குமல்லாதவர்க்கும் மற்றெல்லாயெவர்க்கும்
ஏனத்துருவாயிடந்த ஞானப்பிரானையல்லாலில்லை நான்கண்ட
நல்லது"—

என்று ஆழ்வாரும் ப்ரதமப்ரபந்தத்திலே ஸர்வர்க்கு மிவனையொழிய ரக்ஷகாந்தரமில்லை யென்று அறுதியிட்டு, சரம ப்ரபந்தத்தின் முடிவிலும்,

"நீலவரையிரண்டுபிறைகவ்வி நிமிர்ந்த தொப்பக்
கோலவ்வராகமொன்றாய் நிலங்கோட்டிடைக் கொண்ட வெந்தாய்
நீலக்கடல் கடைந்தாயுன்னைப் பெற்றினிப் போக்குவனோ"—

என்றும் அவதாரங்களெல்லாம் கிடக்கச் செய்தே இந்த அவதாரத்தில் தாம் அந்தமில்பேரின்பம் பெற்றபடியை அருளிச் செய்கையாலும்,—

அவனுடைய ரக்ஷகத்வமானது உத்தாரகமான ரக்ஷகத்வமாகையாலும்,—

இப்படியிவன் பண்ணுகிற ரக்ஷணம் வாத்ஸல்ய மூலமென்று தோற்றும்படி—

---

க்ருபாதிசயத்தையுடையவன்—என்பது பாட்டிலுள்ள அருளே—என்னும் பதத்தினால் கிடைத்தது.

ரக்ஷகத்வ பூர்த்தியையுடையவன்—என்பது பாட்டிலுள்ள அரணாய, நம்மையாளுமரசே என்னும் பதங்களால் கிடைத்த அர்த்தம்.

அவதாரத்தில் தாம்—என்று அப்பங்கார் புஸ்தகம். அவதாரத்தைத் தாம் பண்ணி—என்று இதர புஸ்தகங்கள்.

உத்தாரகமான ரக்ஷகத்வம்—என்பது நிலம்கோட்டிடைக் கொண்டவெந்தாய்—என்பதால் கிடைத்தது. பிரளயத்தில் அழுந்தி மூழ்கிப்போன பூமியை வராஹப்பெருமாள் மேலே எடுத்து ரக்ஷிக்கையாலே அவருடைய ரக்ஷகத்வம் உத்தாரகமான ரக்ஷகத்வமாகிறது.

"ஏனமாய் நிலங்கீண்ட என்னப்பனே"— என்றும்
"அப்பனூன்றியிடந் தெயிற்றில் கொண்ட நாள்"— என்றும் வாத்ஸல்யா விநாபூதமான பித்ருத்வ மிவனுக்குண்டென்று சொல்லுகையாலும்— (வராஹாவதாரமே ஸர்வோத்க்ருஷ்டமாகக் கடவது.)

ஸகல லோக பிதாவான இவனை ஸகல லோக மாதாவான பூமிப் பிராட்டி பிரஜைகளுக்கு ஹிதமேதென்று ப்ரஶ்நம் பண்ண ப்ரவ்ருத்தமான புராணமாகையாலே, இப்புராண மெல்லாப் புராணங்களிலும் உத்க்ருஷ்டமாகக் கடவது.

இது ஸர்வேசுவரன் நாச்சியாரைப் பார்த்தருளிச் செய்யும் வார்த்தையாகையாலே,—

---

வாத்ஸல்யாவிநாபூதமான பித்ருத்வம்—என்னுமது பாட்டிலுள்ள 'அப்பனே' என்பதால் கிடைக்கும் அர்த்தம்.

சொல்லுகையாலும்—என்ற அநந்தரம், "வராஹாவதாரமே ஸர்வோத்கிருஷ்டமாகக்கடவது" என்று கூட்டிக்கொண்டால் ஸுகமமாகும். இதர அவதாரங்களுக்குக் குறைகாட்டி, "இப்படிக்கொரு அந்யதாசங்கை பண்ண வொண்ணாதபடி"—என்று தொடங்கின வாக்யம் வராஹாவதாரத்தின் பெருமையைச் சொல்லுவதிலேயே நோக்குள்ளதாகையால், அதற்கு அநுகுணமாக இங்கே காட்டியபடி வாக்யத்தைக் கூட்டிக்கொள்வது.

ஸகலலோகபிதாவான—என்றுதொடங்கி "உத்கிருஷ்டமாகத் தட்டில்லை"—என்னுமளவான வாக்யம் வராஹபுராணத்துக்குள்ள வக்த்ரு வைலக்ஷண்யத்தையும் ஶ்ரோத்ரு வைலக்ஷண்யத்தையும் காட்டி, வராஹபுராணமே ஸர்வோத்கிருஷ்டமென்று ஸ்தாபிக்கிறது. இந்த வக்த்ருச்ரோத்ரு வைலக்ஷண்யத்தை தேசிகன் ரஹஸ்யசிகாமணியில் விஸ்தாரமாக அருளிச்செய்கிறார். அதை இதன் அனுபந்தத்தில் காண்க.

இது ஸர்வேச்வரன்—இப்புராணம் இந்த கைசிகாத்யாயத்தால் சொல்லும் கானரூபமான உபாயவிசேஷத்தையே ஆண்டாள் பின்பற்றினாள் என்று நிரூபித்து, அதன்மூலமாயும் வராஹாவதாரத்தின் ஏற்றத்தைச் சொல்லுவதற்காக ஆண்டாள் பெருமாளைப் பொய்யர் என்று நிந்தித்ததன் கருத்தை வெளியிடுகிறார் "இது ஸர்வேச்வரன்"—என்று தொடங்கி, "நாச்சியார் தாமே யருளிச் செய்தார்"—என்னுமளவாக.

இது - இந்த வராஹபுராணம். நாச்சியாரை - ஆண்டாளை.

இது ஸர்வேச்வரன்—என்று தொடங்கின விஷயத்தின் தாத்பர்யம் யாதெனில்—வராஹப்பெருமாள் அருளிச்செய்தபுராணம் தன் பத்தினிக்குச் சொன்னதொன்றாகையாலே, தாத்காலிகமாக் அவளுக்கு த்ருப்தி யுண்டாவதற்கான தாய்ப் பரமார்த்தமாயிராமலிருக்குமோ என்ற சங்கை யாவருக்கும் ஸஹஜமாகும். எனெனில். தன்னிடம் வருவதாகச் சொன்ன பெருமாள் வாராததுகண்டு

"பாம்பணையார்க்கும் தம்பாம்புபோல் நாவுமிரண்டுளவாய்த்து" என்கிறபடியே இதுவு முபாலம்ப விஷயமாகிலோ வென்னில்—

அவ்வார்த்தையும்—

"செம்மையுடைய திருவரங்கர் தாம்பணித்த
மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டுசித்தர் கேட்டிருப்பர்"—

என்றறிந்திருக்கச் செய்தேயும், விச்லேஷக்லேசம் பொறுக்கமாட்டாதபடியான த்வராதிசயத்தாலே— "பாம்பணையார்க்கும் தம் பாம்புபோல் நாவுமிரண்டுளவாய்த்து"— என்று அநந்தபுஜக ஸம்ஸர்கதோஷத்தாலே பொய்யாகிறதோ வென்று அதிசங்கை பண்ணினளித்தனை.

இவ்வார்த்தை அப்படியன்றிக்கே,

"பார்வண்ணமடமங்கை பத்தர்"—

என்கிறபடியே நாச்சியார் பக்கலுண்டான பாவபந்தத்தாலே ப்ரளயார்ணவ மக்னையான இவளை அதில்நின்று மேலெடுத்து, இவளுடைய க்லேசத்தைத் தவிர்த்துவைத்த வளவிலும், ஸம்ஸாரார்ணவ மக்ன

---

ஆண்டாளே பாம்பணையார்க்கும் பாம்புபோல் நாவிரண்டாயிற்று—என்று நிந்தித்திருக்கிருள். ஆகையால், வராஹப்பெருமாள் நாச்சியாருக்குச்சொன்ன இப்புராணம் பரமார்த்தமாமோ என்றால்,—பெருமாள் குறித்த நேரத்தில் வாராததால் அவருடைய பிரிவைத்தாங்க முடியாத த்வரையாலே நாவிரண்டாயிற்றென்று ஆண்டாள் சொன்னளேயன்றி, அது உண்மையான நிந்தையன்று. பெருமாளுடைய வார்த்தையெல்லாம் ஸத்யம் என்று ஆண்டாளுக்கே தெரியும். "திருவரங்கர் தாம் பணித்த மெய்ம்மைப் பெருவார்த்தை"—என்று ஆண்டாளே மற்றோரிடத்தில் சொல்லியிருக்கிருள்.

இதுவும் வராஹபுராணமும்.

உபாலம்பவிஷயம்—நிந்தாவிஷயம்

அவ்வார்த்தையும்—பாம்பணையார்க்கும் என்ற வார்த்தையும்.

பண்ணினள் - ஆண்டாள்.

இவ்வார்த்தை—தாத்காலிகமான ப்ரீதிக்காகச் சொல்லும் ப்ரணயகாலமல்லாமல் ஸமுத்ரத்தில் மூழ்கிப்போன பூமிப்பிராட்டியை அதிலிருந்து எடுத்துத் தேற்றி . . . . . . ஸம்ஸாரார்ணவ மக்னரான தன் ப்ரஜைகளுக்கு ஹிதம் கேட்கும் ப்ரளயகாலமென்று காட்டி, பெருமாள் சொன்ன வார்த்தை பரமார்த்தமானது என்று நிரூபிக்கிறார் "இவ்வார்த்தை" என்று தொடங்கி "அதிசங்கை பண்ணவேண்டியதில்லை" என்னுமளவாக. ஆகையால், பத்தினிக்குச் சொன்னதாகையாலே வராஹ புராணம் பரமார்த்தமாயிராதென்று சங்கிக்க வேண்டியதில்லை. இவ்வார்த்தை - இந்தப் புராணம்.

ரான தன் ப்ரஜைகளினுடைய து:க நிவ்ருத்திக்கொரு ஸுகரோபாயம் காணாமையாலே விஷண்ணையாயிருக்கிற இவளைக் கண்டருளின பகவான் இவள் தேறும்படியாகச் சொன்ன வார்த்தை யாகையாலே அதிசங்கை பண்ணவேண்டிய தில்லை.

ஆகையாலே, அவஸ்தாந்தராங்களிற் போலன்றிக்கே, வராஹாவஸ்தையில் தமக்கருளிச் செய்யும் வார்த்தை தாப்பாரென்னு பர்த்தத்தை—

பாசி தூர்த்துக்கிடந்த பார்மகளுக்குப் பண்டொருநாள்
மாசுடம்பில் நீர்வாரா மானமிலாப் பன்றியாம்
தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனார்
பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே.

என்று நாச்சியார் தாமே அருளிச் செய்தார்.

ஆகையாலிந்தப் புராணமெல்லாப் புராணங்களிலும் உத்கிருஷ்டமாகத் தட்டில்லை. எங்ஙனே யென்னில்,—

இப்புராணந்தன்னில் பகவானருளிச் செய்த உபாயங்களெல்லாத்திலும் கானரூபமான உபாயமே அத்யந்தோத்க்ருஷ்டமாகக் கடவது. இவர் பலவுபாயங்களு மருளிச்செய்யக் கேட்டருளின நாச்சியார் உபாயங்களெல்லாம் கிடக்கச் செய்தே இக்கான ரூபமான உபாயத்தைத் தாம்பற்றி,—

பாற்கடலுட்பையதுயின்ற பரமனடி பாடி— என்றும்
ஓங்கியுலகளந்த வுத்தமன்பேர் பாடி— என்றும்
தூமலர்கள் தூவித்தொழுது வாயினால் பாடி— என்றும்
நாராயணன் மூர்த்தி கேசவனைப் பாடவும் நீ— என்றும்
பாவாயெழுந்திராய் பாடிப்பறைகொண்டு— என்றும்
நின்முற்றம் புகுந்து முகில்வண்ணன்பேர் பாடி— என்றும்
மனத்துக்கினியானைப் பாடவும் நீ— என்றும்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடி— என்றும்
பங்கயக் கண்ணானைப் பாடேலோர்— என்றும்
மாற்றாரை மாற்றழிக்க வல்லானைப் பாடேலோர்— என்றும்
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்— என்றும்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி என்றும்
கோவிந்தா உன்தன்னைப் பாடிப் பறைகொண்டு— என்றும்

இவரருளிச் செய்யக் கேட்ட உபாயங்களெல்லாத்திலும் இவள் திரு வுள்ளத்துக்கேறித் தான் பாடின பாட்டிலே அனுஷ்டித்துக் காட்டின உபாயமிதுவேயாயிருக்கும். ஆகையாலே, பலப்ரதேசங்களிலும் தாம் பாடின பாட்டை யருளிச்செய்து, பாடவல்ல நாச்சியாரென்றும் பேர் பெற்றபடியாலும், இக்கீதரூபமான உபாயமே முக்யமாகக் கடவ தென்றும் நாச்சியாரைப் பார்த்தருளிச் செய்தருளினர்.

---

பல ப்ரதேசங்களிலும் - திருப்பாவையில்.

நாச்சியாருடைய பிரபந்தங்கள் திருப்பாவை, நாச்சியார் திருமொழி—என்று இரண்டு. இவற்றில் திருப்பாவையிலிருந்து மட்டும் கான விஷயமான ஸ்ரீஸூக்திகள் பதிமூன்று காட்டுகிறார். நாச்சியார் திருமொழியில் கான விஷயமான ஸ்ரீஸூக்திகள் இல்லையா? ஏன் திருப்பாவை ஸ்ரீஸூக்திகளை மட்டுமே காட்டுகிறார்?—என்றால் நாச்சியார் திருமொழி மொத்தம் 143-பாட்டுக்கு "குளிரருவி வேங்கடத்தென் கோவிந்தன் குணம்பாடி"—என்ற ஒரு வார்த்தையே கானவிஷயமான கண்டோக்தி காண்கிறது. திருப்பாவை வார்த்தை பதிமூன்றும் பட்டரால் பாட்டின் வரிசையிலேயே எடுக்கப்பட்டுள்ளது.

பாடவல்ல நாச்சியார்—என்று ஆண்டாளுக்குள்ள பேர் பட்டருக்கு முன்னதாகவே ஏற்பட்டதுபோலக் காட்டுகிறது "பேர் பெற்றபடியாலே" என்னும் பட்டர் ஸ்ரீஸூக்தி.

நாச்சியாரை - பூமிப்பிராட்டியை.

அருளிச்செய்தருளினர் - வராஹநாயனர்.

ஶ்ரீவராஹ உவாச—

ஜாகரே து விசாலாக்ஷி ஜாநதோ வாப்யஜாநத:
யோ மே ப்ரகாயதே கேயம் மம பக்த்யா வ்யவஸ்தித: (1)

இந்த ஶ்லோகத்தில் தமக்குப் பாடுவான் பாடும்படியை அருளிச் செய்கிறார்—

பாடவல்லானொருத்தன் ஆகர வ்ரத நிஷ்டனாய் "ப்ராஹ்மே முஹூர்த்தே சோத்தாய" என்கிறபடியே ப்ராஹ்மமான முஹூர்த் தத்திலே வந்து—நாம் முகம் கொடுத்துக் கேட்கிலுமாம், நாம் ஜகத் ரக்ஷணசிந்தையிலே அன்யபரராயிருக்கிலுமாம்—நம்முடைய குணப தாநங்களை யுள்ளீடாக வைத்துப் புணர்க்கப்பட்ட காதைகளை ஒரு பலத்தையும் நினையாமல் நம்முடைய பக்கல் பக்த்யதிசயத்தோடே நமக்கே பாடக் கடவான்—என்று நாச்சியாரைப் பார்த்தருளிச் செய் கிறார்.

யாவந்தி த்வக்ஷராண்யஸ்ய கேயமாநே யசஸ்விநி
தாவத்வர்ஷ ஸஹஸ்ராணி ஸ்வர்கலோகே மஹீயதே (2)

இப்படி உம்முடைய புகழையும் நம்முடைய புகழையு முள்ளீ டாக வைத்துப் புணர்க்கப்பட்ட காதைகளை நமக்குப் பாடினால், அந்த

---

பட்டர் இந்த மாஹாத்மியத்தில் ஒரு பதத்தையும் விடாமல் வியாக்யானிக் கிறார்; சில விடங்களில் தம்முடைய அபிப்ராயத்தையும் சேர்க்கிறார். தமிழில் வாசக நடையாகவே வியாக்யானித்திருப்பதால் மூலத்திலுள்ள ஓரோர் பதத்துக் கும் ரஸமான அர்த்தம் அருளிச் செய்வதை கவனித்துக் கொள்க. மொழிபெ யர்ப்பதற்கும் தாத்பர்யார்த்தம் எழுதுவதற்கும் இந்த மாஹாத்மிய வ்யாக்யா னமே மார்கதர்சியாகிறது.

1. இந்த ஶ்லோகத்தில்—என்னும் வாக்யத்தினால் ஶ்லோகம் கானப்ர காரத்தை விதிப்பதாக ஏற்படுகிறது. ஆகையால், ப்ரகாயதே என்னும் க்ரியை யை விதிப்ரமாக்கி ஹே, விஶாலாக்ஷி! யஸ்து கானகுசல: ஸ:ஜாகரே ஸ்தித: மம பக்த்யா வ்யவஸ்திதஶ்ச, ஜாநதோ வாப்யஜாநதோ மே கேயம் ப்ரகாயேத்- என்று அன்வயித்துக் கொள்க. பாஸ்மைமதம் ஆத்மநேபதமாக ப்ரகாயதே என்று ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது.

பாடவல்லா னொருத்தன் என்று யத் சப்த ஸ்வாரஸ்யத்தால் கிடைக்கிறது.

ப்ராஹ்மே முஹூர்த்தே இத்யாதியால் கானம் செய்ய வேண்டிய காலத் தைக் காட்டுகிறார்.

காந்தகளுக்குண்டான அக்ஷரங்களுக்கு, இசையாலே மேலேற்றமாக ஒரோரக்ஷரங்களுக்கும் ஆயிரமாயிரம் ஸம்வத்ஸரம் ஸ்வர்கலோகத்திலே யிருக்கும் காணும் நம்பாடுவான்—என்றருளிச் செய்கிறார்.

ரூபவாந் குணவாந் சுத்தஃ ஸர்வதர்மப்ருதாம் வரஃ
நித்யம் பச்யதி வை சக்ரம் வஜ்ரஹஸ்தம் ந ஸம்சயஃ (3)

அவன் ஸ்வர்கலோகத்தி லிருக்குமளவும் அங்குள்ளாரெல்லாரிலும் வடிவழகியனுமாய், குணவானுமாய், ஸ்வர்க ஸுகத்திலே ஸக்தனுமன்றிக்கே, ஸர்வதர்மங்களையு மறிந்து, அங்கும் நம்மை மறவாமலிருக்கிற இவன் அத்தேசத்துக் கதிபதியான இந்திரன் தன் ஆயுதத்துடனே வந்து ஸேவித்து நிற்க, அபாங்க வீக்ஷணம் பண்ணி யிருக்கும் காணும் நம்பாடுவான்—என்றருளிச் செய்கிறார்.

மத்பக்தஸ்சாபி ஜாயேத இந்த்ரேணைகபதே ஸ்திதஃ
ஸர்வதர்மகுணஶ்ரேஷ்டஸ்தத்ராபி மம லுப்தகஃ (4)

இப்படி இந்திரன் ஸேவித்துக் கொண்டிருக்கச் செய்தேயும், இந்திரனைப்போலே அங்கு நம்மை மறந்திருக்கையின்றிக்கே, நமக் காராதனங்களான கர்மங்களைச் செய்து நம்மையே அனுஸந்தித்துக் கொண்டிருப்பன் நம்பாடுவான்—என்றருளிச் செய்கிறார்.

இந்த்ரலோகாத் பரிப்ரஷ்டோ மம கேயபராயணஃ
ப்ரமுக்தஃ ஸர்வஸம்ஸாரைர்மம லோகஞ்ச கச்சதி (5)

இந்திரலோகத்திலிருக்குமளவும் அங்குள்ளாரெல்லாரையு மழைத்துப் பாட்டுக் கேட்பிக்குமளவன்றிக்கே, நம்மை நினைத்துப் பாடிப்

---

2. இசையாலே—காதையிலுள்ள அக்ஷரங்களை இசையாகப்பாடும்போது ஆரோஹணவ ரோஹணங்களில் ஒரே அக்ஷரம் எவ்வளவு தாம் மேலேற்றத்தை அடையுமோ அவ்வளவு ஆயிரம் ஸம்வதஸரம் என்று அர்த்தம். மேலேற்றமாக என்ற அனந்தரம் 'உண்டாகும்' என்று கூட்டி வாக்யத்தை எளிதாக அன்வயித்துக் கொள்க. இசைவாலே என்று சில புஸ்தகங்களிலிருக்கிறது. இசையாலே என்ற பாடமே தகும்.

நம்பாடுவான்—கடைசியில் " மம காயக :" என்றுள்ளதற்கு இது சரியான தமிழ். சண்டாளனுக்கு பட்டர் இப்படிப் பேர் வைத்ததாகச் சொல்லமுடியாது. "நம்பாடுவானை வீட்டில் விட்டுவா" என்று நம்பெருமாள் அரையருக்கு அருளப்பாடு இடுவதுபோல, மம காயக: என்று வராஹப் பெருமாள் தன் காயகனைச் சொன்ன வார்த்தைக்கே நம்பாடுவான் என்று பட்டருடைய தமிழ்

போருகையாலே, அங்குநின்றும் இவனைக் கொண்டுபோய் நம் பெரிய வீட்டிலே "ஏதத் ஸாம காயந்நாஸ்தே"—என்றெப்போதும் நமக்கே பாடியிருக்கும்படி வைத்தோம் காணும்—என்றருளிச் செய்கிறார்.

ஏவந்து வசநம் ஶ்ருத்வா தத்ப்ரஸாதாத் வஸுந்தரா
வராஹரூபிணம் தேவம் ப்ரத்யுவாச சுபாநநா (6)

இப்படி வராஹநாயனார் அருளிச் செய்யக் கேட்டுத் திருவுள்ளத்திலுகப்பெல்லாம் திருமுகத்திலே தோற்றும்படி அலர்ந்த திருமுகத்தையுடையவளாய்க் கொண்டு ஸ்ரீவராஹநாயனாரைப் பார்த்து பூமிப்பிராட்டி ஒரு வார்த்தை விண்ணப்பம் செய்கிறாள்.

அஹோ கீதப்ரபாவோ வை யஸ்த்வயா பரிகீர்த்திதஃ
கஸ்ச கீதப்ரபாவேண ஸித்திம் ப்ராப்தோ மஹாதபாஃ (7)

வேதங்களாதல், ருஷிகளாதல் சொல்லுகையன்றிக்கே தேவரீர் தாமே அருளிச் செய்யும்படியாயிருந்தது. இப்படிக்கொத்த கீதப்ரபாவத்தாலே தேவரீர் திருவடிகளைப் பெற்றவன் யாவனொருவன், அவனை யருளிச்செய்யவேணும்—என்று விண்ணப்பம் செய்தார்.

ஸ்ரீவராஹ உவாச—

இப்படி விண்ணப்பம் செய்த பூமிப்பிராட்டியைப் பார்த்து வராஹநாயனார் அருளிச் செய்கிறார்—

ஶ்ருணு தத்வேந தே தேவி கத்யமாநம் யஶஸ்விநம்
யஸ்து கீதப்ரபாவேண ஸித்திம் ப்ராப்தோ மஹாதபாஃ (8)

"பாம்பணையார்க்கும் தம் பாம்புபோல் நாவுமிரண்டுளவாய்த்து"—என்று நீர் நம்மைச் சொல்லும்படி உம்மோடு நாம் ரஸித்துச்

---

மொழி பெயர்ப்பு. பட்டர் சுலோகந்தோறும் சண்டாள சப்தத்தைவிட்டு நம்பாடுவானென்றே அருளிச்செய்வதால், இது அவனுக்கு பட்டர் வைத்த பெயராகவே வ்யவஹரிக்கப்படுகிறது.

6. வராஹநாயனார்—பிள்ளை, முதலி, உடையார், நாயனார், பிரான், ஆச்சான்—என்று உத்தமமான அர்த்தம் வாய்ந்த பெயர்களே நம் ஆசாரியர்களுக்கு வழங்கின. இவை இப்பொழுது பிராம்மணர்களால் விடப்பட்டு இதரர்களுக்காகி ஒரோர் வகுப்பைக் குறிப்பனவாய் மாறிவிட்டன. நாயனார் என்னும் பதம் வராஹாவதாரம் தவிர இதர அவதாரங்களுக்கு உபயோகிக்கப்பட்டதாய்த் தெரியவில்லை.

சொல்லுகிற வார்த்தையாக நினையாதே இது ஸத்யமான வார்த்தையாயிருக்கும். யாவனொருவன் நம்மைப் பாடி நம் பெரியவீடு பெற்றான் அவனைச் சொல்லுகிறோம் காணும்; கேளீர்—என்றருளிச் செய்கிறார்.

அஸ்தி தக்ஷிண திக்பாகே மஹேந்த்ரோ நாம பர்வதஃ
தத்ர க்ஷீரநதீ புண்யா தக்ஷிணே ஸாகரங்கமா (9)

ஸரீர் பிராட்டியே! தக்ஷிண திக்கிலே மஹேந்திரமென்றொரு பர்வதம் ப்ரவஸித்தமாயிரா நின்றது. அவ்விடத்தில் க்ஷீரநதி யென்றொரு நதியானது தக்ஷிண ஸமுத்ரகாமினியா யிராநின்றது.

தத்ர ஸித்தாச்ரமே பத்ரே சண்டாலஃ க்ருதநிஸ்சயஃ
தூராஜ்ஜாகரணே காதி மம பக்த்யா வ்யவஸ்திதஃ (10)

முன்பு நீரும் நாமும் குறுங்குடியாகக் கட்டியிருந்த ஆச்ரமத்திலே பாபயோனியிலே பிறந்தானொருவன் நமக்குப் பாடவேணுமென்று ஸங்கல்பித்து ஜாகரவ்ரத நிஷ்டனாய், மேலும் நம்பக்கல் பக்தியோடே ப்ராஹ்ம முஹூர்த்தத்திலே வந்து தன் ஜாத்யநுகுணமாக தூரத்திலே வந்து நின்று பாடினான் காணும்—என்றருளிச் செய்தார்.

ஏவந்து காயமாநஸ்ய கதாஃ ஸம்வத்ஸரா தச
ஶ்வபாகஸ்ய குணஜ்ஞஸ்ய மத்பக்தஸ்ய வஸுந்தரே (11)

இப்படி அந்த்யஜாதியிலே பிறந்திருக்கச் செய்தேயும், நம் குணநுஸந்தானத்தைப் பண்ணி, நமக்கு பக்தனாய் வந்து, இப்படி பத்து ஸம்வத்ஸரம் பாடினான் காணும்—என்றருளிச் செய்கிறார்.

---

9. தக்ஷிண ஸமுத்ரகாமினி—என்பது தாத்பர்யார்த்தம். திருக்குறுங்குடியில் பாயும் பாலாறு குலசேகர பட்டணத்துக்கும் தெற்கில் ஸமுத்திரம் சேருகிறது. இது கிழக்கு ஸமுத்ரமாயிருந்தாலும் தனுஷ்கோடிக்குத் தெற்கிலுள்ளது தக்ஷிண ஸமுத்ரமென்றே வியவஹாரம்.

10. முன்பு நீரும் நாமும் குறுங்குடியாகக்கட்டி—அந்த ஊருக்குத் திருக்குறுங்குடி என்று பெயர் ஏற்பட்ட காரணத்தைத் தெரிவிக்கிறார். பெருமாளும் நாச்சியாரும் அங்கே குறுங்குடி - சிறுகுடிசை கட்டி வாஸம் செய்த வ்ருத்தாந்தம் அவ்வூர்மாஹாத்மியத்திலும், புராணங்களிலும் தேடத்தக்கது. குறுங்குடி என்பதைக் குரங்கபுரி என்று மாற்றி, அந்த ஊருக்கு ஸ்ரீமத்போத குரங்க நாம நகரே—என்றொரு ஶ்லோகமும் ஏற்பட்ட விவரம் ஆலோசிக்கத்தக்கது.

கௌமுதஸ்ய து மாஸஸ்ய த்வாதச்யாம் சுக்லபக்ஷகே.
ஸுப்தே ஜநே கதே யாமே வீணமாதாய நிர்யயௌ (12)

பின்பொரு கார்த்திகை மாஸத்தில் சுக்லபக்ஷத்வாதசியின் ராத்திரி ஒரு யாமத்துக்கு மேல் எல்லாரு முறங்கினவளவிலே, தான் ஜாகரவ்ரத நிஷ்டனுகையாலே உணர்ந்திருந்து, நாமிருக்கிற விடத்திலே வந்து, நமக்குப் பாடுவதாகக் கையும் வீணையுமாய்க் கொண்டு தன் வீட்டில் நின்றும் புறப்பட்டான் காணும்—என்றருளிச் செய்தார்.

ததோ வர்த்மநி சண்டாலோ க்ருஹீதோ ப்ரஹ்மரக்ஷஸா
அல்பப்ராணஃ ஸ்வபாகோ வை பலவாந் ப்ரஹ்மராக்ஷஸஃ

அநந்தரம் நடுவழியிலே வந்த வளவிலே, ஒரு ப்ரஹ்ம ரக்ஷஸ்ஸின் கையி லகப்பட்டான். அந்த ப்ரஹ்மரக்ஷஸ்ஸு ஊண்மல்குமோடு பருத்தவனுகையாலே பலவானுயிருந்தான். நம்பாடுவான் நினைந்து நைந்து உள்கரைந்துருகுகிறவ னுகையாலே, துர்பலனு யிருந்தான் காணும்—என்றருளினர்.

துஃகேந ஸது ஸந்தப்தோ நச ஸக்தோ விசேஷ்டிதும்
உவாச வசநம் மந்தம் மாதங்கோ ப்ரஹ்மராக்ஷஸம் (14)

நம்பாடுவான் பலவானல்லாமையாலே, பாக்ரமித்து விடுவித்துக் கொண்டுபோக ஸமர்த்தனுகவில்லை. ப்ராஹ்மண ஜாதியுமல்லாமையாலே, ஒரு பஞ்சாதியைச் சொல்லி விடுவித்துக் கொள்ளவும் ஸமர்த்தனுகவில்லை. நம்முடைய பக்கல் பரந்யாஸமே பண்ணி ப்ரஹ்மரக்ஷஸ்ஸைப் பார்த்து மதுரமாக ஒரு வார்த்தை சொன்னன் காணும்—என்றருளிச் செய்தார்.

---

13. ஊண்மல்குமோடு பருத்தவன்—என்பது திருவாய்மொழி 3-ம்பத்து 7-ம்பாட்டு.

14. ஒரு பஞ்சாதி—வேதம் ஐம்பது ஐம்பது வாக்யங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பாகத்துக்கும் ஒரு பஞ்சாஸத் என்று பெயர். பஞ்சாஸத் என்பதே பஞ்சாதி எனத் திரிந்தது.

பஞ்சாதியைச் சொல்லி விடுவித்துக்கொள்கையாவது—பிசாசங்கள் வேதகோஷம் கேட்டவாறே பயந்துபோகும். பிரம்மரக்ஷஸ்ஸு வேதகோஷத்துக்கு பயப்படாதென்றும், வேதகோஷம் கேட்டால் தானும்கூட வேதம் சொல்லும் என்றும் கேள்வி. பஞ்சாதி சொல்லி பிரம்மரக்ஷஸ்ஸை ஸந்தோஷிப்பித்து விடுவித்துக் கொள்ளலா மென்ற திருவுள்ளத்துடன் பட்டர் இப்படி அருளிச் செய்கிறுர் போலும் !

கச்சாமி ஸந்தோஷயிது மஹம் ஜாகரணே ஹரிம்
காமேந புண்டரீகாக்ஷம் ப்ரஹ்மராக்ஷஸ முஞ்ச மாம் (15)

“சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து”—என்கிறபடியே ஸர்வேச்வரனைப் பாடிப் பறைகொள்ளப் போகிறவனாயிருக்கிற என்னை விடாயென்றான் காணும்—என்று அருளிச்செய்கிறார்.

ஏவமுக்தஃ ஸ்வபாகேந பலவாந் ப்ரஹ்மராக்ஷஸஃ
அமர்ஷவஶமாபந்நோ நச கிஞ்சித் ததப்ரவீத் (16)

இப்படி நம்பாடுவான் சொன்ன வார்த்தையைக் கேட்டு ப்ரஹ்ம ரக்ஷஸ்ஸானது அதி க்ரூரமாய், வார்த்தையும் சொல்லாதே, உதாஸித்திருந்தது காண்—என்கிறார்.

ஆத்மாநம் ப்ரதி தாவந்தம் சண்டாலோ ப்ரஹ்மராக்ஷஸம்
கிம் த்வயா சேஷ்டிதவ்யம் மே ய ஏவம் பரிதாவஸி (17)

இப்படி கோபாக்ராந்தனாய் மேல் விழுந்து வருகிற ப்ரஹ்மரக்ஷஸ்ஸைப் பார்த்து மீளவும் நம்பாடுவானொரு வார்த்தை சொன்னான். நீ இப்படி என்பேரில் ஓடி வந்து செய்யப் போகிறதென்ன காணும்—என்றான்—என்கிறார்.

ஶ்வபாகவசநம் ஶ்ருத்வா ததோ வை ப்ரஹ்மராக்ஷஸஃ
உவாச வசநம் கோரம் மாநுஷாஹாரலோலுபஃ (18)

அந்த ப்ரஹ்மரக்ஷஸ்ஸானது—நம்பாடுவான் சொன்ன வார்த்தையைக் கேட்டு, தன் பசியாலே மாநுஷமாம்ஸத்தில் விரசையுடைத்தானதாய்க்கொண்டு, இவனைப் பார்த்தொரு க்ரூரமான வார்த்தை சொல்லிற்று காணும்—என்கிறார்.

அத்ய மே தஶராத்ரம் வை நிராஹாரஸ்ய கச்சதஃ
தாத்ரா த்வம் விஹிதோ மஹ்யமாஹாரஃ பரிதோ மம (19)

“நிகரிலவன்புகழ் பாடிப்பிளைப்பிலம்”—என்று நீ பத்து ஸம்வத்ஸரம் பாடி இளைப்பற்றுத் திரிகிறாய்; நான் பத்து நாளுண்டு காண்

16. அதிக்ரூரமாய்—என்பது “அமர்ஷவஶமாபந்ந:” என்பதன் அர்த்தம்.

19. பரிதோ மம—என்பதற்கு வ்யாக்யான மில்லை. அதற்கு சரியான அர்த்தமும் ஏற்பட வில்லை. மற்றைப் புஸ்தகங்களில் கல்பிதோ மம—என்றிருப்பதும் விஹிதோ மஹ்யம்—என்றதால் வ்யர்த்த மாகிறது.

பட்டினியே இளைத்துத் திரிகிறேன். ஆகையாலே, நமக்கு. தைவம் ஆஹாரமாய்க் கல்பித்துவைத்த உன்னை விடுவேனோ—என்று சொல் விற்று காணும்—என்கிறார்.

அத்ய த்வாம் பக்ஷயிஷ்யாமி ஸவஸாமாம்ஸசோணிதம்
தர்பயித்வா யதாந்யாயம் யாஸ்யாமி ச யதேப்ஸிதம் (20)

இப்போ நானுன்னை விடுவதில்லை. உன்னவயவங்களைத் தனித் தனியே பிரித்து, உன் சரீரத்தின் ருதிர மாம்ஸாதிகளைக் கொண்டு தேவதாராதநம் பண்ணி, என்பசியும் தீர்த்துக் கொண்டு எனக்கிஷ்ட மானபடி போவேன் என்று சொல்லிற்று காணும்—என்கிறார்.

ப்ரஹ்மரக்ஷோ வசஃ ச்ருத்வா ச்வபாகோ கீதலாலஸஃ
ராக்ஷஸம் சந்தயாமாஸ மம பக்த்யா வ்யவஸ்திதஃ (21)

இப்படி ப்ரஹ்மரக்ஷஸ்ஸு சொன்ன வார்த்தையைக் கேட்டு, நம் பாடுவான் சரீரஹானி பர்யந்தமான ஆபத்து வந்தவளவிலும் நம்பக் கல் பக்த்யதிசயத்தாலே வ்யவஸ்திதனாய், நமக்குப் பாடவேணுமென் கிற ஆசையாலே அந்த ரக்ஷஸ்ஸை அனுவர்த்தித்து நன்மையான ஒரு வார்த்தை சொன்னான் காணும்—என்று அருளிச்செய்தார்.

ச்ருணு தத்வம் மஹாபாக பக்ஷ்யோஹம் ஸமுபாகதஃ
அவஸ்யமேதத் கர்த்தவ்யம் தாத்ரா தத்தம் யதா தவ (22)

வாராய் மஹாபாகனே! யதார்த்தம் சொல்லுகிறேன். நீ கேள். நீ சொன்னபடியே உனக்கு நான் பக்ஷ்யமாகக் கடவேன். ப்ரஹ்மா கல்பித்தபடி செய்யவேண்டியது எனக்கும் அவச்யம்தான் என்று சொன்னான் காணும் நம்பாடுவான்—என்று அருளிச் செய்தார்.

---

22. நீ சொன்னபடியே உனக்கு நான் பக்ஷ்யமாகக் கடவேன் என்பது "பக்ஷ்யோஹம் ஸமுபாகத:"—என்பதன் அர்த்தம். பிரம்மா கல்பித்தபடி செய்யவேண்டியது எனக்கும் அவஸ்யம்தான்—என்பது "அவஸ்ய மேதத்" —என்னும் உத்தரார்த்தத்தின் வ்யாக்யானம். "தாத்ரா த்வம் விஹிதோ மஹ்ய மாஹார:"—என்ற 19 ம் ஸ்லோகத்தின் உத்தரார்த்தத்துக்கு இந்த உத்தரார்த் தம் அநுவாதமானால், "யதா தவ தாத்ரா தத்தம் - போஜநம், ததைததவஸ்யம் மேகர்த்தவ்யம்.- "பிரம்மா கல்பித்தபடி செய்யவேண்டியது எனக்கும் அவசியம் தான்"—என்று ஸ்லோகத்தையும் வியாக்யானத்தையும் அந்வயித்துக் கொள்ள லாம். அநுவாதமில்லாமல் த்ருஷ்டாந்தமானால், "யதா தவ தாத்ரா தத்தம்—போஜநம், ததா ஏதத் வக்ஷ்யமாணம் வ்ரதம் மமாபி அவஸ்யம் கர்த்தவ்யம்—ப்ரம் மா கல்பித்தபடி - உனக்கு ஆஹாரம் கல்பித்தபடி, எனக்குக் கல்பித்த வ்ரதம் எனக்கும் அவஸ்யம்தான்"—என்றும் அந்வயித்துக் கொள்ளலாம்.

"பஶ்சாத் காதவலி மாம் ரக்ஷா ஜாகரே விநிவர்த்திதே
விஷ்ணோ: ஸந்தோஷணார்த்தாய மமைதத் வ்ரதமுத்தமம்

வாராய் ரக்ஷஸ்ஸே! எனக்கொரு நியமமுண்டு. ஸர்வேச்வரனுடைய ப்ரீத்பர்த்தமாக ஜாகர வ்ரதமென்றொரு வ்ரதமுண்டு. அது முடித்து நான் மீளவும் வருகிறேன். என்னை உனக்கு பக்ஷ்யமாகக் கொள்ளக் கடவாய் என்று சொன்னான் காணும் நம்பாடுவான்—என்கிறார்.

ரக்ஷ மாம் வ்ரதபங்காத் த்வ தேவம் நாராயணம் ப்ரதி
ஜாகரே விநிவ்ருத்தே து மாம் பக்ஷய யதேப்ஸிதம் (24)

பகவானைப் பற்றி நானேறிட்டுக் கொண்ட வ்ரதத்துக்கு பங்கம்

---

23. அது முடித்து—என்பது ஜாகரத்தை முடித்து என்று அர்த்தமாகிறது. தூங்காதிருத்தலை முடிப்பதென்று அர்த்தமில்லை. இவனுக்கு கானம் வ்ரதமா? ஜாகரணம் வ்ரதமா? ஆரம்பத்திலேயே ஜாகரவ்ரத நிஷ்டனாய்க் கொண்டு பாடக்கடவன் என்று வ்யாக்யானிக்கப் பட்டதால் இரண்டும் வ்ரதமாகிறது. இவற்றில் அங்காங்கி பாவம் ஆலோசித்தால், கானம் ப்ரதானமாய் அதற்கு ஜாகரணம் அங்கமாய்த் தோன்றுகிறது. இங்கே கானத்தை முடித்து நான் மீளவும் வருகிறேன் என்று சொல்லாமல் ஜாகரே விநிவர்த்திதே—ஜாகரத்தை முடித்து வருகிறேன் என்று மூலமும் வ்யாக்யானமும் ஒரே விதமாயிருக்கின்றன.

இந்த ஶ்லோகத்திலும் அடுத்த ஶ்லோகத்திலுமுள்ள ஜாகரே விநிவர்த்திதே, ஜாகரே விநிவ்ருத்தேது என்பனவற்றை பட்டரே 31-ம் ஶ்லோகத்தில் "தூராஜ்ஜாகரணம் க்ருத்வா" என்பதை வ்யானிக்கையில் தெளிய வைக்கிறார். அங்கே திருப்பள்ளியுணர்த்தி என்று வ்யாக்யானம். இத்தால் இங்குள்ள ஜாகரம் ஜாகரணம் என்ற பதங்களுக்கு விழித்திருத்தல் என்று அர்த்தமல்ல, விழிக்கச் செய்தல்—என்று அர்த்தம் ஏற்படுகிறது. ஜாகரணமாவது ப்ரபோதனம், ஜாகரவ்ரதமாவது பெருமாளை எழுப்புதல். ஜாகரணவ்ரதமே முக்யமாகி கானம் அங்கமாகிறது.

24. நானேறிட்டுக் கொண்ட—என்பது பட்டரால் சேர்க்கப்பட்டது. பட்டருடைய தமிழை ஸம்ஸ்க்ருதத்தில் எழுதினால்—"தேவம் நாராயண ப்ரதி. மதநுஷ்டேயமாந வ்ரதபங்காத் மாம் ரக்ஷ" என்று மதநுஷ்டேயமாந என்று ஏகதேசாந்வயமாகவே நேரிடும் 'தேவம் நாராயணம் ப்ரதி - தேவம் நாராயண முத்திஶ்ய, மாம் வ்ரதபங்காத் ரக்ஷ"—பகவானுக்காக வ்ரதத்துக்கு பங்கம் வாராமல் நீ என்னை ரக்ஷிக்கவேண்டும்—என்று எளிதாக அன்வயித்து வ்யாக்யானிப்

வாராம்ஸி நீ என்னை ரக்ஷிக்க வேணும். இந்த ஜாகர வ்ரதம் ஸமாப்த மானவாறே உன் மனஸ்ஸுக்கு சரிப்போனபடி என்னை பக்ஷ்யமாகக் கொள்ளக்கடவாய் என்று சொன்னான், காணும் நம்பாடுவான்— என்கிறார்.

ஶ்வபாகஸ்ய வசஃஶ்ருத்வா ப்ரஹ்மரக்ஷஃ க்ஷுதார்திதம்
உவாச மதுரம் வாக்யம் ஶ்வபாகம் ததநந்தரம் (25)

இப்படி நம்பாடுவான் சொன்ன வார்த்தையைக்கேட்டு, பசியாலே இளைத்திருக்கிற ப்ரஹ்மரக்ஷஸ்ஸானது இனிதாக ஒரு வார்த்தை சொல்லிற்று காணும்—என்கிறார்.

மோகம் பாஷஸி சண்டால புநரேஷ்யாம்யஹம் த்விதி
கோ ஹி ரக்ஷோமுகாத் ப்ரஷ்டஸ்தந்முகாயாபிவர்த்ததே (26)

வாராய் சண்டாளா! உன் ஜன்மத்துக் கீடாக இருந்தது நீ சொன்ன வார்த்தை. போய் மீண்டு வருகிறேனென்று நேரோய் அஸத்யமே சொன்னாய். எவனகிலும் பிரம்மரக்ஷஸ்ஸின் கையிலகப்பட்டுத் தப்பித்துக்கொண்டுபோய், மீண்டுவந்து அதன் கையிலகப்படுவனோ என்று சொல்லிற்றென்கிறார்.

பஹவஃ ஸந்தி பந்தாநோ தேசாஶ்ச பஹவஸ்ததா
ஆத்மதேசம் பரித்யஜ்ய பரேஷாம் கந்து மிச்சஸி (27)

இவ்வழியொழிய பலவழிகளுண்டு. இத்தேச மொழிய பல தேசங்களுமுண்டு. உன்னுடைய தேசத்தைவிட்டு தேசாந்தரம் போவதாக நினைக்கிறாயென்று சொல்லிற்று—என்கிறார்.

ஸ்வசரீரவிநாசாய ந சாகச்சதி கஶ்சந
ரக்ஷஸோ முகவிப்ரஷ்டஃ புநராகந்து மிச்சஸி? (28)

தனக்கு சரீரநாசம் பிறக்குமிடமறிந்திருக்கச் செய்தே, அந்த இடத்தைக்குறித்து யாரேனுமொருவர் வருவாருமுண்டோ! ரக்ஷஸ்

---

பதாயிருந்தால், வ்ரதம் நாராயணனுக்காக என்பதைவிட்டு ரக்ஷிப்பதை நாராயணனுக்காச் செய்—என்று ஏற்படும்.

25. இந்த ஶ்லோக வ்யாக்யானம் ஓரோர் புஸ்தகத்தில் வாக்யம் இரட்டித்தும் மாறியுமிருக்கிறது.

26. நேரோய் அஸத்யமே—என்று மோக சப்தத்தை வ்யாக்யானிக்கிறார்.

வின் கையிலகப்பட்டுத் தப்பிப் போய் மீண்டு வருகிறேனென்று நேராக அஸத்யமே சொன்னுப்.

ராக்ஷஸஸ்ய வச꞉ ஶ்ருத்வா சண்டாலோ தர்மஸம்ஶ்ரிதம்
உவாச மதுரம் வாக்யம் ராக்ஷஸம் பிசிதாசநம் (29)

இப்படி இந்த ரக்ஷஸ்ஸு சொன்ன வார்த்தையைக் கேட்டு, நம்பாடுவானும் இந்த ரக்ஷஸ்ஸைப் பார்த்து தர்ம ஸம்யுக்தமாகவும் இனிதாகவும் ஒரு வார்த்தை சொன்னுன் காணும்—என்கிருர்.

யத்யப்யஹம் ஹி சண்டால꞉ பூர்வகர்மவிதூஷித꞉
ப்ராப்தாஹம் மாநுஷம் பாவம் விதிதேநாந்தராத்மநா (30)

பூர்வ கர்ம தோஷத்தாலே இந்த சண்டால ஜன்மத்திலே பிறந்தேனுகிலும், பரமாத்மஜ்ஞாநமுண்டான படியினுலே ஒரு மனுஷ்யனுக்குண்டான ஜ்ஞாநம் எனக்குமுண்டு காண். ஆகையால், என்னுடைய வார்த்தையைக் கேளாய் என்று சொல்லுகிருன் காணும்—என்கிருர்.

ஶ்ருணு தத்ஸமயம் ரக்ஷோ யேநாகச்சாம்யஹம் புந꞉
தூராஜ்ஜாகரணம் க்ருத்வா லோகநாதஸ்ய த்ருப்தயே (31)

த்ரைலோக்ய நாதனை ஸர்வேச்வரனைத் திருப்பள்ளியுணர்த்தி ஸமாப்தவ்ரதனுய்த் திரும்பவும் யாதொருபடி நான் மீளவும் வருவேனே, அதுக்கீடான ப்ரதிஜ்ஞைகளைப் பண்ணிக் கொடுக்கிறேன். அவற்றை நீ கேளாய் என்று சொன்னுன் காணும் நம்பாடுவான்—என்கிருர்.

ஸத்யமூலம் ஜகத் ஸர்வம் லோக꞉ ஸத்யே ப்ரதிஷ்டித꞉
நாஹம் மித்யா ப்ரவக்ஷ்யாமி ஸத்யமேவ வதாம்யஹம் (32)

லோகமுண்டானதும் ஸத்யத்தாலே, லோகம் ப்ரதிஷ்டிதமாய் நின்றதும் ஸத்யத்தாலே. ஆகையால், நான் ஸத்யமே சொல்லுமித்தனை போக்கி, அஸத்ய மொருக்காலும் சொல்லேனென்ருன் காணும்—என்கிருர்.

---

31. திருப்பள்ளியுணர்த்தி—என்பது ஜாகரணம் க்ருத்வா என்பதன் அர்த்தம். இன்று உத்தானத்வாதசியாகையாலே ஸர்வேச்வரனைத் திருப்பள்ளியுணர்த்தும் கைங்கரியத்தில் ஈடுபடுகிறுன் நம்பாடுவான். தூராத்—என்பதற்கு தன் ஜாதிக்கனுகுணமாக தூரத்தில் நின்று என்று பூர்வமே வ்யாக்யாதம்.

யாதொருபடி என்று வாக்யமுள்ள க்ரமத்திலேயே—யேநாகச்சாமி,—யதாஹம் புநராகச்சாமி, தத்ஸமயம் - தாத்ருசம் ஸமயம் கரிஷ்யாமி, தம் ஶ்ருணு—என்று அன்வயித்துக் கொள்ளவேண்டும்.

ஆத்ய மே ஸமயஸ்தத்ர ப்ரஹ்மராக்ஷஸ தம் ஶ்ருணு
சபாமி ஸத்யேந கதோ யத்யஹம் நாகமே புந: (33)

வாராய், ப்ரம்மராக்ஷஸனே! என்னுடைய ப்ரதிக்ஞையைக் கேளாய். யாவனொருவன் ஸர்வகாரணமான ஸத்யத்தைத் தப்புகிறானோ அவன்பாபத்தை அடையக் கடவேன், மீளவும் வந்திலேனாகில்—என்கிறான்.

யோ கச்சேத் பரதாராம்ஶ்ச காமமோஹப்ரபீடித:
தஸ்ய பாபேந லிப்யேயம் யத்யஹம் நாகமே புந: (34)

யாவனொருவன் மன்மத பீடிதனாய்க் கொண்டு பரஸ்த்ரீ கமனம் பண்ணுகிறான், அவன்பாபத்தை அடையக் கடவேன், மீளவும் வந்திலேனாகில்—என்கிறான்.

பாகபேதம் து ய: குர்யாதாத்மநஶ்சோபபுஞ்ஜத:
தஸ்ய பாபேந லிப்யேயம் யத்யஹம் நாகமே புந: (35)

யாவனொருவன் புஜிக்குமிடத்தில் தனக்கும் கூடபுஜிக்கிறவர்களுக்கும் பாகபேதம் பண்ணி புஜிக்கிறான், அவன்பாபத்தை அடையக் கடவேன், மீளவும் வந்திலேனாகில்—என்கிறான்.

தத்வா வை பூமிதாநம் து புநராச்சிந்ததீஹ ய:
தஸ்ய பாபேந லிப்யேயம் யத்யஹம் நாகமே புந: (36)

யாவனொருவன் ஒரு ப்ராம்மணனுக்கு பூமிதானம் பண்ணித் திரும்பவும் அந்த பூமியை அபஹரிக்கிறான், அவன்பாபத்தை அடையக்கடவேன், மீளவும் வந்திலேனாகில்—என்கிறான்.

ஸ்த்ரியம் புக்த்வா ரூபவதீம் புநர்யஸ்தாம் விநிந்ததி
தஸ்ய பாபேந லிப்யேயம் யத்யஹம் நாகமே புந: (37)

யாவனொருவன் ரூபவதியான ஸ்திரீயை யௌவன காலத்தில்

---

33. யாவனொருவன் ஸத்யம் தப்புகிறானோ அவன் பாபத்தை அடையக் கடவேன்—என்று சபாமி ஸத்யேந கத: என்பதை வ்யாக்யானிக்கிறார். ஸத்யேந கத: ய:, தஸ்ய பாபம் லபேய—என்று ஸத்யத்தை ஸப்தம்யந்தமாகக் கொண்டிருக்கிறார்.

34. தஸ்ய பாபேந என்னும் உத்தரார்த்தத்திலுள்ள அஹம் என்பதை லிப்யேயம் என்பதோடு சேர்த்து, ஆகமே யதி ந—என்று அன்வயித்து நஞ்ஞுக்கு அஸதி என்று அர்த்தம் சொல்லவேண்டும்.

அனுபவித்துப் பின்பு, அவளுக்கு தோஷத்தைச் சொல்லி விட்டுவிடு கிறான், அவன் பாபத்தை அடையக் கடவேன், மீளவும் வந்திலே னாகில்—என்கிறான்.

யோமாவாஸ்யாம் விசாலாக்ஷி ஸ்ராத்தம் க்ருத்வா ஸ்த்ரியம்
தஸ்ய பாபேந லிப்யேயம் யத்யஹம் நாகமே புநः [வ்ரஜேத்

யாவனொருவன் அமாவாஸ்யை ச்ராத்தம் பண்ணி ஸ்திரீகமனம் பண்ணுகிறான், அவன்பாபத்தை அடையக்கடவேன், மீளவும் வந்தி லேனாகில்—என்கிறான்.

புக்த்வா பரஸ்யசாந்நாநி யஸ்தம் நிந்ததி நிர்க்ருணः
தஸ்ய பாபேந லிப்யேயம் யத்யஹம் நாகமே புநः (39)

யாவனொருவன் பரனுடைய அன்னத்தை நன்றாக புஜித்து, தயை யில்லாதவனாய்த் திரும்பவும் அவனே தூஷிக்கிறான், அவன்பாபத்தை அடையக்கடவேன், மீளவும் வந்திலேனாகில்—என்கிறான்.

யஸ்து கந்யாம் ததாமீதி புநஸ்தாம் ந ப்ரயச்சதி
தஸ்ய பாபேந லிப்யேயம் யத்யஹம் நாகமே புநः (40)

யாவனொருவன் கன்யையைக் கொடுக்கிறேனென்று சொல்லித் திரும்பவும் கொடாமல் போகிறான், அவன்பாபத்தை அடையக்கட வேன், மீளவும் வந்திலேனாகில்—என்கிறான்.

ஷஷ்ட்யஷ்டம்யோ ரமாவாஸ்யா சதுர்தச்ய்யோஸ்ச நித்யஶः
அஸ்நாதாநாம் கதிம் கச்சே யத்யஹம் நாகமே புநः (41)

யாவனொருவன் ஷஷ்டீ அஷ்டமீ அமாவாஸ்யை சதுர்தசி இந்த திதிகளில் ஸ்நானம் பண்ணாதே புஜிக்கிறானோ, அவன்பாபத்தை அடைந்தேனாகிறேன், மீளவும் வந்திலேனாகில்—என்கிறான்.

தாஸ்யாமீதி ப்ரதிச்ருத்ய நச யஸ்தத் ப்ரயச்சதி
கதிம் தஸ்ய ப்ரபத்யே வை யத்யஹம் நாகமே புநः (42)

யாவனொருவன் ஒருவனுக்கு ஒன்றைக் கொடுக்கிறேனென்று சொல் லித் திரும்பவும் அதைக் கொடாமல் போகிறான், அவன் பாபத்தை அடையக்கடவேன், மீளவும் வந்திலேனாகில்—என்கிறான்.

---

41. புஜிக்கிறானோ—என்ற வியாக்யானத்துக்கேற்ப நித்யஶः என்பதை புஞ்ஜதாம் என்று திருத்தவேண்டும்.

மித்ரபார்யாம் து யோ கச்சேத் காமபாணவசாநுக:
தஸ்ய பாபேந லிப்யேயம் யத்யஹம் நாகமே புந: (43)

மிதாத் த்ராயத இதி மித்ரம்—என்றும் சொல்லுகிறபடியே மஹோபகாரகனான மித்ரனுடைய பார்யையை வசீகரிக்கிறான் யாவனொருவன், அவனுடைய பாபத்தை அநுபவிக்கக்கடவேனாகிறேன், மீளவும் வந்திலேனாகில்—என்கிறான்.

குருபத்நீம் ராஜபத்நீம் ச யே து கச்சந்தி மோஹிதா:
தேஷாம் கதிம் ப்ரபத்யே வை யத்யஹம் நாகமே புந: (44)

யாரொரு பேர்கள் தங்களுக்கு ஆமுஷ்மிக ப்ரதாதாவான ஆசார்யனுடைய பத்நியையும், ஐஹிக ப்ரதாதாவான ராஜாவினுடைய பத்னியையும் காமத்தினாலே அநுபவிக்கிறார்களோ, அவர்கள் பாபத்தை அடையக்கடவேன், மீளவும் வந்திலேனாகில்—என்கிறான்.

யோ வை தாரத்வயம் க்ருத்வா ஏகஸ்யாம் ப்ரீதிமாந் பவேத்
கதிம் தஸ்ய ப்ரபத்யே வை யத்யஹம் நாகமே புந:

யாவனொருவன் இரண்டு ஸ்திரீகளை விவாஹம்பண்ணி, ஒரு ஸ்த்ரீயை உபேக்ஷை பண்ணி மற்றொரு ஸ்த்ரீயை ஸந்தோஷத்தோடே அநுபவிக்கிறான், அவன்பாபத்தை அடையக்கடவேன், மீளவும் வந்திலேனாகில்—என்கிறான்.

அநந்யசரணாம் பார்யாம் யௌவநே ய: பரித்யஜேத்
தஸ்ய பாபேந லிப்யேயம் யத்யஹம் நாகமே புந: (46)

யாவனொருவன் அநந்யகதியாயும் பதிவ்ரதையாயுமிருக்கிற ஸ்த்ரீயை யௌவனத்திலே த்யஜிக்கிறான், அவன்பாபத்தை அடையக்கடவேன், மீளவும் வந்திலேனாகில்—என்கிறான்.

கோகுலஸ்ய த்ருஷார்த்தஸ்ய ஜலார்த்த மபிதாவத:
விக்ந மாசரதே யஸ்து தத்பாபம் ஸ்யாதநாகமே (47)

யாவனொருவன் பஹூதாஹத்தினாலே ரொம்பவும் பீடிதமாய் ஜலபானார்த்தம் வேகத்தோடே ஓடிவருகிற பசுக்கூட்டத்துக்கு ஜலபான விக்னம் பண்ணுகிறான், அவன்பாபத்தை அடையக்கடவேன், மீளவும் வந்திலேனாகில்—என்கிறான்.

ப்ரஹ்மக்நே ச ஸுராபே ச சோரே பக்நவ்ரதே ததா
யா கதிர்விஹிதா ஸத்பிஸ்தத்பாபம் ஸ்யாதநாகமே (48)

யாவனொருவன் ப்ரஹ்மஹத்யை பண்ணுகிறான், யாவனொருவன் மத்யபானம் பண்ணுகிறான், யாவனொருவன் ஸ்வர்ணஸ்தேயம் பண்

னுகிறான், யாவனொருவன் வ்ரதபங்கம் பண்ணுகிறான்—இப்படிப் பட்ட மஹா பதிதர்களுக்குப் பெரியோர்களாலே யாதொருகதி சொல்லப்படுகிறதோ, அப்படிக்கொத்த க்ரூரமான பாபத்தை அடையக் கடவேன், மீளவும் வந்திலேனாகில்—என்கிறான்.

வாஸுதேவம் பரித்யஜ்ய யேந்யம் தேவமுபாஸதே
தேஷாம் கதிம் ப்ரபத்யே வை யத்யஹம் நாகமே புந: (49)

யாதொருபேர்கள் ஆஸ்ரிதஸுலபனாய் ஸர்வவ்யாபியான ஸ்ரீவாஸுதேவனை ஆராதனம் பண்ணாமல் இதர தேவதைகளை உபாஸிக்கிறார்கள், அவர்களுடைய துர்கதியை அடையக்கடவேன், மீளவும் வந்திலேனாகில்—என்கிறான்.

நாராயணமதாந்யைஸ்து தேவைஸ்துல்யம் கரோதி ய:
தஸ்ய பாபேந லிப்யேயம் யத்யஹம் நாகமே புந: (50)

ஸர்வஸ்மாத்பரனாய், ஸர்வாந்தர்யாமியாய், ஸர்வகர்ம ஸமாராத்யனாய், முமுக்ஷூபாஸ்யனாய், மோக்ஷப்ரதனாய், முக்த ப்ராப்யனான ஸர்வேச்வரனையும்—

“ காணிலுமுருப்பிலார் செவிக்கினாத கீர்த்தியார்
பேணிலும் வரந்தரும் மிடுக்கிலாத தேவராய் ”—

கர்மபரவசரான வ்யதிரிக்த தேவதைகளையும் ஸமமாக எண்ணுகிறான் யாவனொருவன், அவனைப்போலே நித்யஸம்ஸாரியாகக்கடவேன், மீளவும் வந்திலேனாகிலென்று—இப்படி சபதங்களைப் பண்ணினான்காணுமென்று நம்பாடுவான்—என்று பூமிப்பிராட்டியைப் பார்த்து ஸ்ரீவராஹநாயனார் அருளிச்செய்தார்.

சண்டால வசநம் ஸ்ருத்வா பரிதுஷ்டஸ்து ராக்ஷஸ:
உவாச மதுரம் வாக்யம் கச்ச சீக்ரம் நமோஸ்து தே (51)

இப்படி ப்ரதிக்ஞை பண்ணின நம்பாடுவானைப் பார்த்து ப்ரஹ்மரக்ஷஸ்ஸானது ஸந்துஷ்டனாய் நமஸ்கரித்து,—இப்படி ப்ரதிக்ஞை பண்ணின நீ கடுகப்போய் வ்ரதத்தைத் தலைகட்டித் திரும்பிவரக் கடவாய்—என்று மதுரமாக வார்த்தை சொல்லிற்று.

---

51. ஸந்துஷ்டனாய் நமஸ்கரித்து—தேவதாந்தரோபாஸனையும் தேவதாந்தர ஸாம்ய புத்தியுமில்லா சுத்தக்ஞானமுள்ளவனுக்கு வணங்கிக் காரியம் செய்யும் படியான வைஷ்ணவத்வத்தை யுடைய ப்ரம்மரக்ஷஸ்ஸு இது. ஆகையாலன்றோ யெல்லா சபதத்தையும் தள்ளிப்போட்டு, இந்த சபதத்தைக் கேட்டவாறே இது நம்பாடுவானை விட்டது.

ராக்ஷஸேந விநிர்முக்தஸ்சண்டாலஃ க்ருதநிஸ்சயஃ
புநர்காயதி மஹ்யம் வை மம பக்த்யா வ்யவஸ்திதஃ (52)

ராக்ஷஸனாலே விடப்பட்ட நம்பாடுவான் ஸம்ஸாரத்திலே நின்றும் முக்தனானவன் வருமாப்போலே வந்து, முன்புபோலே நமக்குப் பாடினான் காணும்—என்கிறார்.

அத ப்ரபாதே விமலே விநிவ்ருத்தேது ஜாகரே
நமோ நாராயணேத்யுக்த்வா ஸ்வபாகஃ புநராகமத் (53)

அநந்தரம் பொழுதுவிடிந்து ஜாகர வ்ரதமும் தலைக்கட்டினவளவிலே, நம்பக்கலிலே ஆத்மஸமர்ப்பணம் பண்ணி, தனக்கு த்யாஜமான சரீரம் கழிகையிலுண்டான ஆசையாலே கடுக மீண்டான் காணும் நம்பாடுவான்—என்றருளிச் செய்கிறார்.

கச்சதஸ்த்வரிதம் தஸ்ய புருஷஃ புரதஃ ஸ்திதஃ
உவாச மதுரம் வாக்யம் ஸ்வபாகம் ததநந்தரம் (54)

நம்பாடுவான் மீண்டு போகிறவளவில் நம்பக்கல் பாட வந்த கடுமையைக்காட்டி லிரட்டித்த கடுமையோடே போகப்புக்கான். இப்படிப் போகிறவன்முன்பே ஒரு புருஷனானவன் வந்துநின்று, நம்பாடுவானைப் பார்த்து, இனிதாக ஒரு வார்த்தை சொன்னான் காணும்.

குதோ கச்சஸி சண்டால த்ருதம் கமநநிஸ்சிதம்
ஏததாசக்ஷ்வ தத்வேந யத்ர தே வர்ததே மநஃ (55)

உன் நடையைப் பார்த்தவாறே முன்புபோலன்றிக்கே அறக்கடுகியிருந்தது! நீ இப்படி எங்கேறப் போகிறது? இதை எனக்கு உண்மையாகச் சொல்லவேணு மென்றான்—அந்தப் புருஷன்.

தஸ்ய தத் வசநம் ஸ்ருத்வா ஸ்வபாகஃ ஸத்யஸம்மதஃ
உவாச மதுரம் வாக்யம் புருஷம் ததநந்தரம் (56)

ஸத்யப்ரதிஜ்ஞனான நம்பாடுவான் அந்தப் புருஷன் வார்த்தையைக்கேட்டு, அவனைப்பார்த்து மதுரமாக ஒரு வார்த்தை சொன்னான் காணும்—என்கிறார்.

---

52. முன்புபோலே நமக்குப் பாடினான்—புநர்காயதி மஹ்யம் வை. பத்து ஸம்வத்ஸரம் பாடினதுபோலே இந்த ஸம்வத்ஸரமும் வந்து பாடினான்.

53. ஆத்மஸமர்ப்பணம் பண்ணி என்பது நமோநாராயணேத் யுக்த்வா என்பதன் அர்த்தம்.

54. நம் பக்கல்...இரட்டித்த கடுமையோடே என்பது த்வரித சப்தார்த்தம்.

55. த்ருதம் கமநநிஸ்சிதம்—கமநே நிஸ்சிதம் தே த்ருதம்.

ஸமயோ மே க்ருதோ யத்ர ப்ரஹ்மராக்ஷஸஸந்நிதௌ
தத்ராஹம் கந்துமிச்சாமி யத்ராஸௌ ப்ரஹ்மராக்ஷஸ: (57)

ப்ரம்மராக்ஷஸ்ஸின் முன்பே சபதங்களைப்பண்ணிப் போந்தேன். அந்த ப்ரதிக்ஞை தப்பாமல் யாதொரு விடத்திலே ப்ரம்மராக்ஷஸன் நின்றான் அங்கேறப்போகிறேன். முன்பு நின்றவிடத்தில் கண்டிலேனாகில், அவன் நின்றவிடந்தேடிப் போகக்கடவேனென்கிறான் நம்பாடுவான்—என்றருளிச் செய்கிறார்.

ஶ்வபாகவசநம் ஶ்ருத்வா புருஷோ பாவசோதக:
உவாச மதுரம் வாக்யம் ஶ்வபாகம் ததநந்தரம் (58)

இப்படி நம்பாடுவான் சொன்ன வார்த்தையைக்கேட்டு, அந்தப் புருஷன் இவனுடைய மனஸ்ஸை சோதிக்கைக்காக ஒரு மதுரமான வார்த்தை சொன்னான் காணும்—என்கிறார்.

ந தத்ர கச்ச சண்டால மார்கேணாநேந ஸுவ்ரத
தத்ராஸௌ ராக்ஷஸ: பாப: பிஶிதாஶீ துராஸத: (59)

அங்கே ஜாத்யா ராக்ஷஸனுமாய், அதிலே விபீஷணனைப்போலே தார்மிகனாயிருக்கை யன்றிக்கே பாபிஷ்டனுமாய், அதிலே சரீரம் கொண்டு தப்பிப்போகை யன்றிக்கே மாம்ஸ பக்ஷகனுமாய், அவனைக் கொன்றுபோக வொண்ணாதபடி பலவானுமா யிருப்பான் ஒருத்தன். அங்கு நீ போகக்கடவை யல்லை காண்—என்று நம்பாடுவானைப்பார்த்து இவன் மனஸ்ஸை சோதிக்க வார்த்தை சொன்னான் காணு மந்தப் புருஷன்.

புருஷஸ்ய வச: ஶ்ருத்வா ஶ்வபாக: ஸத்யஸங்கர:
மரணம் தத்ர நிஶ்சித்ய மதுரம் வாக்ய மப்ரவீத் (60)

அந்தப் புருஷன் சொன்ன வார்த்தையைக்கேட்டு ஸத்யவாதியான நம்பாடுவான் ஸத்யத்தை விடுவதைக் காட்டிலும், ப்ராணனை விடுவதே ச்ரேஷ்டமாக நினைத்து, மதுரமாக ஒரு வார்த்தை சொன்னான்காணு மென்கிறார்.

---

57. முன்பு நின்றவிடத்தில் கண்டிலேனாகில் அவன் நின்ற. விடம்தேடி —யத்ராஸௌ ப்ரம்மராக்ஷஸ:

59. ராக்ஷஸ:, பாப:, பிசிதாசீ, துராஸத: நாலுபதங்களுக்கு மொழிபெயர்ப்பாயும் வ்யாக்யானமுமாயிருக்கும்படி ஜாத்யா ராக்ஷஸனுமாய் இத்யாதி இருக்கும் ரஸம் அனுபவிக்கத்தக்கது.

நாஹமேவம் கரிஷ்யாமி யந்மாம் த்வம் பரிப்ருச்சஸி ..

அஹம் ஸத்யே ப்ரவ்ருத்தோ வை சீலம் ஸத்யே ப்ரதிஷ்டிதம்

வாராய் புருஷனே! நான் அது செய்வதில்லை. நான் ஸத்யம் தப்பாதேயிருப்பவன். நான் ஸத்யத்தைத் தப்பினாலும், என் ஸ்வபாவம் ஸத்யத்தைத் தப்பாதுகாண்—என்றான்காணும் நம்பாடுவான்.

ததஃ ஸ பத்மபத்ராக்ஷஃ ஸ்வபாகம் ப்ரத்யுவாச ஹ

யத்யேவம் நிஸ்சயஸ்தாத ஸ்வஸ்தி தேஸ்து கமிஷ்யதஃ (62)

இப்படிச் சொன்ன நம்பாடுவானைப்பார்த்து அந்தப் புருஷனும்—இவன் ப்ராணனைவிட்டும் ஸத்யத்தை ரக்ஷிக்கக் கடவேனென்று சொன்னபடியாலே ப்ரியப்பட்டு—"அமலங்களாக விழிக்கும்"—என்று சொல்லுகிறபடியே நம்பாடுவானைப் பாடவரக் காட்டின ப்ரம்மரக்ஷஸ்ஸினுடைய ஆபத்தும் நம்பாடுவானுடைய ஆபத்தும் போகும்படி பூர்ணகடாக்ஷம் பண்ணி—"உனக்கு மங்கள முண்டாகக் கடவது, போகாய்."—என்று அனுப்பினான் காணும். அந்தப் புருஷன் யாரோ என்று ஸந்தேஹியாதே,

மஹாவராஹஃ ஸ்புடபத்மலோசநஃ— என்றும்

புருஷஃ புஷ்கரேக்ஷணஃ— என்றும்

சொல்லுகிறபடியே இருவரு மொருவராகக் கொள்ளீரென்று அருளிச் செய்கிறார்.

ப்ரஹ்மரக்ஷோந்திகம் ப்ராப்ய ஸத்யேஸௌ க்ருதநிஸ்சயஃ

உவாச மதுரம் வாக்யம் ராக்ஷஸம் பிசிதாஸநம் (63)

அந்தப் புருஷன் விடைகொடுக்க, நம்பாடுவானும் அந்த ப்ரம்ம ரக்ஷஸ்ஸு இருக்கிற இடம் தேடிச்சென்று ரக்ஷஸ்ஸைக் கிட்டி இனிதாக ஒரு வார்த்தை சொன்னான்.

பவதா ஸமநுக்ஞாதோ காநம் க்ருத்வா யதேப்ஸயா

விஷ்ணவே லோகநாதாய மம பூர்ணோ மநோரதஃ

ஏதாநி மம சாங்காநி பக்ஷயஸ்வ யதேச்சயா (64½)

வாராய் ப்ரம்மரக்ஷஸ்ஸே! நீ அநுக்ஞை பண்ணிப்போன நான் ப்ராம்மணனுக்ஞைபெற்றுப் போனவனுகையாலே எனக்கு, வேண்டியபடி ஸர்வேஸ்வரனாய் மஹாவிஷ்ணுவான ஸ்ரீ அழகியநம்பியைப்

62. பாடவரக்காட்டின—பகவத் ஸன்னிதியில் பாட வரும்படியாகக் காட்டின. அல்லது அங்கே பாடி இங்கே வரக்காட்டின.

பாடி உகப்பித்துப் பூர்ணமனோரதனானேன். நீயும் என் சரீரத்தில் ருதிரமாம்ஸாதிகளைக் கொண்டு பூர்ணமனோரதனாகா யென்றான் நம்பாடுவான்.

ஸ்வபாகவசநம் ஸ்ருத்வா ப்ரஹ்மரக்ஷா பயாநகம்
உவாச மதுரம் வாக்யம் ஸ்வபாகம் ஸம்சிதவ்ரதம் (65½)

அத்யந்தம் பயங்கரமா யிருக்கிற ப்ரம்மரக்ஷஸ்ஸானது நம்பாடுவான் வார்த்தையைக் கேட்டு, நம்பாடுவானைப் பார்த்து மதுரமாக ஒரு வார்த்தை சொல்லிற்று

த்வமத்ய ராத்ரௌ சண்டால விஷ்ணோர்ஜாகரணம் ப்ரதி
பலம் கீதஸ்ய மே தேஹி ஜீவிதம் யதிசேச்சஸி (66½)

வாராய் மஹாநுபாவனே! ப்ராணனை விடுவதாக வந்த உனக்கு ப்ராணனோடே போகவேண்டி யிருக்கில், இன்றிரவு ஸர்வேச்வரனுக்குப் பாடின பாட்டின் பலத்தைத் தந்து உன் ப்ராணனோடே போகா யென்றான் அந்த ராக்ஷஸன்

ப்ரஹ்மரக்ஷா வச: ஸ்ருத்வா ஸ்வபாக: புநரப்ரவீத் (67½)

இப்படி ப்ரம்மரக்ஷஸ்ஸின் வார்த்தையைக் கேட்டு நம்பாடுவானும் மற்றொரு வார்த்தை சொன்னான்.

யத் த்வயா பாஷிதம் பூர்வம் மயா ஸத்யஞ்ச யத் க்ருதம்
பக்ஷயஸ்வ யதேச்சம் மாம் தத்யாம் கீதபலம் நது (68)

நீ முன்பு சொன்னாப்போலே நானும் தப்பாமல் செய்ததால் நீயுமப்படியே என்னுடைய சரீரத்தை பக்ஷிக்குமத்தனைபோக்கி, நான் கீதபலத்தைத் தருவதில்லை என்றான் நம்பாடுவான்.

சண்டாலஸ்ய வச: ஸ்ருத்வா ஹேதுயுக்த மநந்தரம்
உவாச மதுரம் வாக்யம் சண்டாலம் ப்ரஹ்மராக்ஷஸ: (69)

ராக்ஷஸனானவன் நம்பாடுவான் காரணத்துடன் சொன்ன வார்த்தையைக் கேட்டு மறுபடியும் இனிதாக ஒரு வார்த்தை சொன்னான்.

அர்தவார்த்தம் து மே தேஹி புண்யம் கீதஸ்ய யத் பலம்
ததோ மோக்ஷ்யாமி கல்யாண பக்ஷா தஸ்மாத் விபீஷணாத்

கீதபலமெல்லாம் தராவிடிலும், கீதபலத்தில் பாதியாகிலும் தந்து, பயங்ரமான பக்ஷணத்தில் நின்றும் தப்பிப்போனாலாகாதோ மஹாநுபாவனே!—என்று சொல்லிற்றுகாணு மென்கிறார்.

ப்ரஹ்மரக்ஷோ வச: ஶ்ருத்வா ஶ்வபாக: ஸம்ஶிதவ்ரத:
வாணீம் ஶ்லக்ஷ்ணாம் ஸமாதாய ப்ரஹ்மராக்ஷஸமப்ரவீத் (71)

ப்ரம்மராக்ஷஸ்ஸின் வார்த்தையைக்கேட்டு நம்பாடுவானும் இனிதாக ஒரு வார்த்தை சொன்னான்.

பக்ஷயாமீதி ஸம்ஶ்ருத்ய கீதமந்யத் கிமிச்சஸி? (71½)

உன்னுடைய சரீரத்தை பக்ஷிக்கக் கடவேனென்று அறுதியிட்ட நீ கீதார்த பலத்தைக் கேட்கிறாய்; அதுவும் தருவதில்லை—என்றறுதியிட்டான் நம்பாடுவான்.

ஶ்வபாகஸ்ய வச: ஶ்ருத்வா ப்ரஹ்மரக்ஷோ பயாவஹம்
உவாச மதுரம் வாக்யம் ஶ்வபாகம் ஸம்ஶிதவ்ரதம் (72½)

ஏகயாமஸ்ய மே தேஹி புண்யம் கீதஸ்ய யத் பலம்
ததோ யாஸ்யஸி கல்யாண ஸங்கமம் புத்ரதாரகை: (73½)

அநந்தரம் க்ரூரக்ருத்யனான ப்ரஹ்மராக்ஷஸனும் நம்பாடுவானைப் பார்த்து! ஒரு யாமத்தில் பாடின பாட்டின் பலமாகிலும் தந்து, உன் புத்ரதாராதிகளோடே கூடக்கடவாய்—என்றான்.

ஶ்ருத்வா ராக்ஷஸவாக்யானி சண்டாலோ கீதலாலஸ:
உவாச மதுரம் வாக்யம் ராக்ஷஸம் க்ருதநிஶ்சய: (74½)

இப்படிச்சொன்ன ரக்ஷஸ்ஸின் வார்த்தையைக் கேட்டு த்ருடவ்ரதனாய் தீரனுமிருக்கிற நம்பாடுவானும் ரக்ஷஸ்ஸைப் பார்த்து இனிதாக ஒரு வார்த்தை சொன்னான்.

ந யாமஸ்ய பலம் தத்யாம் ப்ரஹ்மரக்ஷஸ்தவேப்ஸிதம்
பிபஸ்வ ஶோணிதம் மஹ்யம் யத் த்வயா பூர்வ பாஷிதம்

வாராய் ரக்ஷஸ்ஸே! ஒரு யாமத்தில் பாடின பலமும் தருவதில்லை. என்னிடத்தில் பாட்டுக்குப்போலே ராகமுண்டாயிருக்கிற என்னு

73½. ஒரு யாமத்தில் - ஏகயாமஸ்ய என்றதாலே ராத்திரிமுழுவதும் பாடினான் என்று ஏற்படுகிறது.

75½. பாட்டுக்கு ராகம்போலே—ராகம் ஸ்வபாவம்போல ரக்தத்துக்கு சிவப்பு ஸ்வபாவம் என்று தாத்பர்யம். ராகத்தையுடைய பாட்டுபோல சிவப்பையுடைய ரக்தம். நான் ராகமுள்ள பாட்டிலே ப்ரியமுள்ளவன்; நீ சிவப்புள்ள ரக்தத்தில்

டைய ரக்தத்தைப் பானம் பண்ணுமத்தனை போக்கி, நான் பாடல் பலம் தருவதில்லை—என்றான் நம்பாடுவான்.

ஶ்வபாகஸ்ய வச:ஶ்ருத்வா ராக்ஷஸ: பிசிதாசந:
ஸத்யவந்தம் குணக்ஞம் ச சண்டாலமிதமப்ரவீத் (76½)

இப்படி நம்பாடுவான் சொன்ன வார்த்தையைக் கேட்டு, இவன் உயிரை மாறிக் கொடுத்தும் ஸத்யம் தப்பாமல் நின்றவனாகையாலும், ப்ராணனிற் காட்டிலும் பாட்டினுடைய வைபவத்தை யறிந்தவனாகையாலும், இவன் ஸர்வத்தினுடைய வைஷம்யத்தையு மறியுமென்றறுதியிட்டு ப்ரம்ம ராக்ஷஸன் நம்பாடுவானைப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னான்.

ஏகம் கீதஸ்ய மே தேஹி யத் த்வயா விஷ்ணுஸம்ஸதி
நிக்ரஹாத் தாரயாஸ்மாத்வை தேந கீதபலேந மாம்
ஏவமுக்த்வாது சண்டாலம் ராக்ஷஸ: ஶரணம் கத: (78)

வாராய் மஹானுபாவனே! இன்று நீ விஷ்ணு ஸன்னிதியில் பாடின பாட்டில் ஒரு பாட்டின் பலத்தையாகிலும் கொடுத்து, என்னை இந்த ராக்ஷஸ ஜன்மத்தில் நின்றும் உத்தரிப்பிக்கவேணுமென்று சொல்லி, ரக்ஷஸ்ஸு நம்பாடுவானை சரணம் புகுந்தது காணுமென்கிறார்.

ஶ்ருத்வா ராக்ஷஸ வாக்யாநி ஶ்வபாக: ஸம்சிதவ்ரத:
உவாச மதுரம் வாக்யம் ராக்ஷஸ பிசிதாசநம் (79)

இப்படி வெகுவிதமாக ப்ரார்த்தித்துச் சொன்ன ரக்ஷஸ்ஸின் வார்த்தைகளை ஸத்யப்ரதிக்ஞனான நம்பாடுவான் கேட்டு, ரக்ஷஸ்ஸைப் பார்த்து மதுரமாக ஒரு வார்த்தை சொன்னான் காணுமென்கிறார்.

---

ப்ரியமுள்ளவன். ஆகையால், உனக்குப்பாட்டுவேண்டாம். எனக்கு என் ரக்தம் வேண்டாம்—என்று இப்படி ரஸமான அர்த்தம் கிடைக்கும்படியாக ராக ஶப்தத்தை ப்ரயோகித்தார் பட்டர்.

76½. இவனுயிரை மாறி - என்றது முதல் ஸர்வத்தினுடைய வைஷம்யத்தையுமறியும்—என்றுமளவாக ஸத்யவந்தம் குணக்ஞம் ச என்ற இரண்டு பதங்களின் அர்த்தம்.

கிம் த்வயா துஷ்க்ருதம் கர்ம க்ருதபூர்வம் து ராக்ஷஸ
கர்மணோ யஸ்ய தோஷேண ராக்ஷஸீம் யோநிமாஸ்ரிதஃ (80)

இப்படி சரணாகதனான ரக்ஷஸ்ஸைப் பார்த்து நீ ராக்ஷஸயோனியில் பிறக்கைக்கு என்ன பாபத்தைப் பண்ணினாயென்று கேட்டான் நம்பாடுவான்.

ஏவமுக்தஃ ஸ்வபாகேந பூர்வவ்ருத்தமநுஸ்மரந்
ராக்ஷஸஃ ஸரணம் கத்வா ஸ்வபாகமிதமப்ரவீத் (81)

இந்தப்படிக்கு நம்பாடுவானாலே கேட்கப்பட்டதாய் பூர்வவ்ருத்த ஸ்மரணம் வந்த ரக்ஷஸ்ஸானது நம்பாடுவானை சரணாகதி பண்ணி ஒரு வார்த்தை சொல்லிற்று காணுமென்கிறார்.

நாம்நா வை ஸோமசர்மாஹம் சரகோ ப்ரஹ்மயோநிஜஃ
ஸூத்ரமந்த்ரபரிப்ரஷ்டோ யூபகர்மண்யதிஷ்டிதஃ (82)

வாராய் மஹானுபாவனே! பூர்வஜன்மத்திலே நான் ஸோமசர்மா என்றொரு ப்ராம்மணனாய் சரககோத்ரோத்பவனாய்ப் பிறந்து, ஸூத்ர மந்த்ர பரிப்ரஷ்டனாய் யாகம் பணணவேணுமென்று உபக்ரமித்தேன் —என்று சொல்லிற்று காணு மென்கிறார்.

ததோஹம் காரயே யஜ்ஞம் லோபமோஹ ப்ரபீடிதஃ
யஜ்ஞே ப்ரவர்த்தமாநே து சூலதோஷஸ்த்வஜாயத (83)

அர்த்தலோப மோஹத்தினாலே யஜ்ஞம் பண்ணினேன். அந்த யஜ்ஞத்திலே மஹத்தான சூலதோஷம் முண்டாச்சுதென்று சொல்லிற்று காணு மென்கிறார்.

அத பஞ்சமராத்ரே து அஸமாப்தே க்ரதாவஹம்
அக்ருத்வா வியலம் கர்ம ததஃ பஞ்சத்வ மாகதஃ (84)

யஜ்ஞம் தொடங்கி அஞ்சு நாளான பிற்பாடு யாகஸமாப்தி யாகாம லிருக்கச்செய்தே நான் மரணத்தை யடைந்தேன்—என்றது காண் என்கிறார்.

---

83. அர்த்தலோபமோஹத்தாலே யஜ்ஞம் பண்ணுவதால் - அர்த்தலோப மாகிற அஜ்ஞானம். அர்த்தம் ஸம்பாதிக்க வேண்டுமென்ற அஜ்ஞானம். அர்த்தம் செலவிடுவதற்கான யாகமில்லை. அர்த்தத்தை ஆர்ஜிப்பதற்காக யாகம் செய்வது.

தஸ்ய யக்ஞஸ்ய தோஷேண மாதங்க ஶ்ருணு யந்மம
ஜாதோஸ்மி ராக்ஷஸஸ்தத்ர ப்ராஹ்மணோ ப்ரஹ்மராக்ஷஸ:

வாராய் மஹானுபாவனே! கேள். அந்த யாக தோஷத்தினாலே நான் ப்ரம்மரக்ஷஸ்ஸாக வந்துபிறந்தேன்—என்றான்காணுமென்கிறார்.

ஏவம்து யக்ஞதோஷேண வபு: ப்ராப்தமிதம் மயா
இத்யுக்த்வா து ததா ரக்ஷ: ஶ்வபாகம் ஶரணம் கதம் (86)

இந்தப்படி யக்ஞதோஷத்தினாலே இப்படிப்பட்ட ரக்ஷஃஸ் ஶரீரத்தை அடைந்தேனென்று சொல்லி நம்பாடுவானை சரண மடைந்தது காணுமென்கிறார்.

ப்ரஹ்மரக்ஷோ வச: ஶ்ருத்வா ஶ்வபாக: ஸம்ஶிதவ்ரத:
பாடமித்யப்ரவீத் வாக்யம் ப்ரஹ்மராக்ஷஸசோதித: (87)

நாம் விபீஷணனுக்கு முன்பு அபயப்ரதானம் பண்ணினாப்போலே நம்பாடுவானும் சரணாகதமான ரக்ஷஸ்ஸுக்கு பாடமென்று அபயப்ரதானம் பண்ணினான்காணு மென்கிறார்.

யந்மயா பஶ்சிமம் கீதம் ஸ்வரம் கைசிக முத்தமம்
பலேந தஸ்ய பத்ரம் தே மோக்ஷயிஷ்யாமி கில்பிஷாத் (88)

இன்று ராத்திரி கைசிகமென்றொரு பண் பாடினேன். அந்த கீத பலத்தினால் இந்த ராக்ஷஸ ஜன்மத்தினின்றும் விடுபட்டு மோக்ஷத்தை யடையக்கடவாய் என்று அபயப்ரதானம் பண்ணினான் காணும்—நம்பாடுவான்.

## ஶ்ரீவராஹ உவாச—

யஸ்து காயதி பக்த்யா வை கைசிகம் மம ஸம்ஸதி
ஸ தாரயதி துர்காணி ஶ்வபாகோ ராக்ஷஸம் யதா (89)

யாவனொருவன் பக்தியோடேகூட நம்முடைய ஸன்னிதியில் வந்து கைசிகமென்கிற பண்ணைப்பாடுகிறான், அவன்ப்ரம்ம ரக்ஷஸ்ஸை

85. ஶ்ருணு யந் மம - யந் மம ப்ராப்தம் தச் ச்ருணு.

87. விபீஷணாபயப்ரதாநம் செய்த ராமாவதாரம் வராஹாவதாரத்துக்குப் பின்பானாலும், நம்பாடுவான் பண்ணின அபயப்ரதானத்தை சக்ரவர்த்தித் திருமகன் பண்ணின அபயப்ரதானம்போல நினைப்பது பட்டருடைய ஈடுபாடு.

88. கைசிகமென்றொரு பண்—உத்தானத்தில் கைசிககானம் பண்ண வேண்டுமென்று ஶ்ரீபாஞ்சராத்ர அநிருத்த ஸம்ஹிதையில் விதி இருக்கிறது

உத்தரிப்பித்த நம்பாடுவானைப்போலே தன்னை யாச்ரயித்தவர்களை உத்தரிப்பிப்பான்—என்று ஸ்ரீவராஹநாயனார் பூமிப்பிராட்டியைப் பார்த்து அருளிச்செய்தார்.

ஏவம் தத்ர வரம் க்ருஹ்ய ராக்ஷஸோ ப்ரஹ்மஸம்ஸ்தித:
ஜாதஸ்து விமலே வம்சே மமலோகஞ்ச கச்சதி (90)

இப்படி நம்பாடுவான் பக்கலிலே வரம்பெற்ற அந்த ரக்ஷஸ்ஸு அந்த சரீரத்தைவிட்டு நல்ல வம்சத்திலே நம்முடைய பக்தனாய்ப் பிறந்து, நமக்குப் பல்லாண்டு பாடி நம் பெரியவீடு பெற்றான்காணு மென்று நாச்சியாரைப்பார்த்து அருளிச்செய்தார்.

ஶ்வபாகஶ்சாபி ஸுஶ்ரோணி மம கைவோபகாயக:
க்ருத்வாது விமலம் கர்ம ஸ ப்ரஹ்மத்வமுபாகத: (91)

பின்பு நம்பாடுவானும் நெடுங்காலம் நம்முடைய வைபவத்தைப் பாடி நம் பெரிய வீடு பெற்றான் காணுமென்று அருளிச்செய்தார்.

ஏதத் கீதபலம் தேவி கௌமுத்த்வாதசீம் புந:
யஸ்து காயதி ஸ ஸ்ரீமாந் மம லோகஞ்ச கச்சதி (92)

நமக்குப் பாடுவான் பெறும் பேறு சொல்லுகிறோம்—யாவனொருவன் கார்த்திகை மாஸத்து சுக்லபக்ஷ த்வாதசி யன்றையதினம் நம்முடைய ஸந்நிதிமுன்பே வந்து இந்த கைசிக மாஹாத்மியத்தை வாசிக்கிறான், யாவனொருவன் கேட்கிறான்— அவர்களும் "சூழ்ந்திருந் தேத்துவர் பல்லாண்டே" என்றும் "ஏதத் ஸாமகாயந் நாஸ்தே"—என்றும் சொல்லுகிறபடியே நமக்குப் பல்லாண்டுபாடிக்கொண்டு ஆத்மாநுபவம் பண்ணிக்கொண்டிருப்பார்கள் காணும்—என்று நாச்சியாரைப் பார்த்துப் பெருமாள் அருளிச்செய்தார். இப்படி யருளிச்செய்த

---

பெருமாளை எழுப்பும் சாஸ்திரமும் எழுப்புவதற்கு கைசிக கானம் பண்ண வேண்டும்—என்ற விதியும் அறிந்தவனன்றோ நம்பாடுவான்.! பஶ்சிமம் உத்தமம் - உத்தமமான அந்த ராகத்தைப் பஶ்சிமம் பகவான் எழுந்திருக்கும் ப்ராம்ம முஹூர்த்தத்திலே பாடினான்.

89. "யஸ்து காயதி"—என்னும் ஶ்லோகத்தில் [illegible] கானத்தை விதித்து அதற்கு வார்த்தையும் கொடுக்கிறார்.

92. ஏதத் கீதபலம்—என்னும் ஶ்லோகத்தினால் [illegible] மாஹாத்மிய படனத்தை விதித்து ; அதற்கு வார்த்தையும் கொடுக்கிறார்.

வார்த்தையைக்கேட்டு, நாச்சியாரும் ப்ரளயார்ணவத்திலுண்டான இளைப்பெல்லாம் தீர்ந்து இக்கானரூபமா யிருப்பபதொரு உபாய வைபவ மிருந்தபடியென்—என்று க்ருதார்த்தை யானாள்.

இதி ஸ்ரீவராஹபுராணே பூமிவராஹஸம்வாதே
கைசிக மாஹாத்ம்யம் நாம அஷ்டசத்வாரிம்சோத்யாயஃ

பட்டர் திருவடிகளே சரணம்.

* * * * *

"ஸ்திதே மநஸி ஸுஸ்வஸ்தே சரீரே ஸதி யோ நர:
தாது ஸாம்யே ஸ்திதே ஸ்மர்த்தா விஸ்வரூபஞ்ச மாமஜம்"—

ஸ்திதே மநஸீத்யாதி—

"இதிஹாஸ புராணப்யாம் வேதம் ஸமுபப்ரும்ஹயேத்
பிபேத்யல்ப ஸ்ருதாத் வேதோ மாமயம் ப்ரதரிஷ்யதி"

என்கிறபடியே வேதோபப்ரும்ஹணார்த்தமாக ப்ரவ்ருத்தங்களான புராணங்களில் ஸங்கீர்ண ராஜஸ தாமஸ புராணங்களுக்குக் காரணதோஷமும், பாதக ப்ரத்யயமு மூண்டானபடியாலே, இவற்றை ஆதரிக்குமவர்கள்—

"இலிங்கத்திட்ட புராணத்தீரும் சமணரும் சாக்கியரும்
மலிந்து வாது செய்வீர்களும்"—

என்று வேதபாஹ்யகோடியிலே கோப்புண்டார்கள்.

ஸாத்விக புராணங்களுக்குக் காரண்தோஷமும் பாதக ப்ரத்யயமுமில்லாதபடியாலும், வைதிக பரிக்ரஹ ப்ராசுர்யத்தாலும், இவையே உபப்ரும்ஹணங்களில் உபாதேயதமங்கள்.

இவைதன்னில் ஸ்ரீவராஹ புராணம்—

"பாசுதூர்த்துக் கிடந்த பார்மகட்குப் பண்டொருநாள்
மாசுடம்பில் நீர்வாரா மானமிலாப் பன்றியாம்
தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனார்
பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே"

என்கிறபடியே ஒன்றும் சலிப்பிக்க வொண்ணாதபடி தத்வஹித புருஷார்த்தங்களில் ஸுப்ரதிஷ்டிதமா யிருக்கும்.

இதுக்கு வக்த்ரு வைலக்ஷண்யத்தாலும் ஸ்ரோத்ரு வைலக்ஷண்யத்தாலும் அதிசய முண்டு. வக்த்ரு வைலக்ஷண்ய மேதென்னில்?—இதுக்கு வக்தாவான் ஞானப்பிரான் ப்ரம விப்ரலம்ப ப்ரமாத அஶக்தி ஸம்பாவனையையுடைய க்ஷேத்ரக்ஞரைப்போலன்றிக்கே ஸ்வதஸ் ஸர்வக்ஞனாகையாலே, இவனுக்கு ப்ரமமும் ப்ரமாத[illegible] ப்ரத்யுபகாராதி நிரபேக்ஷ பரமகாருணிகனாகையாலே, ஆ[illegible]திறத்தில் இவனுக்கு விப்ரலம்பத்வம் கிடையாது.

"ஸர்வக்ஞஸ் ஸர்வக்ருத் ஸர்வசக்திர் ஞான பல[illegible]த்திமாந்"—

இத்யாதிகளிற்படியே ஸர்வசக்தி யாகையாலே, இவனுக்கு அசக்தி ப்ரஸங்கமு மில்லை.

இவ் வவதாரத்துக்கு இவன்தன்னுடைய அவஸ்தாந்தரங்களிலுங் காட்டில் ஏற்றமுண்டு. எங்ஙனே யென்னில்—இவ் வவதார மொரு வழியாலே கரையேறினவர்களைக் கூட்டிக்கொண்டிருக்கிற வளவேயான ரூபம்போலன்றிக்கே, அழுந்தினவர்களைக் கரையாதபடி யெடுத்துக் கரையேற விடும்படியா யிருக்கும்.

வ்யூஹங்களைப்போலே பக்தரானவர்கள் ஆச்ரயிக்க மேலான நிலத்திலிருக்கை யன்றிக்கே, "பார்வண்ணமடமங்கை பத்தர்"—என்கிற படியே ஆச்ரிதர்பக்கல் தன் பக்தி தோன்ற "கேழலாய்க் கீழ்ப்புக் கிடந்திடும்" என்கிறபடியே அவர்களிருந்த கீழ் நிலத்திலும் சென்று, "தடம்பெருந் தோளாரத் தழுவும்"—என்னும்படியா யிருக்கும்.

மத்ஸ்யாவதாரம்போலே—தான் பெற்ற ப்ரஜைகள் உலாவித் திரியுமளவிலே க்ஷணமாத்ரத்தாலே ரக்ஷிக்குமள வன்றிக்கே, இங்கே பிரஜைகள் நினைக்கவுமாட்டாதே காஷ்டபாஷாண ஸங்நிபராய் விழுந்து கிடக்கிறவளவிலே அவர்களுங் கடைத்த நினைவைத் தான் அநுஷ்டித்து ரக்ஷிக்கிறான் என்னும்படிக்கு தன் பாசுரமே யுண்டு.

கூர்மாவதாரம்போலே—ஒரு பூதரம் ப்ரமிக்கைக்கு அதிஷ்டானமாய் நிற்கையன்றிக்கே, இதுதான் பூதாமுமாய் பூமியும் பூதரங்களும் கலங்காதே "ஊன்றிபிடத் தெயிற்றில் கொண்டவன்று தானத்தவே"—என்னும்படி நிலைநிற்கப் பண்ணுமதா யிருந்தது.

ஸ்ரீந்ருஸிம்ஹாவதாரம்போலே—தட்டுப்பட்ட , தொன்றையும் பிளக்குமதன்றிக்கே இது பூமி யெல்லாம் தட்டுப்படாதபடி "அத்ரும் ஹத்" என்கிறபடியே யிருக்கப்பண்ணுமதா யிருந்தது.

ஸ்ரீவாமநாவதாரம்போலே—பொல்லாக் குறளுருவாய் பொற்கையில் நீரேற்று, தன்னுடைய பூமியைப் பிறர்க்குக் கொடுக்கை யன்றிக்கே, இது மஹாபலியான அஸுரனை நிராகரித்துத் தன் பூமியைத் தானே கைக்கொண்ட அவதாரமா யிருக்கும்.

விரோதி நிராகரணத்துக்கு மழுவேந்த வேண்டும் பரசுராமாவதாரம்போ[illegible]றிக்கே,—இவ் வவதாரத்தில் விரோதி நிராகரணத்துக்கு [illegible] ஸாக்ஷியாம்படி யிருந்தது.

சக்ர[illegible]குத் திருமகனார் அவதாரம்போலே—பூமியிலுள்ள சராசரங்களைத் த[illegible]பதத்திலே ஏற்றுமளவன்றிக்கே, இது பூமிகன்னைத் தோளிலே ஏற்றும் அவதாரமா யிருந்தது.

பல்யத்ராவதாரம்போலே—பூமிக்கு க்ஷதியைப் பண்ணுவதொரு வந்தேறியான உபகரணத்தைத் தன் கையிலே கொண்டிருக்கை யன்றிக்கே, இது பூமிக்கு க்ஷதிவாராதபடி எடுக்கும் ஸஹஜமான முக்யோபகரணத்தை யுடையதா யிருக்கும்.

"சிஷ்யஸ்தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம்" என்றவனுக்கு உபதேசிக்கத் தொடங்கி, கர்மயோகாதிகளிலே அதிகரித்துக் கடையா யிருப்பதொரு ஶ்லோகத்திலே பரமஹிதத்தைக் காட்டின க்ருஷ்ணாவதாரம் போலன்றிக்கே,—இது "அஹம் சிஷ்யாச தாஸீ ச பக்தாச த்வயி மாதவ" என்றார்க்கு ஆரம்பத்திலே மூழ்கி மணங்கொண்டு உபதேசிக்கும்படியா யிருந்தது.

"கற்கியா மின்னம்"—என்னும்படி பாவ்யுபகாரமான கல்க்யவதாரம்போ லன்றிக்கே—இது பூதோபகாரமுண்டான அவதாரமா யிருந்தது.

ஆகையால், இப்புராண ப்ரவர்த்தகமான இவ் வவதாரத்துக்கு மானமில்லாதாற்போலே உபமானமு[1] மில்லை. இவ்வவதாரத்தை மந்வாதி பரமாப்தபரிகணனையிலே தர்மசாஸ்த்ர ப்ரவர்த்தகர்கள் தாங்களே சேர்த்தார்கள்.

இப்படி வக்த்ரு வைலக்ஷண்யத்தாலே இப்புராணம் உத்க்ருஷ்டம்.

ச்ரோத்ரு வைலக்ஷண்யத்தாலும் இது ஸர்வோத்க்ருஷ்டம். எங்ஙனே யென்னில்—பூமிப்பிராட்டியை ஜகத்துக்கு "ஈஸாநா"—என்று ஶ்ருதி சொல்லுகையாலே, சேதனசேதன ரூபமான ஜகத்திற் காட்டில் இவளுடைய உத்கர்ஷம் ப்ரஸித்தம்.

"க்ருதாகஸ: க்ஷாம்யதி கேசவம் ச்ரிதா
ந கிஞ்சநாம்ஸ்தாந் கமலா கடாக்ஷயேத்
நச ப்ரஸஹ்ய ப்ரதிஷேதஸீதியத்
க்ஷமா த்வமேவோர்வி ஸஹஸ்வ மாமபி"—

என்கிறபடியே ஸர்வம்ஸஹையான இவளுக்கு ஸர்வேஶ்வரனைக் காட்டிலும், பெரியபிராட்டியாரைக் காட்டிலும், க்ஷமாதிகுண பூயஸ்தை யுண்டா யிருந்தது. இப்படியானால், இவளுக்குத் தங்களைக்காட்டில் ஏற்றத்தை ஸூரிகள் தாங்களே அறிவார்கள்.

ஆகையால்,—கர்மவச்யரானவர்கள் ஸ்வகார்ய[illegible] கேட்க, உறவில்லாத க்ஷேத்ரஜ்ஞர் உபதேசிக்க, ப்ரவ்ருத்தங்[illegible] புராணாந்தரங்கள் போலன்றிக்கே,—ஸர்வலோகஜநனியான[illegible]ள் ஜகத்திதமாகக் கேட்க, "பிதாஸி லோகஸ்ய சாரசரஸ்ய"—என்கிறபடியே

ஸர்வலோக பிதாவானவன் அருளிச்செய்ய ப்ரவ்ருத்தமான புராண மாலையாலே, இது எல்லாத்திலும் அதிகம்.

"ஸர்வேஷாமேவ தர்மாணாமுத்தமோ வைஷ்ணவோ விதி:" என்று மஹாபாரதத்தில் சொன்ன விசேஷ தர்மப்ராசுர்யத்தாலும் இது ஸர்வோத்க்ருஷ்டம். இது முமுக்ஷுக்களுக்கு ஸாக்ஷாத்வா பரம்பரயாவா மோக்ஷோபாயமாக விஹிதங்களான ஸம்மார்ஜந, உபலேபந, சூர்ணசித்ர, மாலாகரண, தீபாரோபண, ஹவிர்நிவேதந, நந்தவநகரண, விமாந நிர்மாண, ப்ரதக்ஷிண, ப்ரணாம, கதாச்ரவண, ஸ்துதி, ஸங்கீர்த்தந, குணகதந, கீத, ந்ருத்த, தாரண, த்யாநாதி விசேஷ தர்மங்கள் தன்னில் ஸர்வாதிகாரமுமாய் ஸுகரமுமாய் ஸ்வாதுமான உபாயவிசேஷத்தை ப்ரதிபாதிக்கிற இப்ப்ரகரணம் உஜ்ஜீவ்யதமம். இவ்வுபாய விசேஷம்—

"ஸா ஹி ஸர்வத்ர ஸர்வேஷாம் ஸர்வகாமபலப்ரதா"

"தாவதார்த்திஸ்ததா வாஞ்சா"—

இத்யாதிகளிற்படியே யதாதிகாரம் மோக்ஷ ததுபாயாதிகளை ஸாதிக்க வற்றாயிருக்கும்.

இத்தை பூமிப்பிராட்டி ஸ்வாபாவிக ஸார்வஜ்ஞ்யத்தாலே அறிந்திருக்கச் செய்தே—ப்ரஜாஹிதார்த்தமாக மாதா கேட்க, ஸர்வ பூதஸுஹ்ருத்தான பிதா அருளிச்செய்த வார்த்தையென்று ப்ரஸித்தமாகவேண்டுமெனத் திருவுள்ளம்பற்றி,—அஜ்ஞருமாய் "அசக்தருமான அதிகாரிகளுக்கு குரூபாயத்தை விதித்தால், இது குருவியின் கழுத்திலே கட்டின பனங்காய்போலேயாம்; இவர்களுக்கு விஹிதமான அந்திம ப்ரத்யயமும் மரணாவஸ்தையில் மநஸ்ஸு ப்ராப்த விஷயத்தில் ப்ரதிஷ்டிதமாகமாட்டாதபடியாலே, ஸ்வ யத்நத்தால் ஸாதிக்கப்போகாது; ஆனபின்பு ஸ்வரூப பரிகராதிகளால் சுமையற்றதொரு லகூபாயத்தை அருளிச் செய்யவேண்டும்"—என்று விண்ணப்பஞ் செய்ய,—ஸித்தோபாய பூதராய் ஸர்வஜ்ஞருமான ஸ்ரீவராஹநாயனார் தம்முடைய வசீகரணார்த்தமாக ஸாத்யமான ஞானயஜ்ஞஸாரத்தை இவ்வளவிலே ப்ரஸன்னராய் ஜன்மஜன்மாந்தரம் காத்து அடியார்களைக் கொண்டுபோய், தன்மை பெறுத்தி, தன் தாளிணைக்கீழ் கொள்ளும்[illegible] "ஸ்திதே மநஸி"—என்று தொடங்கி இரண்டு ச்லோக[illegible] அருளிச்செய்கிறார்.

* * * * *

---